கலை
இலக்கிய
மாத
சஞ்சிகை


258

வைகாசி
01.05.2025

100/-

# ஜீவநதி

பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்



ஈழக்கவி/ சிவகலை சிவப்பிரகாசம்/ ஐங்கரன் விக்கினேஸ்வரா/ ந.இரவீந்திரன்/
சிவ.ஆரூரன்/ திக்குவல்லை கமால்/ செல்வமனோகரி/ கந்தர்மடம் அ.அஜந்தன்/
பாஸ்கரன் சுமன்/ ஜி.ஏ.கௌதம்/ ஷெல்லிதாசன்/ தேவமுகுந்தன்/ பிரேமா இரவிச்சந்திரன்/
இ.சு.முரளிதரன்/ கோகிலா மகேந்திரன்/ தமிழ்க்கவி / கனிவுமதி

கலை இலக்கிய மாத சஞ்சிகை
2025 - வைகாசி (01.05.2025)

# பொருளடக்கம்

சிறுகதைகள்
சிவ.ஆரூரன் – 10
திக்குவல்லைகமால் – 24

கவிதைகள்
செல்வமனோகரி – 17
கந்தர்மடம் அ. அஜந்தன் – 26
பாஸ்கரன் சுமன் – 29
ஜி.ஏ.கௌதம் – 35
ஷெல்லிதாசன் – 40




கொமிக்ஸ் தொடர்
இ.சு.முரளிதரன் – 220

நூல் விமர்சனம்
பிரேமா இரவிச்சந்திரன் – 27




பாடல் விமர்சனம்
தேவமுகுந்தன் – 17

தொடர் நாவல்
தமிழ்க்கவி – 36

உள் ஓவியங்கள்
கனிவுமதி

கட்டுரைகள்

**என்.ஆத்மாவின் என் பிரிய காதலே, பிசாசே!**
ஈழக்கவி - 03



**எழுத்தாளர் குரு அரவிந்தனின் சிறுகதைகள் பற்றிய ஓர் ஆய்வு**
சிவகலை சிவப்பிரகாசம் - 13

**யாழ்ப்பாணத்தில் உதயமான ஈழநாடு ஊடகத்தில் பிரகாசித்த எஸ்.கே.காசிலிங்கம்**
ஐங்கரன் விக்கினேஸ்வரா - 22



**நேற்றில் கரைந்தோடும் இன்றிலிருந்து - 5**
ந.இரவீந்திரன் – 30

**முடிவைத்தொடுவாய் முயன்று - 17**
கோகிலா மகேந்திரன் – 35

# ஜீவநதி

**2025 வைகாசி இதழ் – 258**

**பிரதம ஆசிரியர்**
க.பரணீதரன்

**துணை ஆசிரியர்கள்**
வெற்றிவேல் துஷ்யந்தன்
ப.விஷ்ணுவர்த்தினி

**ஆசீர்வதிப்பவர்**
கலாநிதி த.கலாமணி

**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.

**ஆலோசகர் :**
திரு.கி.நடராஜா
தில்லைநாதன் கோபிநாத்

**தொலைபேசி** : 0775991949
0212262225

**E-mail** : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
Commercial Bank, Nelliady
A/C - 8108021808 - CCEYLKLY



இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.



ஜீவநதி சந்தா விபரம்

தனிப்பிரதி – 100/= ஆண்டுச்சந்தா – 3000/=
வெளிநாடு – $ 100U.S
மணியோடரை
அல்வாய் தபால் நிலையத்தில்
மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி
**K .Bharaneetharan,**
**Kalaiaham ,**
**Alvai North west, Alvai.**
வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்
K.Bharaneetharan Commercial Bank - Nelliady Branch
A/C No.- 8108021808 CCEYLKLY


# ஜீவநதி

**(கலை இலக்கிய மாத சஞ்சிகை)**

அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
– பாரதிதாசன்–

## சிறையில் பூத்த நூல்கள்

தமிழ் மக்களுக்கான விடிவிற்காய் ஆரம்பிக்கப்பட்ட ஈழப்போராட்டம் எம்மவர்களுக்கு ஏற்படுத்திய துயரங்கள் சாதாரண வார்த்தைகளில் விபரித்து விடமுடியாதவை. கண்ணீர் நிறைந்த இரத்தம்படிந்த காவியங்கள் எம் கதைகள். குறிப்பாக 2009 ஆம் ஆண்டிற்கு பின்னர் வருகின்ற ஒவ்வொரு வைகாசி மாதமும் எம்மவர்களுக்கு இருள் சூழ்ந்த சோகம் படிந்த மாதமாகவே கருதத்தக்கது. எத்தனை இழப்புகள், எத்தனை வேதனைகள். நினைத்தாலே மனசு வெம்மி வெடிக்கின்றது. இந்த போராட்ட காலத்தில் எம்மவர் பலர் சிறைப் பிடிக்கப்பட்டு அவர்களது வாழ்வுகள் சூனியமாக்கப்பட்டன. ஆனால் எல்லாவற்றையும் எதிர் கொண்டு எதிர் நீச்சல் போடக்கூடிய இனம் நாம், எந்நிலையிலும் ஏதோவொன்றை இவ்வுலகுக்கு கொடுத்துச் செல்வோம் என்ற துணிச்சலோடு பல சாதனைக் காரியங்கள் சிறைக்குள்ளிருந்தும் நடை பெற்றுள்ளன. குறிப்பாக 15 ஆண்டுகளாக சிறைவாசம் அனுபவித்த பொறியியலாளர் சிவ.ஆரூரன் அவர்கள் சிறையில் இருந்து கொண்டு எமக்கு 10 நூல்களை வழங்கி இருந்தார். அவை விருதுகளும் பாராட்டுகளும் பெற்றமை நாம் அனைவரும் அறிந்ததே. அதே போல இந்தியாவில் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறை வைக்கப்பட்ட எம்மவரான மதி.சாந்தன் அவர்களும் பல்வேறு படைப்புகளை சிறைக்குள்ளிருந்து கொண்டு எழுதியுள்ளார். குறிப்பாக கடந்த ஆண்டு மார்கழியில் அவரால் எழுதப்பட்ட “ஹேமாலி” என்ற அருமையான நாவல் ஜீவநதி வெளியீடாக வெளிவந்துள்ளது. அதனை விட அவர் ஹைக்கூக்கவிதைகள், சிறுவர் கதைகள் தொகுப்பு, சிறை அனுபவங்கள், போராட்டக் கதைகள் என பலதை எழுதியுள்ளார். அவை இந்தியாவில் வெளியிடப்பட்டு விற்பனை செய்யப்பட்டபோதிலும் அவற்றை காணவே முடியாத நிலை எமக்கு இருந்தது. தற்போது அவரது சகோதரர் பிரபல ஈழத்து சினிமாவின் நம்பிக்கை நட்சத்திரமான மதி.சுதா அவர்கள் மதி.சாந்தனின் 5 நூல்களை வெளியிட்டு பெரும் சாதனை புரிந்து மதி. சாந்தனின் ஆத்மாவுக்கும் ஓர் ஆறுதலை அளித்துள்ளார். அருமையான நூல்களாக அவை அமைந்துள்ளன. அவற்றை வாங்கி வாசித்து அவர்களை ஊக்குவிப்பதோடு, அவரது மேலதிக படைப்புகளும் நூலுருப்பெற ஒத்துழைப்பு நல்க வேண்டியது எமது கடமையாகும். எங்களுக்காக அவர் பல ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்து கொடுமையான மரணத்தை எய்திய உன்னத ஆத்மா, அவர்களுக்கு நன்றிக் கடனாக அவர்களது படைப்புகளை வாழ வைக்கவாவது உதவுவோம். குறைகளை மட்டும் கூறி எம்மவர்களை வஞ்சித்து ஒதுக்கி வைக்காது அவர்களிடம் காணப்பட்ட நல்ல இயல்புகளுக்கும் தேச பக்திக்கும் முன்னுரிமை அளிப்போம்.

– க.பரணீதரன்


ஜீவநதி கிடைக்கும் இடங்கள் / விற்பனையில்உதவும் நல்லுள்ளங்கள்
பரணீ புத்தகக்கூடம் – நெல்லியடி
புத்தகக் கூடம் – திருநெல்வேலி
பூபாலசிங்கம் – யாழ்ப்பாணம்
பூபாலசிங்கம் – செட்டித்தெரு, கொழும்பு
அ.யேசுராசா, நா.நவராஜ், சி.ரமேஷ், கந்தர்மடம் அ.அஜந்தன், புத்தகப்பண்பாட்டுப் பேரவை

ஈழக்கவி

# என். ஆத்மாவின்
# என் பிரிய காதலே, பிசாசே!

*1*

நான்
போன போது

அவன் ஊரைத்தின்று
தண்ணீர் குடித்துக்கொண்டிருந்தான்

அவனது வீடு
சொர்க்கமாய் மாறிவருவதைப்
பார்த்தவாறு காத்திருந்தேன்

அவன் இந்திரனாகி
கடலை அமுதமாக்கி குடித்தான்

கவர்ப்பு ஊட்டும்
ஆற்றையும் குடித்தான்

தைஇத் திங்கள்
தண்கயத்தையும் குடித்தான்

பள்ளிப் பாப்பாவின்
புத்தகப் பையிலிருந்த
தண்ணீரையும் குடித்தான்

குடிலுக்குள் இருந்த
குடிநீரையும் குடித்தான்

பச்சைக் குழந்தையின்
பாலுக்காக வைத்திருந்த
கொதித்தாறிய நீரையும் குடித்தான்

மண்ணுக்கு மேலால்
மண்ணுக்கு கீழால் உள்ள
அத்தனை நீரையும்
தேடித்தேடி குடித்தான்

நான் உள்ளே எட்டிப்பார்த்தபோது
மழைக் குமிழிகளை
விழுங்கிக் கொண்டிருந்தான்

நான் அவனுடன் பேச முனைகையில்
துப்பாக்கிகளிரண்டு பேசின



"சேறு பூசிப் பூசியே
பொய் பேசிப் பேசியே
தாகித்துப் போன தலைவர்
தாகம் தீர்க்க ஆரம்பித்திருக்கிறார்
அடுத்த தேர்தல் வரும் வரையில்"
என்றவாறு
துப்பாக்கிகள் முறைத்தன
பயத்தினால் நான் வெளியே வந்தேன்
நீர் இல்லா ஊர் தெரிந்தது

"நீரில்ல ஊர்" என்ற என்னுடைய அரசியல் கவிதையில் தாகம் ஒரு குறியீடாக அமைந்துள்ளது. இக்கவிதை பற்றி பேராசிரியர் எம்.எஸ்.எம்.அனஸ் அவர்கள் பின்வருமாறு எழுதியிருந்தார். ஏழைகளுக்கான நிவாரணம், அகதிகளுக்கான வெளிநாட்டு உதவி, பால்மா, பள்ளிக்கூட நிதி, பாதைக்கு ஒதுக்கப்பட்ட பணம் எல்லாவற்றையும் உறிஞ்சிக்குடிக்கும் தீராத தாகமுள்ள ஹொப்ஸின் (Thomas Hobbes) "லெவியாதனை"(Leviathan)ப் போல் ஒரு அமானுஷ்ய விலங்கு போல் இக்கவிதையில் அரசியல்வாதி சித்திரிக்கப்பட்டுள்ளான். பொதுவாக இலங்கைச் சூழலில் யுத்த கவிதைகள் இருக்கின்றன. ஆனால்

அரசியல் கவிதைகள் பலம் வாய்ந்தனவாக இல்லை. பயமும் ஏன் நேர்மையீனமுமே இதற்குக் காரணமாக இருக்கலாம். பத்திரிகைகளும் பிரசுரிக்கப் பயப்படலாம். ஆனால் கவிஞனுக்கும் கலைஞனுக்கும் பல வழிகள் உள்ளன. பயத்திற்கு மத்தியில் மாறுவேடம் தாங்கி உணர்ச்சி யூட்டிய உலகப் படைப்புக்கள், காவியங்கள் பல உள்ளன. கவிஞனுக்குள்ள பெரிய வாய்ப்பு அது. எதிர்ப்புக்களைக் சம்பாதிக்காதவாறு உண்மை கூறும் உத்தியிலிருந்து இக்கவிதை ஆரம்பமாகிறது. சொல்லத் தயங்கும் மக்களின் உணர்வுகளை வெளியே கொண்டுவர கலைஞனுக்கும் ஒரு பொறுப்புள்ளது.

"நான் போன போது
அவன் ஊரைத் தின்று
தண்ணீர் குடித்துக் கொண்டிருந்தான்."

என்ற தொடக்க வரிகளிலேயே சொல்ல வேண்டியவை சொல்லப்பட்டாயிற்று. இளங்கவிஞர்கள் கவனிக்க வேண்டிய கலை நுட்பமாக இதைக்கொள்ள வேண்டும்" ("இரவின் மழையில்" 2013: முன்னுரை).

2

சலிக்கவில்லை நீ எனக்கு.
என்மீது பரிவுகாட்டிப் பரிவுகாட்டி
நீயும் அலுத்துப்போகாதே.

நீர்க்குடுவை
நீர்க்கலயம்
தாகம் தீர்க்கும் இக்கலன்கள் யாவும்
சோர்ந்து போயிருக்கும் நிச்சயம் என்னால்,

தாகங்கொண்ட மீனொன்று
என்னுள் இருக்கிறது.
ஒருபோதும் கூடவில்லை அதற்கு
முழுத்தாகமும் தணிக்க.

கடலுக்கு வழி எது?
காட்டுங்கள் அதை எனக்கு!
உடைத்தெறியுங்கள்.
இச்சிறு குவளைகளை
அளந்து ஊற்றும் வீண் எத்தனங்களை.

மெய்யியல் (ரூமி என்றாலே மெய்யியல் (Philosophy) என்று அர்த்தம்) ஞானியும் பாரசீக கவிஞருமான ரூமி (ஜலாலுத்தீன் முகம்மது பல்கி 1207 செப்டம்பர் 30 1273 டிசம்பர் 16) இன் "தாகங்கொண்ட மீனொன்று" என்ற நீண்ட கவிதையின் தொடக்க வரிகள் இவை. இக் கவிதைக்கு தாகமே (தாகங்கொண்ட மீன்) குறியீடாக அமைந்துள்ளது. அது உயிரின் மூலாதாரத்தின் குறியீடு. பெருங்கடலால் மட்டுமே மீனின் தாகம் தணிக்கமுடியும். ஞானநிலையே அக்கடல். அதை நோக்கிய பயணத்திற்காக மீன் துடிக்கிறது.

3

கவிதை என்பதே தீராத தாகம் கொண்டது தான். என். ஆத்மாவின் "என் பிரிய காதலே, பிசாசே" என்ற காதல் கவிதைக்கும் தாகமே குறியீடாகியுள்ளது. முதல் வாசிப்பிலேயே இக்கவிதை என் உணர்வுக்குள் தொற்றி விட, அதன் லயிப்பில் உறையத்தொடங்கிவிட்டேன். பிரிதலின் பித்துநிலை கவித்துவமான சொல்லாடலாக உணர்வில் விரிய, ஒரு அழியா குறும்படத்தினை ஆக்கியிருக்கிறார் ஆத்மா. காதலின் தீராத தாகத்தினை/ தவிப்பினை மிகத் தீவிரமாக வெளிப்படுத்தும் இக்கவிவரிகளையும் காட்சிகளையும் எனக்கானதாக உணர்ந்ததன் விளைவே இந்த நுண்ணிய பகுப்பாய்வு.

மூன்று வருடங்களுக்கு முன் மருத்துவ தேவை ஒன்றிற்காக கண்டி "சுவ செவன" தனியார் வைத்திய சாலையில் ஓரிரவு தங்கியிருந்தேன். தனித்திருந்த அன்றிரா ஆத்மாவின் "என் பிரிய காதலே, பிசாசே" என்ற கவிதை ஞாபகமாகிக்கொண்டிருந்தது. தொண்ணூறு களின் நடுப்பகுதியில் படித்த இக்கவிதை இப்போ மனத் திரையில் காட்சியாக காரணமென்னவோ? "சுவசெவன" பற்றிய சொல்லாடல் கவிதைக்குள் இருப்பதாலா? மனமு வந்து இக்கவிதையை வாசித்ததாலா? நெட்டுருவாக இருந்த வரிகளை திரும்பத்திரும்ப மீட்டுதல் போதுமான தாக இல்லாமையால், இணைய தேடலின் மூலம் முழுக்கவிதையையும் வாசித்தேன்.

சிறிதுநேரம் விண்ணில் ஒளிவட்டமிடும் நிலாவை கண்ணிமைக்காமல் பார்க்க வேண்டும். இரண்டொரு நிமிடம் சென்ற பின்பு நிலா கண்ணுக்குள் ஊறிப்போய் வெளிச்சம் பொங்கி வழிய ஆரம்பிக்கும் கண்களில் ஈரப்பசைகூட ஏற்படலாம். இனி கண்களை இறுக்க மூட வேண்டும். கண்ணுக்குள் இருக்கும் இருட்டில் நிலா தெரியும். அப்படித்தான் கவிதைகளும். ஒரு கவிதையை ஆழ்மனதில் நுகர்ந்து வாசித்தபின் மூடி சிந்தனை செய்தால் அந்த கவிதையின் உள்ளொளி உதயமாக வேண்டும். ஆங்கிலக் கவி ஜோன் கீட்ஸ் (1795-1821) இன் காதல் கவிதைகள் அத்தகையவை என்று சொல்லப்படுவ துண்டு. "என் பிரிய காதலே, பிசாசே" கவிதையின் உள் ளொளியும் இரவெல்லாம் எனக்குள் உதயமாகிக் கொண்டிருந்தது. இதுதான் அந்த கவிதை:

அப்படியே நான் குப்புறக் கிடக்க
கிடையாகவும் நிலைக்குத்தாகவும்
என் வாய் அகன்று விரிகிறது.
களமும் சம விகிதத்தில் நெடுகவும் விரிய
நாற்பது போகாத குழந்தை ஒன்று
கை தவறி உள் விழுந்தால்
நேராகக் கத்திப்பாட்டில் போய்
இரைப்பைச் சாற்றில் கிடந்து மிதக்கக் கூடியபடி
எல்லாம் இப்போது நன்கு விரிந்துள்ளன.

விஞ்ஞானம் கிறுக்குத் தனமாய் உளறுவது போல்
வெறும் ஆறு போத்தல் பச்சைத் தண்ணீரில்
அவ்வளவு இலேசாய் ஆறிவிடக் கூடியதல்லாத
கொடிய அம்மாபெருந் தாகம்
மெது மெதுவாய்த் தலையெடுக்கிறதென்னுள்.
ஒன்பது
மற்றும் வருங்காலத்தில் கண்டு பிடிக்கப்படவுள்ள
கிரகங்கள் அனைத்தினது சமுத்திரங்களையும்
குடித்து விழுங்கி முடிப்பினும்
அடங்கக் கூடியதல்லாத அதி தாகம்.

இருந்திருந்து அவ்வப்போது இவ்
வேதனை மிகும் உணர்வென்னுள் கிளர்கிறது.

நொந்து பச்சைப் புண்ணாக நோகும்
வெப்பங் கணலுமிவ் வுடலை
நீவ
இளநாவல் நிறம் பூசிய அந் நக விரல்களை
“சுவ செவன“ ஹொஸ்பிட்டலில் என் தோளோடு
சாய்ந்து உரசி நின்ற மார்புகளை
கொழும்பு போகும் இன்டசிட்டி பஸ்ஸில்
என் மடியில் பரவி உலைந்திருந்த
கூந்தலையும் திசுக் கன்னங்களையும்
அவாவிப் பெருகுகிறது இத் தாகம்.

95 ஏப்ரலின்
2ம் 3ம் பத்து பதினான்கு நாட்களில்
கழிந்த அப் புகார் போர்த்திய மென்
பொழுதுகளில்
ஜுவாலித்து வளர்ந்த பெருந் தீயிது.
எக் கடல்களை ஊற்றி இப்
பேய் நெருப்புக் கிடங்கினை அணைப்பேன் நான்.
உலகத்தின் அத்தனை நதிகளே
ஆறுகளே
சின்னச் சின்னக் குட்டைகளே
இன்று எங்காகினும் மழை பெய்திருந்தால்
யாராவது மோசமான கொன்ட்ரக்ட்காரன்
போட்ட சாலைகளின் பள்ளங்களில்
தேங்கியுள நீர்களே
அனைவரும் திரளாகிப் பெருகி வந்திவ்
அதி மனிதனின் தாகம் தனைத் தணிக்குக...

நானும்
குறித்தளவு வாயில்லா ஜீவன்களும் மட்டுமே
கிடந்துழலும் இவ்வறையில்
பிரியாத இருளில்
எதையாகினும் அள்ளி அள்ளி
இவ் இரைப்பையுள்
ஊற்றித் தணிப்போமென முயனினும்
அள்ள அள்ள என் எல்லாக் கைகளினதும்
நக நுனி வரை அகப்படுவன வெல்லாம்
78% நைதரசன்
21% ஒட்சிசன்
0.04% காபனீரொட்சைட்
மற்றும் இதர சடத்துவ வாயுக்களுமே.

அண்ணளவாக அல்ல. மிகத்
துல்லியமாகவே இவ்வறையுள்
பசிய மஞ்சளாயும்
வெள்ளையாயும்
சிறு சிறு தட்டு வடிவ இலைகளாலும்மலர்களாலும்
பூரித்துப் பொலிந்து நின்று சிலிர்த்தும்
திருக்கொன்றைப் பூமரம் அவள்
இல்லவே இலையென்பது உறுதியாயிருந்தும்
ஏமாந்து ஏமாந்து என் கைகளும் நானும்
சிறு பிள்ளையாய் காற்றையும் வளியையும்
வெற்றிடங்களையும் அள்ளித் தழுவி
அளைந்து அலைந்து தேடித் துழாவி
பாயையும் தலையணை களையும்
எங்கோ தொலைத்து
குளிரும் தரையில் உழத்தி உழத்தி.

இடுப்பின் கீழே சாறன் வழுவி
குலைந்து நவீன சித்திரம் போல் கிடக்கும்
எனைப் பார்த்துக் காலையில்
தேநீர் கொணர்ந்து உசுப்பும் உம்மா
சொல்லிப் போவா
“மூத்த தம்பி ராவெல்லாம்
கெட்ட கெட்ட கனவுகள் கண்டு
என்ன உழத்துவ உழத்தியிருக்கான்” என்று.
என் உயிர் வெந்து உருகி
கண்களினோரம் கன்னங்களிலே
சிந்தி
உறைந்து ஒளிரும் நீர்ப் படலங்களை அவ
கூர்ந்து பார்த்தாவா என்ன?

எளிமையான நேர்கோட்டுத்தன்மையுடன் வாசகனுடன் உரையாடும்/ வாசகனுக்கு தெரிவிக்கும் தொனியில் தனிமையின் அதிர்வுகள் கவிதையாக ஷரூபம் கொண்டுள்ளன. ஆத்மாவின் அலாதியான வெளிப்பாட்டு நுட்பமும் துல்லியமும் இக்கவிதைக்கு ஒளியூட்டி யுள்ளது. கவிதைசொல்லியின் உணர்ச்சி வடிந்த குரல் எம் உணர்வுக்குள் உறைகின்றது. கவிதையின் அழகியல் புனைவின்றி ஒளிரத்தக்க பெருங்காட்சியாகவும் கண் கூடான செயற்பாடாகவும் திகழ்கிறது. பேச்சு மொழி கவிதைக்கான மொழியாக கூர்மையடைந்திருக்கிறது. தன்மொழியினூடாக ஆத்மா தன் கவிமொழியை கண்டடைந்துள்ளார். கவித்துவ மனவெழுச்சியின் பாற்பட்டதாக இன்றி இக்கவிதை மனக் கிளர்ச்சியின்ஃ கொந்தளிப்பின் வெளிப்பாடாக பிரவகித்துள்ளது. உயிர் பொறுக்கவொண்ணாத காதலின் தாகத்தினைஃ தாபத்தினை நுரைத்துத் ததும்பும் கெமரா மொழியில் வடித்துள்ளார்.

இளநாவல் நிறம் பூசிய அந் நக விரல்களை “சுவ செவன” ஹொஸ்பிட்டலில் தோளோடு சாய்ந்து உரசி நின்ற மார்புகளை கொழும்பு போகும் இன்டசிட்டி பஸ்ஸில் மடியில் பரவி உலைந்திருந்த கூந்தலையும் திசுக் கன்னங்களையும் அவாவிப் பெருகுகிற அத் தாகம், “கொடிய மாபெருந்தாகமாக”. “ஒன்பது மற்றும் வருங் காலத்தில் கண்டு பிடிக்கப்படவுள்ள கிரகங்கள் அனைத்தினது சமுத்திரங்களையும் குடித்து விழுங்கி முடிப்பினும் அடங்கக் கூடியதல்லாத அதி தாகமாக“, “நொந்து பச்சைப் புண்ணாக நோகும் வெம்பங் கணலுமிவ் வுடலை நீவு”கிறது.

95 ஏப்ரலின் 2ம் 3ம் பத்து பதினான்கு நாட்களில் கழிந்த அப் புகார் போர்த்திய மென் பொழுதுகளில் ஜுவாலித்து வளர்ந்த பெருந் தீயிது. எக் கடல்களை ஊற்றி இப் பேய் நெருப்புக் கிடங்கினை அணைப்பது? உலகத்தின் அத்தனை நதிகளே ஆறுகளே சின்னச் சின்னக் குட்டைகளே இன்று எங்காகினும் மழை பெய்திருந்தால் யாராவது மோசமான கொன்ட்ரக்ட்காரன் போட்ட சாலைகளின் பள்ளங்களில் தேங்கியுள நீர்களே அனைவரும் திரளாகிப் பெருகி வந்திவ் அதி மனிதனின் தாகம் தனைத் தணிக்கச்” சொல்கிறார் கவிதைசொல்லி. காதலின்/ பிரிதலின் பித்துநிலைக்குள் தனக்குள் தானே முயங்கி தாகித்து, வெந்து. நொந்து உழலுவதையே

ஸ்தூலத்தன்மையுடன் ஆத்மா உணர்வுகளை உசுப்பும் கவிமொழியில் காட்சிப்படுத்தியுள்ளார்.

கவிதையின் ஈற்றுப் பகுதிகளில் காட்சிப் படிமங்கள் பேச்சோசையோடு வெளிக்கொணரப் பட்டுள்ள நுட்பம் நுண்மையானது. ஆத்மா அறிந்திருக் கிற திரைப்பட காட்சி நுட்பங்கள் இக்கவிதையில் அலாதியான முறையில் உள்ளிழைந்தோடுகிறது. எளிமையும் நேரடித்தன்மையும் கைகூடிவந்துள்ள கவிதை இது. ஒரு அழகியலின் லாவகம் இயல்பாய் கவிதையில் இழைந்தொளிர்கிறது. கற்பனை நவிற்சிக் கான வார்த்தைகளின் வழியாக அன்றி, நிஜம் அலை யென ஆர்ப்பரிக்கும் வார்த்தைகளே கவியாகியுள்ளது. இக்கவிதையின் கவித்துவம் வெளிப்பாட்டின் தன்னிச்சையான பிரயோகத்தினால் இயல்பாக கூடி வந்துள்ளது.

4

என். ஆத்மாவின் அசல்பெயர் முகம்மது இப்றாஹீம் ஜாபிர். ஆத்மா ஜாபிர் (Aathmaa Jafir) என்றும் குறிக்கப்படுகின்றார். அவரது பிறப்பிடம் கிழக்கு மாகாணத்திலுள்ள காத்தான்குடி. ஈழத்தின் முக்கிய கவிகளுள் ஒருவர். பேராசிரியர் எம்.ஏ.நுஃமான் அவர்கள் "கலையமுதம்" (1999) நேர் காணலில், "1990களில் நம்பிக்கை ஊட்டக்கூடியவர் களாக முன்னணிக்குவந்த சிலரின் பெயர்கள் உடன் நினைவுக்கு வருகின்றன" என்ற அடிப்படையில் ஆத்மாவையும் குறிப்பிட்டுள்ளார். ஆத்மாவின் "மிக அதிகாலை நீல இருள்" நம்பிக்கை தரும் தொகுதி என்றும் கணித்துள்ளார் (பார்க்க, "முற்றுப்பெறாத விவாதங்கள்" 2923:147). "இன்றைய ஈழத்துத் தலை முறை கோடிட்டுக் காட்டும் இன்னொரு கவிஞன் என்.ஆத்மா. உணர்வுகளை ஆழமாக ஊடுருவும் படைப்பாற்றலில் தெறிக்கும் அவனது முன்நகர்வு ஒரு வளமான கவிஞனை முன்னறிவுப்புச் செய்கிறது. மனித விழுமியங்கள் சருகுறும் இன்றைய நிலைமைகளின் யதார்த்தத்துள் மனித உணர்வுகள் வாடிவிட மறுத்து தவிக்கிறது அவனது கவிதையில். காதல் பற்றி பேசிவிட்டாலே இடதுசாரித்தனம் முகஞ் சுழித்து மெல்லிய புன்னகையால் அழுதுகொள்ளும் காலங்கள் கரைந்துகொண்டுவிட்டது. இந்தக் கவிஞனின் உலாவல்கள் – இந்தத் தடையின்றி – இங்கும் சுதந்திர மாய்ப் பேசுகின்றன. காதல், அன்பு என்பன பற்றிய கற்பிதங்களின் அடிப்படையில் எம்மைப் புணர்ந்து கொள்ளும் உணர்வுகளை உணர்ச்சிகளை இன்றைய ஈழச் சூழல்களின் நடுவே பாதுகாப்பாய் அணைத்துச் செல்கிறார் ஆத்மா. அதில் அவர் கவித்துவ வெற்றியும் பெறுகிறார்" என்கிறது "மிக அதிகாலை நீல இருள்" நூலின் பதிப்புரை.

கோவை விடியல் பதிப்பகம் வெளியிட்ட "மிக அதிகாலை நீல இருள்" கவிதைத் தொகுப்பு டிசம்பர் 1996இல் வெளிவந்தது. இந்நூலில் 16 கவிதைகள் 55 பக்கங்களில் இடம் பெற்றுள்ளன. "குஞ்சு பொரி மரமே!" கவிதையைத் தவிர மிகுதி 15 கவிதைகளும் சற்று நீண்டவை. "கவிதையும் உணர்வுகளுள் ஒன்றாக என்னுள்ளிருந்த ஆரம்ப நாட்களில் எழுதப்பட்ட கவிதைகளே இவை" என்கிறார் ஆத்மா. ஆத்மாவின் கவிதைகளில் காணும் கவனத்திற்குரிய மூன்று அம்சங்களை மு.பொ. சுட்டிக்காட்டுகிறார் (பார்க்க. களம் 9 மே 1998). முதலாவது காதல் வயப்பட்ட இளைஞன் ஒருவனின் பல்வகைப்பட்ட மனக்கோலம். இரண்டாவது கிழக்கிலங்கை வாழ் முஸ்லீம் மகன் ஒருவன் எதிர் கொள்ளும் தன் இருப்பின் அவலம். அதாவது ஒரு பக்கம் சிங்கள பேரினவாதம் மறுபக்கம் தமிழ் பேரினவாதம் இவற்றிடையே அகப்பட்டுத் தத்தளிக்கும் தமிழ்பேசும் இனமான முஸ்லிம்களின் நிலைபற்றிய சிந்தனை. மூன்றாவது தம்மைச் சூழ்ந்து விலங்கிடும் – நமது உண்மையான விடுதலைக்குத் தடையாய் உள்ள இனம், மொழி, சமயம் என்னும் தடைகளைத் தாண்டியெழத் துடிக்கும் ஒருவித ஆத்மீக வேகம், ஆனால் மேலே சுட்டப்பட்ட விஷயங்கள் அனைத்துள்ளும், நிலாக்கால நீர்த்தேக்கத்துள் இடைக்கிடை வந்து தலைகாட்டிச் செல்லும் மீன் குஞ்சுகள்போல் கவிஞனின் காதல் நினைவுச் சிதறல்கள் தலைகாட்டியே செல்லுகின்றன. இவரது காதல் வயப்பட்ட மனமே இவரது அனைத்துக் கவிதைகளின் தொடுநாராய் இழைகின்றது.

இத்தொகுப்பிலுள்ள சூரியன் உச்சிக்கு ஒரு சாண் மேல், ஒரு கோடை மழைக்கவிதை, மீள மீளக் கொல்லுதல், என் பிரிய காதலே பிசாசே, ஒரு பேய்மாரி நூறு மோகினிப் பிசாசுகள், சூரியன் உச்சிக்கு ஒரு சாண் மேல் போன்ற கவிதைகள் காதலை ஆப்தமாக்கிக் கொண்டுள்ளன. தலைப்புகளே கவித்துவம் மிக்கவை யாக இருக்கின்றன. தனித்திருக்கும் தருணங்களில் இன்பத் துய்ப்பு குறித்த ஞாபகங்கள் மேலிட காதலின் அவஸ்தை கொதித்திட "வெப்பத்தால் வெண்ணெய் உருகும் உருக்கம் போல உருகும் நிலை"யையே ஆத்மாவின் கவிதைகள் சித்திரிக்கின்றன. ஆழமான உணர்விலிருந்து கிளர்ந்த அவரது கவிதைகள் காட்சி களால் நிரம்பியுள்ளன. குறிப்பாக காதலின் இரங்கல் உணர்வுகள் அனைத்தும் காட்சிகளாகவே நிலைபெறு கின்றன. "என் பிரிய காதலே பிசாசே" என்ற கவிதையின் ஈற்றடிகளை இதற்கு உதாரணமாக சுட்டலாம். என் உணர்வுகளில் உட்கார்ந்துக் கொண்ட இன்னுமொரு காதல் கவிதை "சூரியன் உச்சிக்கு ஒரு சாண் மேல்". இக்கவிதையின் வரிகளை ஒரு மலைமேல் ஏறிநின்று உரத்து உரைக்கத் தோன்றும். கேட்குமா அவளுக்கு?

ஆணியும் கயிறும் இல்லாமல்
சும்மா தொங்கிற நிலாப் பந்தும்
நானும்.

ஒரு தாளில் சிறிது
உயிர் வைத்தனுப்பியிருக்கலாம் நீ.

எதிரில் அசைகிற வாகைக் கந்துகள்
முட்பற்றைச் சவநிலம்
வானக் கறுப்பு ஒன்றும் தெரியுதில்லை.

கண்களை உதிர்த்துப் போட்டிருக்கிறேன் உன்
தபால் வரும் திசையில்.

ஆனாலும் நெஞ்சழுத்தந்தான் உனக்கு.

காகம் சிறகடிக்கிற இமைகளும்

செவியைச் சிலிர்த்தும் குரலொலியும்
விடாமல் அரிக்குது உள்ளே.

புதைந்திட்ட கால்கள்
பால் தெறிக்கும் இக் குருத்து மணலில்
கடுக்காத சுட்டு விரல்
அலுத்திடாமல் உன்
பெயரெழுதித் தொடரும் என் அன்பே!

வாசற் படிக்கட்டருகில்
சோர்ந்திட்ட வெட்கங் கெட்ட ரோசாப் பூ
என் முகம்.

சுவரில் சாய்கிறேன்.
பிறவற்றில் லயித்திடா மனம்
மையப் புள்ளியாய் நீயிருக்கும்
ஆரையற்ற பரிதியில் சுழன்று சுழன்று.

இனியாகிலும் நாலுவரி
அல்லது உன் பெயரை மட்டும்
எழுதிப் போடு.
காய்ந்திட்ட என் தொண்டைக்குள் குளிர் நீர்
அது ஊற்றும்.

ஆத்மாவின் காதல் கவிதைகள் ஈரமான இதயத்தில் முளைத்து படர்கின்றன. தனிமையின் அவஸ்தைகள் செறிவான வார்த்தைகளில் சித்திரமாகி நம் மனதில் ஆழமாய் பதிகின்றன.

5

"எனது கவிதைகள் உண்மையின் குரலாக ஒலிக்க வேண்டும்" என்ற வாசகம் மூத்த கவிஞர் எம்.ஏ.நுஃமான் அவர்களுடையது. அதுவே அவரது கவிதைகளுக்கான உரி/ உயிர். நந்திக் கடல் அருகே" என்ற கவிதையின் ஆரம்ப வரிகள் இவை:

"வாளேந்திய சிங்கம்
வாய் திறந்து பாயும் புலி
நடுவே மனிதர்கள்
தப்ப ஓடும்
ஒரு நாட்டின் புதல்வன் நான்"

சிங்களப் பேரின வாதத்திற்கும் (வாளேந்திய சிங்கம்) தமிழ்ப் பேரின வாதத்திற்கும் (வாய் திறந்து பாயும் புலி) மத்தியில் அகப்பட்ட முஸ்லிம்கள் பாதிக்கப் படுவதையே நுஃமான் இங்கு சுட்டுகிறார். "பயங்கர கனவு" என்ற கவிதையிலும் இதனையே குறிப்பிட்டி ருக்கிறார்.

"இரண்டு அரக்கர்கள்
இருவரின் தலைகளும் வானத்துக்கப்பால்
இருவரின் கால்களும் பாதாளத்துக்குக் கீழ்
குரூரம் முகத்தில் தெறிக்க
என் இளங்காலியை
இழுத்துக்கொண்டு இருந்தனர்"

இக்கவிதையில் இரண்டு அரக்கர்கள் என்று அவர் குறிப்பிடுவது வாளேந்திய சிங்கத்தையும் வாய் திறந்து பாயும் புலியையுமே. இளம் காதலி என்பது முஸ்லிம்களை குறிக்கின்றது. சிங்கம், புலி சண்டையில் முஸ்லிம்கள் சொல்லொனா துயர்களை அனுபவித்தனர். கிழக்கை இருப்பிமாகக் கொண்ட ஆத்மாவும் இந்த பெருந்துயரை அனுபவித்திருந்தார். இந்த பயங்கர அனுபவங்களை அவரது கவிதைகள் கவித்துமாக பேசியிருக்கின்றன. திறந்த நிலை கொண்ட ஆத்மாவின் கவிதைகள் நடப்புகளால் இயங்குவது. நேரடியான பதிவுகளே கவித்துவத்திற்கான தருணங்களாக முகிழ்த்துள்ளன.

ஆத்மா "சரிநிகர்" என்ற மாற்றுப் பத்திரிகையில் எழுதிய (1996.08.29) "செங்கோல் = சிவப்பு, கோல்" என்ற கவிதை ஒரு சக்தி வாய்ந்த கவிதையாகும். இக் கவிதையை பல முறை வாசித்திருக்கிறேன். இது எனக்குள் பல அதிர்வலைகளை உண்டு பண்ணி யிருக்கிறது. முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்பட்ட அடாவடித்தனங்களை எவ்வித விட்டுக்கொடுப்புமின்றி இக்கவிதை உரத்துப் பேசியிருக்கிறது. ஒரு கொடிய அரசனை மையப்படுத்தியதாக கவிதை புனையப் பட்டிருக்கிறது. "அரசன் எழுந்தான்" என கவிதை தொடங்குகிறது. எவ்வாறான ஆசனத்திலிருந்து எழுந்தான் என்பது பயங்கர அதிர்வாகிறது.

அப்பாவிகளின் தொடை,
கணைக்காலென்புகளால்
செய்யப்பட்டு
குழந்தைகளின் கன்னத் தசைகளால் போர்த்தப்பட்ட
ஆசனத்திலிருந்து

அரசனின் வலது கையில் எழுவன் குளத்துச் சிங்கள மக்களின் புத்தம் புதிய குருதி நிரம்பிய கிண்ணம்

ஒரு மிடறு குருதியருந்தியபடிதிறந்து கிடந்த அடுத்த அறையை எட்டிப் பார்த்தான். அங்கு,

ஆணியடித்துக் கொழுவப்பட்ட 103 தொப்பிகள்
காத்தான்குடிப் பள்ளிவாசலில்
சுட்டுக் குதறப்பட்டவர்களின் தலைகளிலிருந்து
கழற்றி எடுத்து வரப்பட்ட மாவீரச் சின்னங்களவை.
பக்கத்தில்
இரு கூறிடப்பட்டு வீசியெறியப்பட்ட
சிறு பிள்ளையொன்றின்
குருதி பீய்ச்சியடிக்கப்பட்டுக்காய்ந்த சீமெந்துப்பேப்பர்.
பெருமிதத்தில் தனக்குள் சிரித்துக் கொண்ட அரசன்
திடுமென அதிர்ந்தான்.
மிக அருகில் எங்கோ பாங்கொலிக்கக் கேட்டான்.
அம்பிளாந்துறைச் சந்தியில் மரண ஓலமெழுப்பிய
அதே 157 ஹாஜிமாரினதும் குரல் அசப்பில்.
மடுவுக்குள் பாதி புதைந்தும்
பட்டை வாய்வெடித்த காட்டு மரங்களில் தொங்கியும்
இரத்தம் தோய்ந்த வெண்ணிற
அரண்மனைக்கு வெளியே
காற்றிலசைவதும் கண்டான்.......


எனத்தொடரும் வரிகள் அகோர காட்சியாகி மாபயங்கர அரசனால் நிகழ்த்தப்பட்ட கொடூரங்களை ஆவணப்படமாக்கியுள்ளது. கவிதையின் இறுதி வரிகள் இவை:

"முஸ்லிம்களைக் கொன்று கன நாளாயிற்றே

*கொல்வதில்லையா இனி?"*
*அரண்மனை அதிரப் பேயிடியாய்ச்*
*சிரித்த அரசன் திருவாய் மலர்ந்தான்*
*"கொல்வதில்லை யென்றெதுவுமில்லை*
*இப்போதில்லை!"*

மனச்சாட்சியை உலுக்கும் வகையில் கொடூரம் இழைக்கப்பட்ட சங்கதிகளை கவித்துவ உணர்வோடு ஆத்மா சாசுவதப்படுத்தியிருக்கிறார். இக்கவிதை பலமான எதிர்ப்பு விமர்சனங்களை எதிர்கொண்டது. "உணர்வுகளை ஆழமாக ஊடுருவும் படைப்பாற்றல் கொண்ட என். ஆத்மா" இவ்வாறாதொரு கவிதையை எழுதியது ரவீந்திரனுக்கு (சுவிஸ்) பிடிக்கவில்லை. "ஒரு மோசமான கவிதை" என்ற மகுடத்தில் இக்கவிதையை சரிநிகர் (1996.09.26) இல் அவர் கடுமையாக விமர்சித்திருந்தார். பதிப்புரையின் விமர்சனம் இப்படி அமைந்துள்ளது: "இன்று ஈழ நிலைமைகளில் முஸ்லிம்கள் மீதான தமிழ்ப் பேரினவாதத்தின் நேரடிப் பாதிப்புக்குள்ளான பிரதேசங்களின் கொந்தளிக்கும் உணர்ச்சியை ஆத்மா பிரதி நிதித்துவப்படுத்தும் பாங்கில் "செங்கோல் = சிவப்பு + கோல்" என்ற கவிதை பிறந்திருக்கிறது. அரசியல் நீக்கம் செய்யப்பட்டு வெறும் கொலைகாரத்தனத்தின் மீதான சித்தரிப்பாக அது ஆகியிருக்கிறது. மேலும் தான் வெடித்துச் சிதறப் போவது உறுதியான - ரத்தமும் சதையும் கொண்ட- ஒரு மனிதஜீவி வெறும் சடப்பொருளாக்கப்படுவது கவிஞனின் உணர்வு நிலையைக் கேள்விக்குள்ளாக்குகிறது. உணர்வுகளை ஆழமாகத் தொட்டுச் செல்லும் அவரது படைப்பாற்றல் மீதான இந்த முரண்கூட அவரது அரசியல் சமூகப் பார்வையின் குறைபாடு என்றே படுகிறது. மற்றபடி அதை அவரது ஆத்மார்த்தமான குறைபாடாகக் காணமுடியாது என்பதை அவரது மற்றைய கவிதைகளின் உரையாடல்கள் உணர்த்துகின்றன." மு.பொன்னம்பலமும் தனக்கே உரித்தான பாணியில் இக்கவிதையை சாடியிருக்கிறார்.

போர்காலத்து பொருண்மைகளை/ இனப் பிறழ்வினால் ஏற்பட்ட அவலங்களை பட்டியல் படுத்தியிருக்கிறது "பொன்னத்தா பூவத்தா" என்ற கவிதை. சிங்கள, தமிழ் பேரினவாதத்திற்குள் சிக்குண்டு சிதிலமடைந்த முஸ்லிம்களின் அவலத்தை ஒரு குழந்தை மூலமாக வெளிக்கொணர்ந்திருக்கும் கவித்துவ நுட்பம் அபாரமானது.. "ஆணலைகள்" கவிதை சிங்களப் பேரினவாதத்திற்கு எதிர்வினையாற்றியிருக்கிறது. "ஆணலைகள்" கவிதையில் கோபாவேசப்பட்ட மனம் கொந்தளிக்குமொரு கடலாகி இருக்கிறது என்று ஆத்மாவே சொல்லியிருக்கிறார். ஆனால் கோபவேசப்பட்ட அவரது மனம் "காக்கிச் சட்டைச் சிங்கள நாய்" போன்ற சொல்லாடல்களை தவிர்த்திருக்கலாம். போர்கால அனுபவங்கள்/ அடாவடித்தனங்கள் ஆத்மாவின் கவிதைகளில் வரலாற்றுப் பதிவுகளாகியுள்ளன. அதிதுயர்மிக்க காயங்களோடு வெளிப்பட்டுள்ளன. பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களின் வார்த்தைகளை அடியொற்றிக் கூறினால், ஆத்மாவுடைய "கருத்து நிலையும் கவிதையாக்க ஆற்றலும் நன்கிணைந்துள்ளன. இவர் நுண்ணிய உணர்திறனையும் கவிதா நெஞ்சினையும் கருத்து நிலைச் செம்மை




யினையும் நன்கு காட்டியுள்ளார். நுணுக்கமான சிறு விவரங்களையும் மனப்பதிவு செய்து கொள்ளும் திறனும், அகண்ட பின்னணியில் வைத்துப் பார்த்து விளங்கும், விளக்கும் அகண்ட பார்வையும் இவரிடத்து உண்டு என்பது இக்கவிதைகள் மூலம் நிரூபணமாகின்றது" (ஈழத்துத் தமிழிலக்கியத் தடம் 1980 2000 2000: 105). எளிமையும் கவித்துவ வீறும் கொண்ட கவிதைகளைப் படைக்க காட்சிப்படுத்தல் உத்தியை மஹாகவி கையாண்டிருந்தார். இந்த உத்தி நுஃமான் கவிதைகளில் உயிர்த்திருந்தது. ஆத்மாவில் காட்சிபடுத்தலே கவிதையாகியிருக்கிறது. கவிதையில் கச்சிதமான வடிவத்தையும் எளிமையையும் தன்னிலம் சார்ந்த மொழியையும் உணர்வுப்பூர்வமாய் வெளிப்படுத்தும் என். ஆத்மாவின் கவிதைகள் தனித்துவமானவை: அவை ஈழத்து நவீன கவிதைக்கு ஒளிபாய்ச்சி நிற்கின்றன.

*6*

ஆத்மா ஜாபிர் ஊடக, சமூக செயற்பாட்டாளர். தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பாளர்: அறிவிப்பாளர். நேத்ரா வள இல் அவரது பன்மைத்துவ ஆற்றலைப் பிரதிபலித்த பிரவாகம், கோடைமழை முதலான இலத்திரனியல் சஞ்சிகைகள் அழியா சித்திரங்களாக மனதில் பதிந்துள்ளன. திரைப்படத்துறையில் ஆர்வமும் ஈடுபாடும் கொண்ட ஆத்மா திரைப்படத்துறை விரிவுரையாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது. மட்டக்களப்பு கல்லடி – உப்போடை நொச்சி முனையில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த முஸ்லிம்களுக்கும் தமிழ் மக்களுக்குமிடையிலான உறவினையும் 1985 கலவர காலத்தின் போது நிகழ்ந்த முஸ்லிம்களின் வெளியேற்றத்தையும் பின்னணியாகக் கொண்ட "நொச்சிமுனை தர்ஹா- சகவாழ்வின் கடைசிக் கோட்டை" என்ற ஆவணப்படத்தினை எழுதி இயக்கியுள்ளார். ஏறத்தாழ 30 நிமிட கால அளவுள்ள இவ் ஆவணத் திரைப்படம், ஐந்தாண்டுகளுக்கும் மேலாக

அவர் முன்னெடுத்த ஆராய்ச்சி, தேடல், உழைப்பின் அறுவடையாகும். தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் கலைஞர்கள் சங்கம் (தமுஎகச), வருடம் தோறும் வழங்கி வரும் கலை இலக்கிய விருதுகள் வரிசையில், 2022 ஆம் ஆண்டிற்கான சிறந்த ஆவணப் படமாக "நொச்சிமுனை தர்ஹா" தெரிவு செய்யப்பட்டு விருது வழங்கப்பட்டது. விருது பற்றிய பதிவு இது:

"மதம் கடந்த உறவுகளில் செழித்திருந்தது மனித வாழ்வு. அதன் சாட்சியாக, சூபிக் கலாச்சாரத்தின் வடிவமாக- உலகெங்கும் மிகவும் குறிப்பாக, தெற்காசிய நாடுகளில் உயர்ந்திருப்பது தர்ஹாக்களும் அங்கு அடக்கம் செய்யப்பட்டிருக்கும் அவுலியாக்களும். நேர்ச்சை, மந்திரித்தல், ஓதிப் பார்த்தல் என சகல சமயத்தினருக்கும் தன் இடத்தைத் தந்து கொண்டிருந்த தர்ஹாக்கள், தங்களின் கதைகளை தாங்களே சொல்லத் துவங்கினால்...? இந்தக் கேள்வியில் முளைத்ததே ஆத்மா ஜாபிரின் ஆவணப் படம்..மதம் கடந்த உறவுகளில் செழித்திருந்தது மனித வாழ்வு. அதன் சாட்சியாக, சூபிக் கலாச்சாரத்தின் வடிவமாக- உலகெங்கும் மிகவும் குறிப் பாக, தெற்காசிய நாடுகளில் உயர்ந்திருப்பது தர்ஹாக் களும் அங்கு அடக்கம் செய்யப்பட்டிருக்கும் அவுலியாக் களும். நேர்ச்சை, மந்திரித்தல், ஓதிப் பார்த்தல் என சகல சமயத்தினருக்கும் தன் இடத்தைத் தந்து கொண்டிருந்த தர்ஹாக்கள், தங்களின் கதைகளை தாங்களே சொல்லத் துவங்கினால்...? இந்தக் கேள்வியில் முளைத்ததே ஆத்மா ஜாபிரின் ஆவணப் படம்" தமுஎகச.

இந்த விருதிற்காக, இயக்குனர் குறித்து எழுதப் பட்ட அறிமுகக் குறிப்பு (சிராஜ் மஷ்ஹூரின் முகநூல் பதிவிலிருந்து பெறப்பட்டது) வருமாறு, "ஈழப் போராட்டம் தீர்க்கமான நிலையை எய்திய 80களின் தொடக்கத்தில், இயக்கங்களில் முஸ்லிம் இளைஞர் களும் இணைந்திருந்தனர். எளிய முஸ்லிம் மக்கள் அவற்றுக்குப் பலவழிகளில் ஒத்துழைப்பு வழங்கினர். கிழக்கு, வடக்குத் தமிழ் பேசும் சமூகங்களான தமிழர், முஸ்லிம்கள் மத்தியில் நிலவிய வேறுபாடுகளை நூதன மாக அவதானித்த எதிரிகள், இரு தரப்பினரிடையான மோதல்களை உருவாக்கினர். விடுதலைப் புலிகள் அமைப்பு முதனிலைக்கு வந்த 90களில், இரு சமூகங் களும் ஏறத்தாழ இரு துருவங்களாக எதிர்நிலைப் பட்டனர். தனது படைப்புச் செயற்பாடு குறித்து ஆத்மா ஜாபிர் இப்படிச் சொல்கிறார்:

"என் சிறு பராயத்தில் நான் அனுபவித்த தமிழ், முஸ்லிம் சகவாழ்வு, தடம் தெரியாமல் சிதைந்து போனது. எல்லாவற்றோடும் இப் போர் என் பிள்ளை களுக்கு சக சமூகப் பிள்ளைகளின் சாதாரண நட்பைத் தானும் கிடைக்காமற் செய்தது."

"முப்பதாண்டு கால ஆயுதப் போர் நிறை வடைந்து, பதினைந்தாண்டுகள் கழிந்தும் பழைய நிலைக்கு மீளாத தமிழ், முஸ்லிம் உறவின் எஞ்சிய தடங் களைத் தேடுவதையும், அவற்றைப் பாதுகாப்பதையும் உயிர்ப்பிக்கப் போராடுவதையுமே பின்னர் நான் வாழ் வாக வரித்துக் கொண்டேன். என் படைப்புச் செயற் பாட்டின் மையமும் இன்று அதுதான். குறிப்பாக சினே மாவை இதற்கென இயலுமான எல்லாவிதங்களிலும் பயன்படுத்துகிறேன்.

"2000ஆம் ஆண்டு முதல் சிறகுநுனி கலை, ஊடக மையம் எனும் அமைப்பை நிறுவி செயற்பட்டு வருகிறேன். சிறகுநுனி சர்வதேச திரைப்பட விழா (2018 - 2022), மட்டக்களப்பு சர்வதேச திரைப்பட விழா - 2023 உள்ளிட்ட பல்வேறு திரைத்துறை செயற்பாடுகள், பத்திரிகை, சஞ்சிகை, நூல் பதிப்பு, வெளியீடுகள், சிறகு நுனி இணையதளம் ஆகியவற்றை இவ்வமைப்பினூ டாக முன்னெடுக்கிறேன். இவ்வகையில் நொச்சி முனை கிராமத்திலுள்ள தர்ஹா என் கண்களுக்கு அகப்பட்ட வைரமென்பேன். "நொச்சிமுனை தர்ஹா - சகவாழ்வின் கடைசிக் கோட்டை" எனும் இவ் ஆவணப் படம், அவ் வைரத்தின் ஒளியில் நான் கண்டெடுத்த மற்றொரு வைரமாகும். ஆதலால் இதனை வைரத்தின் வைரமெனலாம். நூற்றாண்டுகள் ஒன்றாக வாழ்ந்த நொச்சிமுனைத் தமிழர்களும் முஸ்லிம்களும், இன்று வேறு வேறு இடங்களில் சிதறி வாழ்கின்ற போதும், அவர்களை மீளப் பிணைக்கும் இத் தர்ஹாவின் வருடாந்த பன்னிரு நாள் திருவிழா நடைபெறும் இந்நாளில் தமுஎகச விருதுக்கு இவ் ஆவணப்படம் தேர்ந்தெடுக்கப்பட்ட செய்தி என்னை மிகுந்த பரவச மடையச் செய்கிறது."

ஏழாவது யாழ். சர்வதேச திரைப்பட விழாவில் திரையிடத் தெரிவான "நொச்சிமுனை தர்ஹா" ஆவணப்படம் 14 குறுந் திரைப்பட விழாவில் "சிறந்த ஆவணப்பட விருது" பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. "நொச்சிமுனை தர்ஹா- சகவாழ்வின் கடைசிக் கோட்டை" என்ற தலைப்பே, படத்தின் மையக் கருத்தை உணர்த்தப் போதுமானது என்றெழுதியுள்ளார் சிராஜ் மஷ்ஹூர்.

பாடா மீன்கள், சினெமாக் கல்லறை, வன(ம்) வாசம், நெய்வோர் நிலம், பாய்க்காரி, தப்பியோடிய கைதி முதலியன ஆத்மாவின் ஆவணப்படங்களாகும். இறக்கை, அப்பா, காதலென்று ஒன்றிருந்தது என்பன அவர் இயக்கிய குறும்படங்களாகும். புன்னகைப்போம் பகைமறப்போம் முதலியன காணொளி பாடல்களான இறுவட்டுகளாகும். எனவே இனி, அலைவெளி, நிராயுதம் போன்ற இதழ்களின் பிரதம ஆசிரியராக இருந்துள்ளார். இலங்கையின் கிழக்கு, வடக்கு தமிழ், முஸ்லிம் சமூகங் களிடையே உறவை மீள்நிர்மாணிப்பதற்கான ஆவண மான (கட்டுரைகள்) "ஆதாரம்" என்ற நூலையும் வெளிக் கொணர்ந்துள்ளார். 1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழ், முஸ்லிம் சமூகங் களுக்கு ஏற்பட்ட இழப்புக்களை ஒன்றாக இந்நூல் ஆவணப் படுத்தியுள்ளது. கிழக்கில் நிகழ்ந்த ஐந்து துன்பியல் சம்பவங்களின் மாற்று ஆவணமான "ஆதாரம்" நூலில் வீரமுனை அகதி முகாமில் தமிழ் மக்கள் மீதான படுகொலை (கே. பொன்னம்பலம்), காத்தான்குடி பள்ளி வாசல் (எம்.எச்.எம். பதியுஸ்ஸமான்), ஏறாவூர் பொது மக்கள் படுகொலை (ஏ.எச்.ஏ. /ஹுஸைன்), புதுக்குடி யிருப்பு பொதுமக்கள் படுகொலை, நொச்சிமுனை தர்ஹா கந்தூரி ஆகிய மகுடங்களிலான ஆய்வுக் கட்டுரைளை ஜாபிர் தொகுத்துள்ளார். "ஆத்மா ஜாபிர் பலதுறை ஆற்றல் கொண்ட பெரிதும் வெளிச்சத்திற்கு வராத ஆளுமை" என்ற முல்லை முஸ்ரிபாவின் கூற்று கருத்திற்கொள்ளத்தக்கது.

சிவ.ஆரூரன்

# எண்ணம் போல் வாழ்க்கையா



*28.05.1987*

வானில் பறந்து வரும் உலங்கு வானூர்தியின் ஒலியிலேயே அன்றைய பொழுது புலர்கிறது. வானத்தை அண்ணார்து பார்க்கிறார் செல்லையா.

நேற்று முன்தினம் வடமராட்சியை கைப்பற்றும் பொருட்டு அரச படைகள். "ஒப்பரேஷசன் லிபரேன்" என்ற படை நடவடிக்கையை ஆரம்பித்து இருந்தது. தொண்டைமனாறு படைத்தளத்தின் மீதான போராளி களின் முற்றுகையை முதல் நாளே படையினர் மீறி இருந்தனர். படையினரின் முன்னேற்றத்தைக் கட்டுப் படுத்த போராளிகளால் இயலாது போனது. கடற்கரை வீதியால் ஒரு படைப் பிரிவும் உடுப்பிட்டி-வதிரி வீதியால் இன்னொரு படைப் பிரிவும் முன்னேறின.

உலங்கு வானூர்தி சற்றுத் தாழவே பறக்கின்றது. அதில் பொருந்தியிருக்கும் பெல்ஜியம் இன்று அமைதி யாக இருக்கின்றது.

"என்ன உதில நிக்கிறியள்... சுட்டுக்கிட்டுப் போடு வான்" அடுக்களையிலிருந்து பாக்கியத்தின் குரல் மட்டை வரிச்சியினூடு கேட்கிறது.

"பாக்கியம்... ஆமிக்காறன் எங்களைக் கடந்து உந்த கடற்கரை றோட்டால வியாபாரிமூலைக்குப் போட்டான். இனி கப்பல் காறன் சுடமாட்டான்." செல்லையா முற்றத்தில் துணிவோடு நிக்கிறார்.

ஊர் வெறிச்சோடிப்போய்க் கிடக்கின்றது. முதியவர்கள் வீட்டிற்கு காவலாக இருக்க ஏனையோர் இடம் பெயர்ந்து இருந்தார்கள். அப்படி முதியவர் இல்லாத வீடுகள் பூட்டப்பட்டுக் கிடக்கின்றன.

செல்லையாவின் சகோதரி குடும்பம் இடம் பெயரும் போது "அண்ணை என்ர வீட்டை பார்த்து கொள்" என்ற போது "சரி... நீ முதல் வெளிக்கிடு. இளந் தாரி பொடியளை வைச்சிருக்கிறாய் கவனம். வீட்டை நான் பாக்கிறன்" என்றார் செல்லையா.

"அண்ணை... என்ர வீட்டையும் இடைசுகம் பாருங்கோ" வேறொருத்தியும் கேட்கிறாள். "ஏன் பயம் இங்க கள்ளன் ஆர் வருவான்... சரி நான் பாக்கிறன்" செல்லையா உடன்படுகிறார். இப்படி நான்கு வீடுகளுக்கு செல்லையாவும் பாக்கியமும் பாதுகாவர் ஆகுகின்றனர்.

செல்லையாவும் பாக்கியமும் தனியாகவே அந்த ஓலைவீட்டில் வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்கு ஒரே யொரு மகன் சத்தியசீலன். அவன் ஓர் ஆசிரியனாக விசுவமடுவிலுள்ள ஒரு பாடசாலையில் கடமை புரிந்து வருகின்றான். அவனுக்கு திருமணமாகி இரு பிள்ளை களும் இருக்கின்றனர்.

காலை ஒன்பது மணியளவில் பிட்டும் வெங்காயப் பொரியலும் சாப்பிட்டு விட்டு "பாக்கியம்... கொஞ்சம் இரு... நான் தோட்டப்பக்கம் போய் ஆடு மாடுகளுக்கு தண்ணி வைச்சிட்டு வாறன்" என்றார்.

"கடற்கரை பக்கம் ஆமிக்காறன் நிக்கிறான். அங்கனேக்க நிண்டு ஆள் தெரியாமல் சுட்டு போடுவான்" பாக்கியம் தடுக்கிறார்.

"என்ன சொல்கிறாய். எனக்கு அறுபது வயசு. அவன் ஏன் கிழவனைச் சுடப்போறான். இருபது வயதுப் பொடியள் தானே சண்டை பிடிக்கிறாங்கள்." பற்களை காட்டி செல்லையா சிரிக்கிறார்.

"என்னண்டாலும் பாத்துப் போங்கோ."

"என்ன பாக்கியம் செய்கிறது? ஆறு குளம் எண்டு எதுவும் இல்லாத இடத்தில இருக்கிறம். மிருகங்களும் கிணத்து நீரை நம்பி தானே இருக்குது. அதுகள் அள்ளியா குடிக்கும். நாங்கள் தானே தண்ணி வைக்கோணும்..." என்று சொல்லிக் கொண்டே அண்டாவையும் கிணற்று வாளியையும் எடுத்துக் கொண்டு செல்லையா தோட்ட வெளியை நோக்கி நடக்கிறார்.

தோட்டவெளி விரிந்து கிடக்கின்றது. அதற்கு அப்பால் கரையோரக் குடியிருப்புக்களும் வங்கக் கடலும்.

இத்தோட்டங்களில் பெரும்பாலும் வெங்காயம் பயிரிடப்படும். மார்கழி முதல் பங்குனி வரை பெரு போகம். சித்திரை வருடப்பிறப்பிற்கு முன்னதாகவே அறுவடையாகிவிடும். செல்லையாவும் ஒரு விவசாயி. பெரும்போகம் நிறைவடைந்து விட்டமையால் அடுத்த ஆடி வரை ஓய்வு காலம். அக்காலத்தில் படை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமையால் பயிர்ச் செய்கை பாதிக்கப்படவில்லை. ஆயினும் ஓய்வு காலம் மிகவும் இடர் மிகுந்ததாகி விடுகின்றது.

தோட்டவெளிக்குள் நுழைந்த செல்லையாவைக் கண்ட கால்நடைகள் அவரை நோக்கி விரைந்து வருகின்றன. ஆழங்குறைந்த ஒரு கிணற்றிற்கு அருகே அண்டாவை வைத்து விட்டு அதனுள் நீர் வார்க்க ஆரம்பிக்கிறார். அந்த அண்டாவில் ஒரே தடவையில் மூன்று மாடுகள் ஏனையவை அமைதியாக தம் முறைக்காக காத்துக் கொண்டு நிற்கின்றன. ஓரிடத்தில் வரிசையை குழப்பும் மனிதர்களை மாடுகள் என ஏசுவார்கள். இங்கு மாடுகள் பணிவாக நிற்கின்றன. மாடுகள் நீரருந்திச் சென்றதும் ஆடுகள் வருகின்றன. அரை மணி நேரம் கடந்தும் அவர் நீர்வாத்துக்கொண்டு நிக்கிறார். தொலைவில் இருந்தும் கால்நடைகள் நீரருந்த அணிவகுக்கின்றன.

*

இரவுணவாக மதியம் சமைத்திருந்த சோற்றையும் கருவாட்டுக் குழம்பையும் பாக்கியம் பரிமாறும் போது "பஞ்ச காலத்தில் பசி கூட்டம் போல" என்றபடி சப்புக் கொட்டிக் கொண்டே செல்லையா சாப்பிடுகிறார்.

"ஆமி வந்திட்டான். பொடியளும் இல்லை. சனங்கள் இனி பையப் பைய வந்து இங்கனேக்க இருக்கலாம்" என்றார் பாக்கியம்.

"இல்லை பாக்கியம்... மெயின் றோட்டுகளில் தான் ஆமி நிக்கிறான். இன்னும் ஊர்மனைக்குள்ள வரேல்ல. அவன் வந்து போனாப் பிறகு எல்லாம் சீராயிடும். நாங்கள் கிழட்டுகட்டையள் இருக்கலாம். இளந்தாரிப் பொடியளை வைச்சிருக்கேலாது..சிவ சிவ."

"ஓ... அது சரி தான்."

செல்லையா கிணற்றடிக்குச் சென்று கால் முகம் கழுவிக் கொண்டு வந்து படுக்கையை விரிக்கிறார். சுருட்டை எடுத்து கைவிளக்கில் பற்றைவைக்கிறார். படுத்தபடி புகைக்கிறார். "பொப் பொப்" என உதட்டின் ஒலி கேட்கிறது பாக்கியம் விளக்கை ஊதி அணைக்கிறார். கும் இருட்டாகிறது. சோழகக் காற்றில் பனங்கூடல் இரைகின்றது. நாய்கள் குரைப்பது கேட்கின்றன. நேரமாகிய போது நாய்களின் குரைப்பு குறைவடைந்து ஊளையிடுதல் அதிகரிக்கின்றன.

"என்ன இது...நாய் எல்லாம் நரியாப் போச்சுப் போல. இப்பிடி ஊளையிடுது" என்கிறார் பாக்கியம்.

மறுநாளும் கால்நடைகளுக்கு நீர்வாக்கச் சென்ற செல்லையா ஓர் ஆட்டை ஐந்து நாய்கள் கூட்டமாக சேர்ந்து வேட்டையாடுவதைக் கண்டு அதிர்ச்சியடை கின்றார். இரு நாய்கள் அந்த ஆட்டினை முன்னாலிருந்து தாக்கவரும் போது மூன்று நாய்கள் பின்னால் வந்து அதன் தொடைகளைக் கடித்து கொதறுகின்றன. செல்லையா அவ்விடத்தை நோக்கி ஓடிச் செல்கின்றார். நாய்களை விரட்டுகிறார். ஆடு பக்கவாட்டில் தரையில் வீழ்ந்து கிடக்கின்றது. கிழிக்கப்பட்ட தொடையி லிருந்து குருதி பெருக்கெடுக்கின்றது. எப்படி ஆட்டை காப்பற்றுவது எனத் தெரியாது செல்லையா திணறு கின்றார். இப்படியாக நாய்கள் ஓர் ஆட்டை வேட்டை யாடியதை இன்று தான் அவர் தன் வாழ்நாளில் முதன் முதலாகக் காண்கிறார். அந்த நாய்கள் சற்று தள்ளி நின்று அந்த ஆட்டையே பார்த்துக் கொண்டு நிக்கின்றன. வெளித்தள்ளிய நாக்கிலிருந்து வீணீர் வடிக்கின்றது. யாரை ஆட்டுக்கு காவலாக விட்டுவிட்டுச் செல்வது... ஆடு சாவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது "பிள்ளையாரே... ஏன் இந்த வாழ்க்கை எங்களுக்கு" பிள்ளையார் கோவிலை பார்த்து கத்துகின்றார். இனி ஆட்டை காப்பாற்ற முடியாது என உணர்ந்ததும் அவர் வீட்டை நோக்கி விரைகின்றார். நாய்கள் வீழ்ந்து கிடக்கும் ஆட்டினை நெருங்குகின்றன.

வீட்டுக்கு வந்தவர் பாக்கியத்திடம் கண்டதை கூறுகிறார்.

"நாயளுக்கும் பசி தானே. வீட்டுக்காறர் விட்டிட்டுப் போனால் அதுகள் என்ன செய்யும்... ம்... ஆடு மாடுகளுக்கு எண்டாலும் புல்லுக்கிடக்கு. நாய்கள் எல்லாம் பசியிலதான் இரவிரவாக ஊளையிட்டுத் திரிஞ்சிருக்கு..." என்கிறார் பாக்கியம்.

"பாக்கியம்... அதுகளுக்கும்பசி... அது சரி.. ஆனால் வீட்டு மிருகங்களை வேட்டையாடிப் பழகினால் இக்குணம் நாய் பிறகு மறக்காது. பிறகு பச்சை இரத்தத்தை எப்பவுமே கேக்கும்... இப்பிடியே விடேலாது. ஏதாவது செய்யோணும்."

"அப்ப என்னசெய்யிறது... நாங்கள் சாப்பாடு வைக்கிறதோ?"

"வேற என்ன தான் செய்யிறது. ஏதாவது சமைச்சு வைப்பம்."

"கூப்பன் கடை அரிசி கிடக்கு. சோறாக்கி வைப்பம்"

பெரிய மண்பானையை எடுத்து வருகிறார் பாக்கியம் பின் வளவில் மூன்று கல்வைத்து அடுப்பை மூட்டுகிறார் செல்லையா. அரிசியைக் கழுவி உலையில் பாக்கியம் போட, முற்றத்து மாமரத்தில் சில மாங்காய் களை பிடுங்கி, சிறுசிறுதுண்டுகளாக நறுக்கிப் போடு கிறார் செல்லையா. தொண்டன் கருவாட்டை உருத்திப் போட்டுதூளோடு உப்பையும் சேர்த்தவுடன் கருவாட்டுக் குழை சோறு கமகமக்கின்றது.

"இந்த மணத்துக்கு நாயள் எல்லாம் இங்க வரப்போகுது" என பாக்கியம் சொல்லிச் சிரிக்க, செல்லையாவும் சிரிக்கிறார்.

பாக்கியம் பழைய பாய் ஒன்றை எடுத்துக் கொடுக் கின்றார். சோற்றுப் பானையோடு பாய்ச்சுருளோடும் தோட்டத்தை நோக்கிச் செல்லையா நடக்கிறார்.

நாவில் வீணீர் வடிய நிற்கும் நாள்களைக் காணப் பயங்கரமாக இருக்கின்றது.

ஆடுகால் நீழலில் பாயை விரித்து அதன்மேல் பானையைக் கவிழ்த்து சோற்றைக் கொட்டிப் பரப்பினார். நாய்களைப்பார்த்து, "சூ... சூ..." என்கிறார். நாய்கள் கூட்ட மாக விரைந்து வருகின்றன. ஒரு நாயயைக் கண்டால் இன்னொரு நாய்க்குப் பிடிக்காது என ஊரில் இருக்கும் சொலவடைக்கு ஆப்பு வைத்தாற் போல் நாய்கள் ஒற்றுமையாக நின்று வாலைக் குழைத்தபடி குழை சோற்றை உண்கின்றன. அனைத்து நாய்களுக்கும் செல்லையா தற்காலிக எஜமானாகிறார். இடையிடையே அவைகள் முறுகல் ஒலி எழுப்புகின்றன. ஏதோவொன்றைச் சாதித்த மகிழ்வில் செல்லையா பார்த்துக் கொண்டு நிற்கிறார்.

அன்றிரவு நாய்கள் குரைத்தனவே ஒழிய ஊளையிட வில்லை. "பாக்கியம்... நாளைக்கும் நாயளுக்கும் கொஞ்சம் சாப்பாடு சமைச்சு வைப்பம். அரிசி கிடக்குத்தானே?"

"ஓம்... கிடக்கு... சனங்கள் திரும்பி வாற வரைக்கும் பாத்து விட்டால் நல்லது."

காலையில் நாய்கள் உக்கிரமாகக் குரைக்கின்றன.

"இஞ்சை... ஆமிக்காறன் வாறான்." திடுக்கிறார் பாக்கியம்.

வெளிப்படலையைத்தள்ளிக்கொண்டு படையினர் உள்ளே வருகின்றனர்.

செல்லையா முற்றத்திற்கு வருகின்றார். வரவேற்கும் முகமாக பற்களைக்காட்டிச் சிரித்தும் வைக்கிறார். அவர் கள் பேசும் மொழி கிஞ்சித்தும் அவருக்குப் புரியவில்லை. இருப்பினும் சைகை மூலமும் சிரிப்பின் மூலமும் பதில் கொடுக்கிறார்.

அவர்கள் வீட்டினுள் வரவில்லை. வயோதிபர் களின் வீடு என ஒருவித அலட்சியம் தெரிகின்றது.

அடுத்த வீட்டிற்குச் சென்று முன்கதவைக் காலால்

ஒரு சிப்பாய் உதைக்கின்றபோது, "இது என்ர தங்கைச்சி வீடு" என்கிறார் செல்லையா.

"அடோ போடா" என்கிறான் அந்தச் சிப்பாய் அவனைவிட செல்லையாவுக்கு மூன்று மடங்காவது அகவை அதிகமாக இருக்கக்கூடும். தங்கையின் வீட்டைப் பாதுகாத்துத் தருவதாக கொடுத்திருந்த வாக்கைக் காப்பாற்றவென நாணிச் சிரிக்கிறார். மூன்றாவது வீட்டைச் சோதனையிட சிப்பாய்கள் செல்ல கூடவே செல்லையாவும் போக முற்பட "ஏய்...ஏன் எங்க கூட வாறது?" என ஒரு சிப்பாய் அதட்டுகிறான்.

"அந்த வீடும் என்ர சொந்தக்காற வீடு தான்" என்கிறார். ஒருவன் அவரை அடிக்க முற்பட மற்றவன் தடுக்கிறான். செல்லையாவிடம், "ஆமி விருப்பமா? சரி... சரி... எங்கட கூட வாறது" என்கிறான்.

செல்லையாவைத் தேடிக் கொண்டு பாக்கியம் வருகிறார். "அவரை எங்கை ஐயா கூட்டிக் கொண்டு போறீங்கள்?" அழுது கொண்டு கேட்கிறார்.

"ஏங்! போ... போ..." ஒரு சிப்பாய் விரட்டுகிறான்.

குறுக்கிட்ட செல்லையா, "இடங்காட்ட வரட்டாம். நீ வீட்ட போ. நான் வந்திடுவன்" என பாக்கியத்துக்குக் கூறுகிறார்.

கடற்கரைக்குச் செல்லும் வீதியில் தன் கணவனைப் படையினர் கூட்டிச் செல்வதைப் பதற்றத்தோடும் இயலாமையோடும் பார்த்துக் கொண்டு நிற்கிறார் பாக்கியம்.

*

இரண்டு நாளாகியும் செல்லையா திரும்பி வரவில்லை. துக்கம் தாழாது பாக்கியம் புசத்தத் தொடங்கி விடுகிறார். இச்செய்தியைச் சொல்லி ஊரவர் யாரை யாவது கூட்டி வருவதற்கு ஊரிலிருந்த ஒரு வயோதிபர் புற்றளைக்குச் செல்கிறார். ஊரவரில் பெரும்பாலானோர் அல்வாய் முத்துமாரி அம்மன் கோயிலில் தான் முதலில் தங்கியிருந்தனர். அங்கு எறிகணை வீசப்பட்டமையால் புற்றளைக்குத் தப்பியோடியிருந்தனர். புற்றளைக்குச் சென்ற படையினர் முப்பது வதிற்கு உட்பட்ட இளைஞர் அனைவரையும் கைது செய்து காலி பூசாவிற்குக் கப்பலேற்றி விடுகின்றனர். துயரத்தில் இருந்தவர்களுக்கு செல்லையா காணாமல்ப் போன செய்தி கிடைக்கிறது.

செல்லையாவின் சகோதரியும் சில நெருக்கிய உறவினரும் ஊர் திரும்புகின்றனர். "எங்கையிருந்தாலும் நடக்கிறது தான் நடக்கும்..." என தம்மைத் தாமே திருப்திப்படுத்திக் கொண்டு மக்கள் படிப்படியாக தத்தம் ஊர்களுக்குத் திரும்புகின்றனர்.

செல்லையாவை முனைப்போடு தேட ஆரம்பிக்கின்றனர். ஊரில் சிங்களம் தெரிந்த ஒருவர் பாக்கியத்தோடு கூடத் திரிகிறார். அல்வாய் மேற்கு விதானை அருளானந்தத்தோடு திக்கம், வியாபாரிமூலை இராணுவ முகாம்களில் விசாரிக்கின்றனர். அப்படி ஒருவரை தாம் காணவில்லை என கைவிரிக்கின்றார். சிப்பாய்களை அடையாளப்படுத்துமாறு பாக்கியத்திடம் கேட்கின்றனர். "பச்சை உடுப்பு, கையில துவக்கு, அரிக்கன் சட்டித் தொப்பியோட வந்தவை" இப்படி பாக்கியம் திரும்பத்திரும்பக் கூறிக் கொண்டிருக்கிறார்.

தகவலறிந்து சத்தியசீலன் ஊருக்கு வந்து விடுகிறான். தாயின் துயரைக் கண்டு துவண்டு போகிறான். வடமராட்சி முழுவதும் தேடிப் பார்த்தும் பயன் கிடைக்கவில்லை. "சிலவேளை பூசாவுக்கு அனுப்பப்பட்டிருக்கலாம்" என்ற சந்தேகம் எழுகின்றது.

"அல்வாய் வடக்கில கார்காற அருளையும் அவரின்ர பதினெட்டு வயது மகனையும் வியாபாரி மூலையில கொண்டிட்டாங்களாம். அது போல..." இப்படி ஒருவர் கூற சத்தியசீலனுக்கு பகீர் என்றிருக்கிறது.

"அப்பிடி ஐயாவுக்கு நடந்திருக்காது..." என சத்தியசீலன் திருப்திப்படுகிறான். செல்லையாவைக் கைது செய்யவில்லை எனப் படையினர் கையை விரிந்தா லும், அவரின் சடலம் கிடைத்திருக்காதது சத்திய சீலனுக்கு திருப்தியாக இருக்கின்றது.

இருநாள்கள் கடந்த வேளை அரசல் புரசலாக ஒரு கதை பரவுகின்றது. சத்தியசீலனிடம் ஒரு பெரியவர் வந்து "தம்பி... சக்கோட்டை பிலோமினா ரீச்சர் வீட்டுக் கக்கூஸ் குழியில ஒரு பிரேதம் கிடக்காம் ஒருக்கால் பாத்திட்டு வருவமோ?" என்று கேட்கிறார்.

"ஐயாவா இருக்காது... நீங்கள் பாத்தனீங்களோ?" சந்தேகத்தோடு சத்தியசீலன் கேட்கிறார்.

"கொம்மாக்குச் சொல்லாதை. இரண்டு பேருமா போய் வருவம்." இருவரும் அங்கு செல்கின்றனர். ஊரவர் சிலர் ஏலவே வந்திருக்கின்றனர். சத்தியசீலனுக்கு சந்தேகம் வலுப்பெறுகின்றது. அந்த மலர்க்குழியின் மேல் தட்டு பாதியாக உடைக்கப்பட்டுக் கிடக்கிறது. அதனூடு அவன் பார்க்கிறான்.

செல்லையாவே தான்! கழுத்து, நெஞ்சு பூராகவும், வெட்டுக் காயத்துடன் காலை நீட்டிய படி வடக்குப் பக்கச் சுவரோடு சாய்ந்து கிடக்கிறார். உடல்பூராகவும் வெண்புழுக்கள் தெளிகின்றன. கன்னத்தசை அழுகி பற்கள் தெரிகின்றன. "ஐயோ... ஐயோ" என அவன் கத்தி அழுகிறான்.

"அழட்டும் விடுங்கோ" என யாரோ ஒருவர் கூறுகின்றார்.

"ஐயா யாருக்கு என்ன தீங்கு செய்தார். அவருக்கு தவறாக சிந்திக்கக் கூடத் தெரியாதே..."

"அரை மணி நேரத்தின் பின் அவன், "ஐயாவை என்னண்டு வெளியில எடுக்கிறது?" எனக் கேட்கிறான்.

"தம்பி, இனி வெளிய எடுக்கேலாது. நாள் செண்டு போச்சு. புழத்து ஊனம் வடியுது. அப்பிடியே வைச்சு எரிக்க வேண்டியது தான்.

"என்னண்ணை சொல்லுறியள்! ஐயா தீட்சை கேட்டவர். நான் அவருக்கு கொள்ளி வைக்க வேணும் எண்டுவிரும்பினவர். கடவுள் நம்பிக்கை உள்ளவர். எப்பிடி நான் அதை மீறுறது."

பலரும் பேசி அவனைச் சம்மதிக்க வைக்கின்றனர். பாக்கியம் வந்து பிரேதத்தை பார்க்க முடியாது தரையில் வீழ்ந்து மண் அள்ளிக் கொட்டி அழுகிறார்.

மலக்குழியின் மேல்தட்டு முற்றாக அகற்றப்படுகின்றது. பாரவூர்தியின் ஐந்து ரயர் சடலத்தின்மேல் போடப்படுகின்றன. ஐந்து லீட்டர் மண்ணெண்ணை ஊற்றப்படுகின்றது. காவோலை ஒன்று பற்றவைக்கப்பட்டு சத்திய சீலனிடம் கொடுக்கப்படுகின்றது. அதனை வாங்கி மலக் குழிக்குள் நுழைத்து சத்தியசீலன் சிதைக்குத் தீ மூட்டுகிறான்.

சிவகலை சிவப்பிரகாசம்

# எழுத்தாளர் குரு அரவிந்தனின் சிறுகதைகள் பற்றிய ஓர் ஆய்வு


**ஆய்வுச்சுருக்கம்**

*பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழுக்குக் கிடைத்த புதிய வரவு புனை கதைகளாகும். ஆனால் இருபதாம் நூற்றாண்டில் தான் இதன் வளர்ச்சி பல பரிணாமங் களைப் பெற்றது. சிறுகதை வளர்ச்சியால் கன்னித்தமிழ் மறுமலர்ச்சியடைந்தது. தமிழ் எழுத்தாளர்கள் இந்த நூற்றாண்டில் எடுத்துக் கொண்ட முயற்சியால் சிறுகதைத் துறை மேலும் வளர்ச்சியடைந்தது. ஈழத்து இலக்கிய வரலாற்றில் புலம்பெயர் இலக்கியமும் முக்கிய அடித்தளமாக அமைந்திருக்கின்றது. இப் புலம்பெயர் இலக்கியம் விசை கொள்ள பலவகைப்பட்ட ஆளுமைகளைத் தன்னகத்தே கொண்ட, பரந்துபட்ட வாசகர் களின் எழுத்தாளர் குரு அரவிந்தனின் பங்களிப்பு தனித்துவமானது. இவர் எழுதிய புல்லுக்கு இறைத்த நீர், நங்கூரி, பனிச்சறுக்கல், உறவுகள் தொடர்கதை ஆகிய நான்கு சிறுகதைகள் மட்டும் இவ் ஆய்வுக்காக வரையறுக்கப்பட்டுள்ளன. இந்த ஆய்வின் நோக்கமானது மேற்கூறப்பட்ட நான்கு சிறுகதைகளைத் திறனாய்வு செய்வதுடன் இவரது சமூகம் பற்றிய பிரக்ஞையையும் வெளிக்கொணர்வதாகும். பண்புநிலை அடிப் படையில் விபரண ஆய்வு முறையினூடாக இவ்வாய்வு முன்னெடுக்கப்பட்டது. இவ்வாய்வுக் கட்டுரைக்குரிய தரவுகள் ஆசிரியருடைய சிறுகதைகள், நூல்கள், இணையத்தளங்கள் என்பவற்றிலிருந்து பெறப்பட்டுள்ளன.*


திறவுச் சொற்கள்:- குரு அரவிந்தன், புல்லுக்கு இறைத்த நீர், பனிச்சறுக்கல், நங்கூரி, உறவுகள் தொடர்கதை.

**அறிமுகம்**

*குரு அரவிந்தன் யாழ்ப்பாணம் மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும், புலம்பெயர் தேசமாகிய கனடாவில் வசிப்பவருமாகிய கணக்காளர், ஆசிரியர் குரு அரவிந்தன் அவர்கள் படைப்பிலக்கியத்தில் பன்முக ஆளுமை கொண்ட படைப்பாளியாவார். ஆழ்ந்த புலமைப் பின்புலம் கொண்ட மகாஜனாக் கல்லூரியின் அறிவேற்றமும், ஆழ்ந்த புலமையும், ஆழ்ந்த வாசிப்பும் இவரின் ஆக்கங்களின் வேர்களோடு தொடர்பு பட்டுள்ளன. எட்டுச் சிறுகதைத் தொகுப்புக்கள், ஏழு நாவல்கள், ஒலிப்புத்தகங்கள், சினிமாக் கதை, வசனம், சிறுவர் இலக்கியம், நாடகங்கள் என்ற பன்முகத்தளங்களில் கால்பதித்து நிற்கும் அவரது ஆளுமையின் உறுபண்பு (trait ) அறிவு நிலையிலும், ஆக்க நிலையிலும் அவர் மேற்கொண்ட செறிவான ஊடாட்டங்களின் வெளிப்படுத்து கையாயின. சர்வதேச தமிழர் மட்டத்தில் இவரது வாசகர் வட்டம் மிகப்பெரிய அளவில் பரிணாமம் அடைந்து கொண்டிருப்பதற்கு இவரின் கனதியான இலக்கியப் பங்களிப்பே காரணமாகின்றது.*

*இவரது புனை கதைகள் பல பிறமொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டும், குறும் படங்களாகவும் எடுக்கப்பட்டிருக்கின்றன. கலைமகள் விருது, விகடன் விருது, உதயன் தங்கப்பதக்க விருது, தமிழர் தகவல் விருது, தமிழ்மிரர் விருது, ஞானம் விருது, சிறுகதை வித்தகர் விருது, சிறந்த ஊடகவியலாளருக்கான கவர்னர் விருது, சிறந்த திரைக்கதை வசனத்திற்கான ஜனகன் பிச்சேஸ் விருது, வடஅமெரிக்க தமிழ்ச்சங்க விருது, மகாஜனாக் கல்லூரியின் பழைய மாணவருக்கான சாதனையாளர் விருது போன்ற பல பரிசுகளையும் விருதுகளையும் பெற்றிருக்கிறார். உள்ளத்தில் ஒளியுண்டாயின் வாக்கினிலும் ஒளியுண்டாதற் போல அவர் நோக்கம் தெளிவுற அமைவதனால் அவர் ஆக்கங்களும் தெளிவாகச் சித்திரிக்கப்பட்டவையாக அமைகின்றன.*

குரு அரவிந்தன் வாசகர் வட்டம் நடத்திய திறனாய்வுப் போட்டி - 3 (2025) முதற்பரிசு பெற்ற கட்டுரை.

**சிறுகதை**

*சிறுகதை என்பது நிகழ்ச்சிகளின் தொகுப்பு. அதில் நிறைய நிகழ்ச்சிகள், விபத்துக்கள், திடீர்த்திருப்பங்கள், எதிர்பாராத வளர்ச்சி மூலம் உச்சக்கட்டத்தை*

அடைதல், நிறைவான முடிவு போன்றவை இருக்க வேண்டும் என்பார் ஹியூக் வாவ்போல். ஒரு சிறுகதை மூலக்கருத்து ஒன்றையும் ஒரே ஒரு கதைப் பொருள் கூறையும் கொண்டிருப்பதால் அது நாவலிலிருந்து வேறுபடுகின்றது. கதாசிரியரின் சிந்தனையில் பிறந்து அது வாசகனின் சிந்தகனையில் நிறைவு பெறுகிறது . சிறுகதையின் அமைப்புச் சிறப்படைவதற்கு சிறந்த தலைப்பு, தொடக்கம், நேர்த்தியான கருப்பொருளும் கதைப்பின்னலும், மனத்தினின்று அகலாத பாத்திரங் கள், நுட்பமாகக் கதைகூறல், சிறுகதையின் கால இடஅமைவு, பாத்திரப் பேச்சு, சிறந்த முடிவு என்பவை இன்றியமையாதவை. இவற்றின் தளங்களில் நின்றே ஆய்வுக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட நான்கு சிறுகதை களும் திறனாய்வு செய்யப்படுகின்றன.

முதலாவதாக குரு அரவிந்தனின் "புல்லுக்கு இறைத்த நீர்" என்பதனை எடுத்துக் கொள்வோம். தள்ளாத வயதிலுள்ள ஆசிரியர் தான் கற்பித்த சிறந்த மாணவர்களைச் சந்திக்கும் போது ஏற்படும் விகசிப்பை யும், எதேச்சையாக சமூகப் பிறழ்வுகளுக்குள் அகப் பட்டுக் கொண்ட மாணவனைச் சந்தித்ததால் அவரடைந்த ஆதங்கத்தையும் எடுத்தியம்புகிறது. அந்த மாணவனின் சமூகப்பிறழ்வுக்கு யார் காரணமென்பதே கதையின் கருவூலம்.

அடுத்த கதையாகிய "நங்கூரி" என்ற சிறு கதையை எடுத்துக் கொண்டால் இக்கதை 1983ம் ஆண்டு சிங்கள இனவாதத்தால் தமிழினத்துக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட இனக்கலவரத்தால் அகதிகளாக்கப்பட்ட தமிழ் மக்களைச் சுமந்து கொண்டு தமிழ்க் கரையோரப் பிரதேசங்களூடாகக் காங்கேசன் துறையைச் சென்றடையும் நங்கூரி எனும் கப்பலில் நிகழும் சோகக்கதையைப் பேசுகிறது. பயணக் கால மான அந்த இரண்டு நாட்களில் தான் எத்தனை பாத்திரங்கள், எவ்வளவு உணர்ச்சிகள், எத்தனை விவாதங்கள், எப்படிப்பட்ட தீர்வுகள், அது ஒரு துன்பியல் நாடகம் என்பதை ஆசிரியர் யதார்த்த பூர்வமாக எழுதி யுள்ளார்.

மூன்றாவது சிறுகதையாகிய "பனிச் சறுக்கல்" என்பது, பனிச்சறுக்கல் விளையாட்டை புலம்பெயர் மக்களின் பிரச்சினைகளுடன் ஒப்பிட்டுப் புனையப்பட்ட தாகும். மனவிருப்பமன்றிக் குடும்பச் சூழ்நிலை காரண மாக ஈழத்துப் பெண் புலம்பெயர் நாட்டு மணமகனைத் திருமணம் செய்து அந்த நாட்டிற்குச் சென்ற பின் அங்குள்ள இயற்கைச் சூழலுக்கு மேலாக, சமூகச் சூழலுக்கு இசைவாக்கமடையும் போது அவள் பட்ட துன்பத்தையும், அவளுக்கேற்பட்ட சோக நிகழ்வையும் எடுத்தியம்புகிறது.

நான்காவது சிறுகதையாகிய "உறவுகள் தொடர் கதை" என்பதாகும். ஈழத்தில் நடந்தேறிய யுத்ததாண்டவத்தின் கோரப்பிடியில் சிக்கிய தனயன் உயிரைக் காப்பாற்ற தாயின் விருப்பத்துடன் கனடாவில் தஞ்சமடைகிறான். ஈழத்தில் தனியாக வாழ்ந்த தாய் யுத்தம் காரணமாக நிகழ்ந்த இடப்பெயர்வுகளில் எங்கு போனாள் என்றறியாத தனயன் பல காலங்கள் கழித்து யுத்தம் தளர்த்தப்பட்ட சூழ்நிலையில் அவளைத் தேடித் தனது குடும்பத்தாருடன் தாய் நாட்டிற்கு வருவதையும் அதன் பின் நடந்தேறிய தொடர் சம்பவங்களையும் சித்திரிப்பதாகும்.

**கதைகளின் தலைப்புகள்**

சிறுகதைக்குப் பொருத்தமான பெயரும் அதன் கவர்ச்சியுமே வாசகர்களுக்கு முதலில் அறிமுகமா கின்றன. ஒரு கதைக்கு ஒரே ஒரு சரியான பெயர்தான் இருக்க முடியும். அந்தப் பெயரைத் தேடிப் பிடிப்பதில் தான் சிறுகதையாசிரியரின் தனித்திறமை அடங்கியிருக்கிறது. சிறுகதைக்குத் தலைப்பிடும்போது அதன் தொடக்கம், அதன் முடிவு, அதன் பிரதான பாத்திரம், அக்கதை கூறும் பொருள் ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றைக்கொண்டு தலைப்பிடலாம். குரு அரவிந்தனின் புல்லுக்கு□றைத்த நீர் சிறுகதையானது அங்கு கூறப்படும் பொருளை வைத்து உட்கருத்தை உள்ளடக்கித் தலையிடப்பட்டுள் ளது. நங்கூரி, பனிச்சறுக்கல் ஆகிய சிறுகதைகளின் தலைப்பானது கதையின் தொடக்கமாக அமைந்திருக் கின்றது. உறவுகள் தொடர்கதை என்ற கதை அக்கதையின் முடிவைத் தலைப்பாகக் கொண்டுள்ளது. ஆக, சிறுகதை களுக்குப் பெயரிடுவதில் குரு அரவிந்தன் அவர்கள் தனது தனித்திறமையை நிலைநிறுத்தியுள்ளார்.

**சிறுகதையின் தொடக்கம்**

மேற்கூறப்பட்ட நான்கு சிறுகதைகளுக்குமே கதைப் பொருளுக்கும் கதைக்கருவிற்கும் ஏற்ற தொடக் கங்கள் அமைந்துள்ளன. கதாசிரியர் சிறுகதைகளின் ஆரம்பத்திலேயே வாசகரின் கவனத்தையும் ஆவலையும் தூண்டுவதாகவே கதைகளைப் புனைந்துள்ளார் .

**கதைக்கருவும் கதைப் பின்னலும்**

எந்தவொரு நிகழ்ச்சியின் மேல் சிறுகதை பின்னப்பட்டுள்ளதோ அந்த நிகழ்வு சிறுகதையின் கருவாகும். கரு கதையின் சிறப்புக்கு மூல காரணமாக அமைகின்றது. கருவில் திரு இல்லையேல் கதையிலும் வளமிருக்காது. சிறுகதை, ஆசிரியரின் அனுபவத்தி லிருந்து முகிழ்கின்றது. ஆசிரியர் எங்கோ எப்போதே பார்த்த ஒரு நிகழ்ச்சி கேட்ட சம்பவம் அவருக்கு நேரிட்ட சில அனுபவங்கள் இவையே நினைவாகிச் சிறுகதையா கின்றன. வேறு வேறு காலங்களில் சம்பவங்கள் நிகழ்ந் திருந்தாலும் கதாசிரியர் கற்பனையுடன் கலந்து அவற் றைக் கோர்த்து விடுகிறார். இதுவே கதைப்பின்னலாகும்.

விகடனில் வெளிவந்த "புல்லுக்கு இறைத்த நீர்" மனதைத் தொடும் கதை. கதைத் தலைவனாக தள்ளாத வயது ஆசிரியர் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறார். இவரின் வாழ்வின் நிகழ்காலத்திலிருந்து சம்பவங்கள் பின்னோக் கிப் பின்னப்பட்டிருக்கின்றன. தன்னிடம் கல்வி பயின்று சமுதாயப் பிறழ்வில் சிக்குண்ட மாணவனொருவனைச் ஏதேச்சையாக கதைத்தலைவன் சந்திக்கும் போது அவரிடம் ஏற்படும் உணர்வுகளின் ஆதங்கத்தை கதாசிரி யர் நுட்பமாக விபரித்திருக்கின்றார். பிள்ளைகள் தமது இலக்குகளை அடையாளம் காணும் போது பெற்றோர் கள் அதை ஏற்றுக் கொள்வதே முக்கியம். மாறாகத் தமது சொந்த இலக்குகளைப் பிள்ளை மீது திணித்ததால் அப்பிள்ளை எவ்வாறு சீரழிந்துள்ளான் என்பதனையும் ஆசிரியரும் தானும் அதற்கொரு காரணமாக இருக்குமோ

என்று ஏங்குவதையும் கதாசிரியர் சமூகத்திற்கு இக்கதையின் வாயிலாக எடுத்தியம்புகின்றார்.

விகடன் தீபாவளி மலரில் வெளிவந்த "நங்கூரி" என்ற கதையை எடுத்துக் கொண்டோமானால் இக்கதையானது *1983*ம் ஆண்டு பாதிக்கப்பட்ட தமிழ் அகதிகளை மையமாகக் கொண்டதாகும். காடையர் களால் கற்பழிக்கப்பட்ட பெண்ணும் அவளின் உணர்வு களைப் புரிந்து கொள்ளாமல் அவளில் பழிபோடும் கையாலாகாத கணவனும், அவர்களை ஆற்றுப் படுத்தும் பெண் ஆசிரியரும் நங்கூரி என்ற கப்பலில் அகதிகளோடு அகதிகளாகக் காங்கேசன்துறைக்குக் கொழும்பிலிருந்து இரண்டு நாட்கள் பயணிக்கிறார்கள். மனைவி காடையர்களால் கற்பழிக்கப்பட்டமை அருவருப்போடு நோக்கும் கணவன் மானங்கெட்டு விட்டதாகத் தற்கொலைக்கு முயல்கின்றான். மனைவி யும் கணவனின் சுடுசொற்கள் தாங்காமல் தற் கொலைக்கு முயல்வாள் என்று பீதியுற்ற பெண் ஆசிரியர் அவர்களை ஆற்றுப்படுத்தி அனைவரும் கரையைச் சென்றடைகின்றனர். நெருக்கீட்டிற்குப் பின்னரான மனவடுவால் கணவன் மனநோயாளியாகி விடுகிறான். மனைவி தான் பட்ட அவலத்திலிருந்து மீண்டு வந்து முதியோர் இல்லத்தில் கடமையாற்று கின்றாள். ஆசிரியரின் மகள் இனப் பிரச்சினையால் ஏற்பட்ட அவலங்களைக் கேள்வியுற்று விடுதலைப் போராளியாகி மாவீரராக மரணிக்கிறாள்.

கதை ஆரம்ப கட்டத்திலிருந்து முன்னோக்கிப் பின்னப்பட்டுள்ளது. கதாசிரியர் இங்கு பெண் கதா பாத்திரங்களை எந்தச் சவால்களையும் நம்பிக்கை யுடன் எதிர்கொள்ளும் உயிர்ப்பான பாத்திரங்களாகச் சிருஷ்டித்துள்ளார். ஆற்றுகைப்படுத்திய ஆசிரயர் தனது மகள் மரணிப்பிலும் பெருமை கொள்கிறாள் எனக் கூறுமவர் அப்பெண் பாத்திரத்தின் மன வலிமையை இறுக்கமாகச் சித்திரித்துள்ளார்.

பனிச்சறுக்கல் சிறுகதையில் சித்திரிக்கப்படும் பெண் பாத்திரம் தாய் நாட்டிலிருந்து புலம் பெயர் நாட்டுக்குத் திருமணமாகிச் செல்கிறாள். அங்குள்ள பண்பாட்டுச் சூழலுக்கு இசைவாக்கமடைய எண்ணி அருந்திய மென்பானத்தில் யாரோ கலந்து கொடுத்து மதுபானத்தால் அவள் தன்னிலை மறக்கக் கணவனல் லாத யாரோ ஒருவனால் பாலியல் பலாத்காரத்துக்கு இரையாகின்றாள். கதையின் உச்சம் அடுத்து அவள் என்ன செய்யப்போகிறாள் என்பதுதான். எழுத்தாளர் குரு அரவிந்தன் அவர்கள் மிகப் பொறுப்புணர்ச்சியுடன் இப் பாத்திரத்தைப் படைத்துள்ளார். செய்யாத குற்றத்திற்குத் தண்டனையாக ஒரு பாத்திரத்தை நசுக்க முடியாது. பாத்திரத்தைப் படைப்பது பெரிதல்ல, அதில் எழுத்தாளரின் பரிவுணர்ச்சியும் இருக்க வேண்டும். அந்த வகையில் கதாசிரியர் அப் பெண் பாத்திரத்தின் உள்ளக்கிடக்கையை பனிச்சறுக்கல்களால் ஏற்படும் விபத்துக்கள் குடும்ப எதிர்காலத்தையும் பாதிக்கும் என்பதுடன் ஒப்பிட்டு அப்பாத்திரத்துக்கு புதிய வலிமை யையும், நம்பிக்கையையும் அளித்து வாழ வைத் திருக்கிறார்.

அடுத்து உறவுகள் தொடர்கதை என்ற கதையை எடுத்துக் கொண்டால் தாய் நாட்டில் நிகழ்ந்த யுத்தத்தின் கோரப்பிடியிலிருந்து உயிர் பிழைக்க புலம்பெயர் நாட்டில் தஞ்சமடைந்த தனயன், தனியாக விட்டுச் சென்ற தாயைத் தேடும் படலமாகும். தனியாக இருந்த தாய் இடம்பெயர்ந்து எங்கு சென்றிருப்பாள்? அல்லது உயிருடன் இருக்கின்றாளா? என ஏங்கிய தனயன் யுத்தம் தளர்வடைந்த போது தாய் நாட்டிற்குத் தனது குடும்பத்துடன் புறப்படுகிறான். அவனுடைய அன்பு மகள் புலம்பெயர் நாட்டில் பிறந்திருந்தாலும் தாய் நாட்டின் மீது கொண்ட பற்றால் அங்கு கருணை இல்லத்திலுள்ள உறவுகளைத் தொலைத்தவர்களுக்கு உதவிக்கரம் நீட்டுகிறாள். தனயன் எல்லா இடங்களிலும் தாயைத் தேடி இறுதியாகக் கருணை இல்லத்துக்கு வருகிறான். அங்கும் தாய் இல்லாமையால் ஆதங்கப்படு கிறான். ஆனால் அந்தக் கருணை இல்லத்தில்தான் தாய், எல்லாம் மறந்த நிலையில் இருந்தாலும் தனயனால் அடையாளம் காணப்படவில்லை. அவனது மகள் அடை யாளம் காணுகிறாள். உறவுகள் தொடர்கதை, உணர்வு கள் சிறுகதை என்பது போல் தனயனின் தாய் பற்றிய உணர்வலைகளை எழுத்தாளர் எட்ட நின்று விபரித்தது போல் தோன்றுகிறது. தனயன் பாத்திரத்தின் உணர்வு களை அவருடைய மனதினூடாகவும் காட்டியிருந்தால் கதை இன்னும் மிக நன்றாக இருந்திருக்கும்.

புலம்பெயர் நாட்டில் பிறந்த முதலையின் மனிதத்துவம் மெச்சத்தக்கது. இச் செயற்பாடு அங்கு பிறந்த ஏனைய குழந்தைகளுக்கு முன்னுதாரமாகும் என்பதை ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார். மேற்கூறப் பட்ட கதைகளில் ஆசிரியர் கதைகளின் கருப்பொருளை விரித்துக் கூறி அவர் உணர்த்த விரும்பும் இலட்சியத்தை அக்கருப் பொருட்களினூடாக அதனின்று மாறுபடாமல் வெளிக்கொணர்ந்துள்ளார். வெவ்வேறு காலங்களில் நிகழ்ந்த சம்பவங்களைக் கோர்வையாக்கி ஒழுங்குபடுத்தி மையக்கருவுடன் பின்னிக் கதைகளை நகர்த்தியது மட்டுமல்லாமல் கதைகளை எங்கே உச்சம் தொட வைப்பது, எங்கே திடீரென்று ஆச்சரியத்தைப் புகுத்துவ தென்று துல்லியமாகக் கணித்து வாசகர்களின் மனதைத் தொட்டுள்ளார்.

#### கதையின் கால அமைவு

நவீன உலகம் இயந்திரமாகிவிட்டது. இத்தகைய வாழ்க்கைச் சூழலில் ஆழ்ந்து படித்து அனுபவிக்கக் கூடிய பொறுமை மக்களுக்கில்லை. கதைகள் படிப்பது பொழுதுபோக்கு என்ற நிலைமாறி அவர்கள் குறுகிய நேரத்தில் புதுமையைக் காணத்துடிக்கின்றனர். சிறுகதை யில் காலம் – அக்கதையை வாசிக்க எவ்வளவு நேரம் தேவைப்படுகிறதென்பது மட்டுமல்ல அது அதிலமைந்த உட்பொருளைப் பொறுத்ததாகவும் கையாளும் விதத்தைப் பொறுத்ததாகவும் அமையும். சிறுகதையின் காலம் கற்பனையாகவே கையாளப்படுவது ஆசிரியரின் திறமைக்குச் சான்றாகும்.

கதாசிரியர் இந்தவகையில் மேற்கூறப்பட்ட நான்கு கதைகளையும் வாசகர் குறைவாகவும் இல்லை, மிகையாகவும் இல்லை என்று கூறுமளவிற்கு தான் சொல்ல வந்த கதையின் கருப்பொருளை கலைக்காமல் காலத்தைக் கற்பனையாகக் கையாண்டு செம்மையாக அதிக நீட்சியில்லாமல் நிறைவு செய்திருக்கிறார்.

#### பாத்திர அமைப்பு

படைப்பில் முன்னிலை வகிப்பது பாத்திரங்களாகும். சிறுகதை என்பது சிறியகதை. ஆதலால் அதில் அவசியமற்ற பாத்திரங்களைப் படைக்க முடியாது. ஆசிரியர் பாத்திரங்களைத் தேர்ந்தெடுத்தே படைக்க வேண்டும். சிறுகதையில் குறைந்த எண்ணிக்கையிலான பாத்திரங்கள் அமைவதே சிறப்பு. படைப்பாளிகள் தங்கள் படைப்புக்களுக்காக அநேக விதமான மனித இயல்புகளையும் தெரிந்து வைத்திருக்க வேண்டும். குரு அரவிந்தன் அவர்கள் ஆய்வுக்காக எடுக்கப்பட்ட நான்கு கதைகளிலும் பாத்திரங்களை கச்சிதமாகக் கையாண்டுள்ளார்.

புல்லுக்கிறைத்த நீர் என்ற கதையில் ஆசிரியர், மாணவன் ஆகிய இரண்டு பாத்திரங்களும், நங்கூரியில், அக்கா, கணவன், மனைவி அவர்களின் மகன் மற்றும் அக்காவின் மகள் ஆகிய ஐந்து பாத்திரங்கள் படைக்கப்பட்டாலும் அக்கா என்ற பாத்திரத்தைத் தவிர மற்றைய பாத்திரங்களின் இயங்கு நிலைகளை மட்டுப்படுத்திக் கதையை திறம்பட நகர்த்தியுள்ளார். பனிச்சறுக்கல்கள் கதையில் கணவன், மனைவி பிரதான பாத்திரங்களாகக் காண்பிக்கப்பட்டு அதேநேரம் நண்பர்கள் பாத்திரங்களை தேவைக்கேற்ப கையாண்டு கதையை நிறைவு செய்திருக்கிறார். உறவுகள் தொடர்கதை என்ற கதையில் தாய், மகன், மனைவி இவர்களின் மகள் என்றவாறு நான்கு பாத்திரங்களுடன் கதையை நகர்த்தியுள்ளார். மேற்கூறப்பட்ட பாத்திரங்களுக்கு ஏற்ப அவர்களுக்குரிய குணச்சித்திரங்களையும் எடுத்துக் காட்டி "இந்த மனிதரை எங்கோ பாத்திருக்கிறோம்" என்று வாசகர் சொல்லுமளவுக்கு பாத்திரங்களைச் சிருஷ்டித்துள்ளார்.

#### பாத்திரப் பேச்சு

ஒரு பாத்திரத்தின் பண்பை விளக்கிக்காட்டும் சிறந்த கருவிதான் பேச்சாகும். ஆசிரியர்கள் பாத்திரங்களின் தரத்துக்கு ஏற்ப பேச்சை அமைக்க வேண்டும். படிக்கின்றவர் இந்தப் பாத்திரம் இப்படித்தான் பேசும். இதைத் தவிர வேறு வகையாகப் பேச முடியாது என்று கருத வேண்டும். மேற்குறிப்பிட்ட நான்கு கதைகளிலும் பாத்திரப் பேச்சானது யாழ்ப்பாணப் பேச்சு வழக்காக இருந்த போதும் கதாசிரியர் இலக்கணம் சார்ந்த பேச்சு முறையே அதிகமாகக் கையாண்டுள்ளார். இந்த மொழி நடையைத் தமிழ் அறிஞர்கள் தாயகத் தமிழ்நடை, புலம்பெயர் தமிழ்நடை என வகைப்படுத்துகின்றனர். (சதிவிரதன், ப 15 முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்). இது தற்காலத் தமிழ்மொழியின் வளர்ச்சி நிலையெனக் கருதப்படுகின்றது. வாசகர்களும் புரிந்து கொள்ளக்கூடிய இவரது இத்தகைய வகைப்பாட்டை ஊடகங்களும் பேணிவருகின்றன.

#### கதை கூறும் முறை

பெரும்பாலும் யார் மூலமாகக் கதை கூறப்படுகிறது? ஆசிரியனுக்கும் கூறுகிறவருக்குமுள்ள தொடர்பு என்ன? என்பதே கதை கூறும் முறையாகும். ஆசிரியர் கதை கூறும் போது தான் எங்கேயும் உரைதராமல் படர்க்கையில் நின்று கதை கூறுவது சிறந்த முறையாகும். பனிச்சறுக்கல்கள் கதையில் கதாசிரியர் இந்த முறையைக் கையாண்டுள்ளார். புல்லுக்கிறைத்த நீர் என்ற கதையில் கதாசிரியர் தான் ஆசிரியர் என்ற பாத்திரமாகவும், நங்கூரியில் தம்பி என்ற பாத்திரமாவும், உறவுகள் தொடர்கதையில் தனயன் என்ற பாத்திரமாகவும் நின்று கதைப்போக்கிற்கு உதவுகிறார்.

#### சிறுகதை முடிவு

ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட கதைகள் அதன் வளர்ச்சிக்கேற்ப நிறைவு செய்யப்பட்டுள்ளன. இப்படித் தான் முடியப்போகிறது என்று படிப்போர் தெரிந்து கொள்ளாத வகையிலும், முடிந்த பின்னர் சிந்தித்து இது தான் சரியான முடிவென்று அவர்கள் ஒப்புக் கொள்ளும் வகையிலும் கதைகளை ஆசிரியர் நிறைவு செய்துள்ளது சிறப்பானது. சிறுகதைகள் என்றால் எப்படி அமைய வேண்டும் என்பதற்குக் குரு அரவிந்தனின் இந்தச் சிறுகதைகள் சிறந்த எடுத்துக்காட்டாக இருக்கின்றன.

#### முடிவுரை

புலம்பெயர் தமிழர் இலக்கியத்துக்கு குரு அரவிந்தனின் பங்களிப்பு இன்றியமையாதது. இவருடைய சிறுகதைகள் இவருடைய நேரான அனுபவத்தின் சித்திரிப்பாகத் திகழ்கின்றன. இவர் கதைகளில் கையாளும் கதைமாந்தர்கள் நமது அன்றாட வாழ்க்கையில் காணப்படுகிறார்கள். பெண்களின் பாத்திரச் சித்திரிப்பை மிகவும் கச்சிதமாகச் செய்திருக்கிறார் . ஆசிரியர் புலம்பெயர் நாட்டுச் சூழல்கள் கதைக் களங்களாகும் போது அங்கு சித்திரிக்கப்படும் பெண் பாத்திரங்களை முன்னேற்றச் சிந்தனையுள்ளவர்களாகப் படைத்தாலும், அவர்கள் மனிதவிழுமியங்களின் பெறுமானத்தை உணர்ந்தவர்களாக இருக்கவேண்டுமெனக் கூறாமல் கூறும் பண்பு நியாயிக்கத்தக்கது.

"நங்கூரி" என்ற கதை தாயகத்தின் முக்கியமான வரலாற்று ஆவணமாக ஊடகங்களால் சித்திரிக்கப் பட்டுள்ளது பாராட்டத்தக்கது. ஆக, சிறுகதை ஆக்கம் என்பது பொறுப்புள்ள சமுதாயப் பணி என்ற கருத்தை முன்னிறுத்தி எழுதும் புகழ்பெற்ற எழுத்தாளர் குரு அரவிந்தன் அவர்கள் தமது கதைகளால் வாசகர்களுக்கு உணர்வலைகளை ஏற்படுத்தும் அதேசமயம் இதுபோன்ற இன்னும் பல புதிய யுக்திகளைப் புகுத்தினால் மேலும் சிறப்பாக அமையும் என்பதில் சந்தேகமேயில்லை. புலம்பெயர் நாட்டுத் தமிழர்களின் அடுத்த தலைமுறையினருக்கு இவருடைய படைப்புகள் ஓர் ஆவணமாக, தாயக வரலாற்றை எடுத்தியம்புவனவாகவும், இவரது ஆக்கங்கள் மேலும் புலம்பெயர் தமிழ் இலக்கியத்தை செழுமைப்படுத்தி முக்கிய பங்காற்றுவதில் துணை நிற்பனவாகவும் அமைந்திருக்கின்றன என்பதற்கு இரு வேறு கருத்துக்கள் இருக்க முடியாது.

உசாத்துணை நூல்கள் :

குரு அரவிந்தன் (2019). சதிவிரதன்.மணிமேகலைப் பிரசுரம்-சென்னை

Kurunovelstory.blogspot.com

கோகிலா மகேந்திரன் (2014) ,சிறுகதையென்பது. கலை இலக்கியக் கழக வெளியீடு.

மு.முருகேஷ் குரு அரவிந்தனின் மனதைத் தொட்ட எழுத்தின் பக்கங்கள்.

# புனிதவதியின் நிராசைகளும்.. நிவர்த்திகளும்...

(காரைக்கால் அம்மையார்)

21.03.2025

இருள் கவிந்த நாட்களுடன்
“உருக்கொள்ளும் சந்யாசம்“
தன்மீது... கவியுமென்று
அவள் எதிர்பார்க்கவில்லை!

துறவும் தவமும்
தன்மாட்டில்லையென
எண்ணிய போதுகள்...
நினைவினிலாட...

கயிற்றிலிருந்து விடுபட்ட
பம் பரத்தின் துக்கமாய்...
தலைசுற்ற....
பிடுங்கிப்போடப்பட்ட
நினைவுகளுடன்...
தரித்தாள் காவியுடை.....!

தண்டனை வழங்கும் அதிகாரம்
இருந்தபோதும்
அன்பினால்...
நிபந்தனையற்ற கைவிடலுடனும்...
நீர்த்துப் போன நினைவுகளுடனும்...
சாய்ந்து கொள்ளத் தோள்களின்றி...
யாருமற்ற கணங்களுடன் ...
பரமதத்தனால் மறுக்கப்பட்ட
அன்பின் பாரங்களுடன் - தன்
நளினமுடனும் பதவிசுடனும்
உடலும் துறந்து
புனிதவதி
“புனிதவழி” பயணித்தாள்!

“ஏய்” என்றும்
“வாடி” என்றும்
அழைக்க முடியாத தாழ்வுச்
சிக்கல்களும்...
சக மனித வாழ்வின்
எழுத்துப் பிழைகளும்.....
அவனுக்கு விலகல்களைக்
கற்பித்தன!

“இசைத் தமிழ் அன்னையவள்”
கடவுளாய்த் தெரிந்ததால்...
உடனிருப் புகள் கடினமென்று...
உடனுறைதல்கள்
தகுதியற்றதென்றெண்ணி
“விலக வைத்த“ தத்தனால்
நினைவுகளின் கனத்துடன்
சேரல்களின் கோரல்களற்று...
கடந்து போன
தருணங்களைப்
பிடித்து வைத்துக்கொண்டு
நிராசைகளை நிவர்த்திப்பதற்காய்

வழி மறிக்காதவளாய்...
நெடுந்தொலைவு கடப்பதற்காய்...
மீளாப் பாதைகளின் வழி
பயணித்தாள்!

கைவிடுதல்களின் சங்கடங்களை
மறுதலித்து
பகிரப்படா அன்பினால்...
அவளால்..
காப்பாற்ற முடியாமற் போன
காதலுக்காய்
கலாசார விளிம்புகளுக்குள் சிக்கி...
“இன்னொருத் தியின் இடமாய்ப்போன
தன் இடம் விட்டு நகர்வதற்காய்....”
என்புருவுடன்
ஒரு தலைகீழ்ப்பயணம் !

மனம்... அது
ஆன்மாவின்
பதிவுப் புத்தகம்!
துரத்தும் கண்களிடமும்
தகிக்கும் நினைவுகளிடமும்
இருந்து தப்பிப்பதற்காய்
பழி தீர்க்கவும்
வழியமைக்கவும் ஒண்ணாமல்
இல்லாமற் போவதனதும்...
இருத்தலின் மறுதலிப்பினதும்...
வலிகள் மறைத்து....
அழைத்தல்களிலும்...
அனுமதித்தல்களிலும் இருந்து
தன்னை
விடுவித்துக் கொண்டாள்!

தூய்மையும் கற்புமிங்கு
குற்றப் பொருளாகி...
தெய்வீகம் இங்கு தண்டனையாய்...
“துரோகம்“ கண்டு
திகைப்புற்றுப் போன
ஆன்மாவின் மௌனத்தை
“சம்மதம்” எனக்கொண்டு...
காத்திருக்கக் கூட
இடம்கொடாமல்....
புறப்பட நிர்ப்பந்தித்தவர் வழி
ஈசனைச் சேயாய் எண்ணி

புறப்பட்டாள்
“சிவபூதகண” வடிவம் கொண்டு

தட்டிய கதவுகள்
திறக்காமற் போக
கண்ணாடிச் சிதறல்களை
விழுங்கிய இரணமாய்...
சுவாசகோசங்களுக்குள்
ஊடுருவும் வலிகளுடன்
இனியெப்போதும்
சந்திக்கவொண்ணாதவளாய்...
பழமைகளோடும்...
அறிந்தவைகளோடும் மட்டுமே
வாழும் வாழ்க்கையில்...
கொத்திய பாம்பிடம்
நியாயம் கேட்க முடியாமல்...
சந்நியாசங்களின் கட்டியங்களில்
சிறைப்பிடிக்கப்பட்டாள்!

இளைப் பாற முடியாமற்போன
வீடு துறந்து...
தன் தேர்வுகளின் மீதான
சுயநிந்தனைகளுடன்....
தன்னை வெறுத்து
தன் நாமம் கெட்டு
“அவன்தாள்” சேர்வதற்காய்
வீடு திரும்புதலற்றதோர் பயணம்!

கைவிடப்பட்டவர்களின்
கதைகள் இவ்வாறுதான் ...
துரத்தும் இறந்தகாலமும்...
அச்சுறுத்தும் எதிர்காலமுமாய்...
நிகழ்காலத்தின் பிடியில்
சிக்கித்தவிக்கும்!

கருக்கலைப்புகளும்
பெண் சிசுக்கொலைகளும்
பால்ய விவாகமும்
வைதவ்யங்களுமாய்த்
துயருற்ற பெண்களில்...
இவள் “தனி“ வகை!

பிரிவின் வெளிகளில்....
நிகழ்ந்ததோர் ஞானத்துறவு!

இருப்பின் அலைதல்களில்
வற்புறுத்தப்பட்ட மடைமாற்றத்தில்...
வெற்றிடம் நிரப்பும் வகையற்று...
செல்லரித்துப் போகாமல்...
சொல்லெடுத்துப் பாடி
தனது கோப்பையினைத் தானே
வலிந்து

தெய்வீகத்தால் நிரப்பினாள்!

தேவ தேவியருள் ஒருவள் என்று
புறக்கணித்தனர்!
போஷிக்காமல்......
“பேயாய்“ அலையவிட்டனர்!
“கல்லறைப் புனிதப் பொருளாய்..
வரலாற்றுச் சான்றாய்...“
காலங்கள் கடந்தும்
நிலைத்திருப்பவளாய்...
அதே காலம்
ஒரு மாம்பழத்திற்காய்....
அவள் வாழ்வை
வேரோடு சாய்த்தது!

புற உலகோ
உடலைத் துறக்க வைத்தது!
அக உலகோ
இன்றும் நின்றாள்கின்றது!

அவள்
வாழ முற்பட்டதால்தானே
சுற்றம் சூழ தத்தனைத்
தேடிப் போனாள்?

சிவனால் ஆட்கொள்ளப்படப்
பிறந்தவளாயின்
இடையில்...
“நரன்“ பரமதத்தனுக்கேன்
மனைவியானாள்?!

இங்கு
நிராதரவுகளின் முடிவு
துறவு!
பிரக்ஞைபூர்வமான விலகல்!
எதிர்கொள்ளல்களின் வலிகளில்
வில்லிலிருந்து விடுபட்ட
அம்பாய்.....
தனிமைச் சிறையிலிருந்து
தெறித்துத்
திரும்ப விரும்பாமல்
விடுபட்டாள்!

இருப்பிற்கும்
எதிர்பார்ப்புகளுக்குமிடையிலான
இடைவெளிகளில்...
நிர்ச்சலன மௌனங்களுடன்...
ஆன்மீகம் என்ற பெயரில்
துரோகம் இழைத்தவனைக் கூட
நிந்திக்காமல்
நிசப்தங்களுள்.....
தொலைந்து போயினாள்!

வருத்தம் தெரிவித்தலற்றதும்
வருத்தப்படலுமான
வாழ்க்கையை விடுத்து
கண்களை மூடிக்கொண்ட
கடவுளின் முன்னிலையில்
மனவெளியை மோதிய
அழைப்பில்....
சிந்திக்க வாய்ப்பின்றி
அவள்
துறவியாக்கப்பட்டாள்!

தனக்குத் தானே
தனியாய்ப் பெய்யும் மழையாய்...
ஒரு பேதைப் பெண்
“பேய்” நாயனார் ஆனாள்!
“பொய்“ சொல்லத் தெரியாமல்
சொன்ன “மெய்“
அவளையே திருப்பிச்
சுட்டு விட்டது!

ஒரு சின்னப் பெண்ணை
“அம்மையார்” ஆக்கிக்
குதூகலித்த
குரூரம்!

புசிக்க கனி அளித்த
புனிதவதியின் வாழ்வை
புனிதமாக்குவதாய்
புதைத்து விட்டார்கள்!

பேச வாய்ப்பளிக்காமலே
துரோகத்தை...
தள்ளி வைத்தல்களை...
புனிதப் பூச்சினுள்
மறைத்து வைத்தனர்!

கூடச்சேர்ந்து வாழத்
தனக்காய்ப் பிரார்த்திக்காமல்
புறக்கணித்த புருஷனுக்காகவும்
தள்ளிவைத்த சமூகத்திற்காகவும்
புனிதவதி பிரார்த்தித்தாள்!

பொருட்செல்வமே குறிக்கோளாய்
வாழ்ந்த தத்தனுடன்
அருட்செல்வமே வாழ்வாய் வாழ்ந்த
புனிதவதி
ஒரு மாம்பழத்தினால்
தத்தன் மனமறிந்தாள்!

முதல் மாற்றம்
அன்று நிகழ்ந்தது!

மறுதாரம் கொண்டு
காலில் விழுகையில்
தன் புலமையும் தேவமும்
கண்டஞ்சிய
“பேடி“ என்றறிந்து
மனம் வெதும்பி
முழுமாற்றம் கொண்டாள்!

வாழ்தலின் மீதெழுந்த
அவநம்பிக்கையும் ஏமாற்றமும்
பற்றுக்கோடின்மையும்
அந்த திவ்வியாத்மாவினை
இறைவனைத்
தானாய்ப் பற்றவைத்தன!

ஆண்சார் உலகத்தின்
சவால்களில்...
தன் நேசத்தை.. பிரேமையை...
உலகம்
கொச்சைப்படுத்தி விடக்கூடும்
என்றஞ்சி.....
ஒரு கர்மயோகியாய்...
தன் மீளாப் பயணத்தில்...
பக்தியைப் “பிரபக்தி“யாக்கி..
அவள் இறைவனுக்கே
தாயானாள்!

இறைவனுக்கு மட்டுமன்றி
இவ்வுலகிற்கே தாயாக மாற
இல்லறத்தினால் மட்டுமல்லாமல்
துறவறத்தினால் கூட
முடியுமென்று நிரூபித்த
முதற் பெண் இவள்!
இறைவன் மீது
பாடல் பாடிய
முதற் பெண்ணும் கூட
பேயாகித் தாயானவள்
பூமி மீதான உறவுகளில்
மனம் கசந்து...
மரணத்தைத் தேர்ந்தெடுக்க
முடியாமல்...
துறவைத் தேர்ந்துகொண்டு
தன் - முழுவாழ்விற்கும்
அர்த்தம் கற்பித்தாள்!

**- செல்வமனோகரி**

குறிப்பு:
காரைக்காலம் மையார் வரலாற்றினை
மையமாகக் கொண்டு புனையப்பெற்றது.
கட்டியங்கள்:- முன்னறிவிப்பு
கர்மயோகி:- உடல், மனம், வாக்கினாற்
செய்யப்படும் செயல்களை விருப்பு,
வெறுப்பற்றுச் செய்தல்.
பிரபக்தி:- சரணாகதி

தேவமுகுந்தன்

# கிளாடி ஜெராட்டின் ஈடற்றவள்

பாடல் - ஈடற்றவள்
இயற்றியவர் : கண்ணன் நாராயணன்
பாடியவர் ::- மதுபாலா கிருஸ்னன்
தயாரிப்பு: கிளாடி ஜெராட்
Youtube link https://youtu.be/nUqE-mrUhx4



Music Director : Kannan Narayan



Visualization : Jayaprakash Radakrishnan



Producer : Glady Gerad



Lyricist : Nigaran



Mathubalakrishnan

*“அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்” என்பது ஔவையின் வாக்கு. எங்களின் கண் கண்ட தெய்வமாக தாய், தந்தையரைக் குறிக்கும் இந்த ஆத்திசூடி வரிகள் தாய், தந்தையருக்கு தமிழன் கொடுக்கும் மதிப்பை உணர்த்தி நிற்கிது. மேலும் “மாதா, பிதா, குரு, தெய்வம்” என்ற வரிகளில் தமிழன் தாய்க்கு கொடுக்கும் முக்கியத்துவத்தினை பறைசாற்றி நிற்கிறது. தமிழில் உள்ள சிறந்த நூலான திருக்குறளில் தாய்மையைப் பற்றிய குறள்கள் காணப்படுகின்றன.*

*வியாபார மயமாகி விட்ட இன்றைய சூழலில் மேற்கத்தைய வணிக நிறுவனங்களால் தமது உற்பத்திகளின் சந்தை வாய்ப்புக்களை அதிகரிக்கும் நோக்கில் உருவாக்கப்பட்ட அன்னையர் தினம் கால்நூற்றாண்டுக்கு மேலாக இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் கொண்டாடப் படுகிறது. முதியோர் இல்லங்களில் வாழும் தமது தாய்மாரை பிள்ளைகள் சென்று பார்க்கும் ஒருநாளாக இந்த சர்வதேச அன்னையர் தினம் மாறிவிட்டது பெரும் சோகம். வருடத்தில் உள்ள **365** நாட்களில் ஒருநாளாவது தமது அன்னையரை நினைவு கூர இத்தினம் பலருக்கு சந்தர்ப்பத்தினை அளிக்கிறது.*

*இந்தப் பின்புலத்தில்தான் டென்மார்க்கில் வாழும் ஈழத்தவரான கிளாடி ஜெராட் அவர்களினால் உருவாக்கப்பட்டு “சர்வதேச அன்னையர் தினமான **11.05.2025** அன்று வெளியிடப்பட்ட “ஈடற்றவள்” என்ற பாடலை நோக்க வேண்டியுள்ளது.*

*சர்வதேச அன்னையர் தினத்திற்கு மறுநாளான **12.05.2025** (திங்கட்கிழமை) அகில உலகெங்கும் வாழும் தாயை இழந்த இந்துக்களால் தாயை நினைத்து சித்திராப் பௌர்ணமி விரதம் அனுசரிக்கப்பட்டு வருவதும் இங்கு பொருத்தமாக வருவது சிறப்பு. ஈடற்றவள் என்னும் பாடலின் கண்ணன் நாராயணனின்(இளையராஜாவின் குழுவிலும் அங்கம் வகிப்பவர்) பாடல் வரிகள் எம்மை எம் குழந்தைப் பருவத்திற்கு இட்டுச் செல்கின்றன. அருமையான பாடல், அர்த்தம் பொதிந்த வரிகள் அவை.*

*ஜெயபிரகாஸ் இராதாகிருஷ்ணனால் உருவாக்கப்பட்ட பின்னணிக் காட்சிகள் மிகுந்த நேர்த்தியுடன் உருவாக்கப்பட்டுள்ளன. அவை பாடலை கருத்துடன் இரசிக்க வழிகோலுகின்றன. பின்னணி இசை கர்ச்சிதமாக பொருந்துகிறது. பாடலைப் பாடிய குரல் எம்மிடையே மெல்லிய சோகத்தினை ஏற்படுத்தி ஓரிரு கண்ணீர்த் துளிகளை வரவழைக்கின்றன. எனினும் பாடலில் காணப்படும் சில உச்சரிப்புத் தவறுகள் மனதை இலேசாக நெருடத்தான் செய்கிறது.*


*இப்பாடலின் மெட்டு சிறுவயதில் நான் தேவாலயங்களில் கேட்ட பாடல்களை நினைவூட்டுகின்றது. இது இப்பாடலின் பெறுமதியை அதிகரிக் கின்றது. தனது நேரத்தினையும் உழைப்பையும் இப்பாடலுக்காக செலவளித்து தயாரித்தளித்த நண்பர் லக்ஸ்மன் (கிளாடி ஜெராட்) பாராட்டுக்குரியர். இப்பாடலை பரவலடைய வைத்து தாயின் பெருமையை உலகெங்கும் எடுத்துச் செல்ல வேண்டியது. அவர் ஈழத்தவர்.*

https://youtu.be/nUqE-mrUhx4

# வியாக்ரன்


கொமிக்ஸ் தொடர்

கதை - இ.சு.முரளிதரன்
வரைகலை - ஷாயினி வித்தி ஆனந்தன்
தரம் - 12 உயிரியல்
யா/ சுண்டிக்குளி மகளிர் கல்லூரி





















வேட்டைக்காரன் துப்பாக்கியோடு மானை நோக்கிச் சென்றான்


டுமீல் டுமீல்


அப்பா வேட்டைக்காரர்களை விரட்டுவோம்
அவசரப்பட்டு நிதானத்தை இழக்கக்கூடாது பதுங்குதல், தேவையற்ற மோதல் தவிர்த்தல், தப்பித்தல், காயமின்றி வாழ்தல் நமது இனத்தின் குணம்.


உடல் எடையில், நீளத்தில், மரமேறுவதில் தாக்கும் திறனில் சிங்கத்தைவிட சிறந்தவர் நாம்
காட்டரசன் மணிக்கு 80 கிலோமீற்றர் வேகம்கொண்டவன். நாம் 60 கிலோமீற்றர் தான். யாரையும் தாழ்வாக எண்ணக்கூடாது



அரசர் பார்த்துக் கொள்ளுவார் என்று பின்வாங்கப் போகிறோமா அப்பா?
இல்லை வியாக்ரா வனக்காவலர் நாம்தான் பதுங்கிப் பாய்வோம்



வேட்டைக்காரர் ஓய்வாக அமர்ந்திருந்த நேரத்தில் வல்லியன் அவர்கள் மீது பாய்ந்தது.

(தொடரும்)

ஐங்கரன் விக்கினேஸ்வரா

# யாழ்ப்பாணத்தில் உதயமான ஈழநாடு: ஊடகத்தில் பிரகாசித்த எஸ்.கே.காசிலிங்கம் !




ஈழத் தமிழரின் கலாச்சார பண்பாட்டு தலைநகரமான யாழ்ப்பாணத்திலிருந்து மக்களின் குரலைப் பிரதிபலிக்கும் நோக்கத்துடன் பத்திரிகைகள் எதுவும் இல்லாத பெரும் குறையைப் போக்க 1958 ஆம் ஆண்டில் ஈழநாடு முதலில் வெளிவரத் தொடங்கியது.

இந்த ஊடக பாரம்பரியத்தில் உருவாகிய "எஸ்.கே.காசிலிங்கம்" ஐரோப்பிய நாடுகளிலும் பிரகாச மான ஊடகவியலாளராக மிளிர்கிறார். அவரின் வாழ்க்கையின் உன்னதத்தை வெளிப்படுத்தும் வண்ணம் அமுத விழா நடைபெறுகிறது.

யாழ்ப்பாணம் ஈழநாடு பத்திரிகையிலும் பாரிஸ் ஈழநாடு பத்திரிகையிலும் தன்னை ஊடகவியலாளராக இணைத்துக் கொண்ட எஸ்.கே.காசிலிங்கம் தனது வாழ்க்கையிலும் பத்திரிகைத் துறையிலும் பெற்றுக் கொண்ட அனுபவங்களையெல்லாம் தொகுத்து "எனக்குள் என்னோடு" என்ற நூலாக வெளியிட்டுள் ளார். இந்நூல் பற்றிய சிறு பார்வையை இவ்வாக்கம் அலசுகிறது.

**சாம்பலிருந்து உயிர் பெறும் ஈழநாடு:**

நம் தமிழ் மண்ணை, நம் தமிழராலேயே, நம் தமிழர் நலன் காத்திட வேண்டுமென்ற பேரவாவின் பேறாய் உதயமானது தான் ஈழநாடு. இப்பத்திரிகை எத்தனையோ இன்னல்களுக்கும் இடர்களுக்கும் இழப்புகளுக்கும் மத்தியில் சாம்பலிருந்து உயிர் பெற்றுப் பறக்கும் பறவை போன்று உயர உயர பறந்தது என்கிறார் மறைந்த மூத்த பத்திரிகையாளர் சசிபாரதி சு.சபாரத்தினம்.

விடிந்தும் விடியாததுமாய் உள்ளூர் பத்திரிகையை வாங்கிப் படிக்குமளவுக்கு ஈழநாடு எம்மவரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தியது என்றால் அது ஒரு வியத்தகு சாதனை தான். அன்று தேசியத்தில் பற்றும் நம்பிக்கையும் கொண்டிருந்த தமிழர் விழித்துக் கொண்டனர். யாழில் நாளிதழ் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திய பெருமை ஈழநாடு பத்திரிகையையே சாரும்.

அரசியல் மற்றும் சமூக இடர்ப்பாடுகளை யெல்லாம் தைரியமாக ஊடறுத்துப் பத்திரிகையின் இலட்சியத்திற்காய் உழைத்தவர் கோபு. திரு. காசிலிங்கம் உட்பட.. என்கிறார் மறைந்த மூத்த பத்திரிகையாளர் சசிபாரதி சு.சபாரத்தினம்.

**தீயில் கருகிய யாழ் நூலகமும் - ஈழநாடும் :**

தமிழ்மக்களின் பண்பாட்டு அறிவுப்பெட்டகமாக வும், அணையாத அறிவாலயமாக மிளிர்ந்த யாழ் நூலகமும், ஈழநாடு பத்திரிகை அலுவலகமும் அரச பயங்கரவாத உச்சத்தில் 1981 ஜூன் 1 ஆம் திகதி தீ மூட்டி எரிக்கப்பட்ட கொடூர நாளாகும்.

சிங்கள அடக்குமுறை அரசுகளின் தொடர்ச்சி யான 1958, 1977, 1883 இல் நிகழ்ந்த திட்டமிடப்பட்ட இனக் கலவரங்களால் தமிழர்களின் பொருளாதார வளங்களும், அறிவியல், பண்பாட்டு நிலையங்களும் அழித்து நாசமாக்கப்பட்டன.

தென்கிழக்காசியாவில் முதன்மையாக விளங்கி யது இப்பொதுசன நூலகம். மேலும் சர்வதேச நூலக மட்டங்களுடனும் யாழ் நூலகம் சிறப்பான நிலையி லிருந்தது. அச்சியந்திர சாதனங்கள் எழுமுன்பாக கையால் எழுதப்பட்ட சுவடிகள், பனையோலை வாசகங் கள் இப்படியாக தொல்பொருள் நிலையம் போன்ற யாழ் நூலகம் செயற்பட்டு வந்தது. நூலக காங்கிரஸில் யாழ் நூலகம் அங்கத்துவம் வகித்தது.

இதன் தொடர்ச்சியாகவே யாழ். நூலகமும் தீக்கிரையானது. இச்செயல்கள் அனைத்தும் அரசின் திட்டமிடப்பட்ட செயலாகவே அமைந்தன. யாழ். எம்.பி.யின் வீடு, ஈழநாடு பத்திரிகை அலுவலகம், நகர வர்த்தக நிலையங்கள், ஆகியனவும் நாச்சிமார் கோவி லும் இக்கால வேளையிலேயே எரித்து நிர்மூலமாக்கப் பட்டன. இவ் எரிப்புகள் எல்லாவற்றிலும் மேலாக யாழ். நூலகம் எரிக்கப்பட்டதே தமிழ் பேசும் மக்களின் பாரிய இழப்பாகும்.

**தமிழரின் குரலாக ஈழநாடு:**

தென் பகுதியிலிருந்து வெளிவரும் எந்தத் தமிழ்ப் பத்திரிகையும் ஈழத் தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுக்கத் தயங்கியதால், ஈழநாடு தமிழரின் குரலாக யாழில் இருந்து வெளிவந்தது.

ஆனாலும் *1960* களில் கொழும்பிலிருந்து வெளிவரும் சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகளுக்கு தான் யாழ்ப்பாணத்திலும் மதிப்பளித்தார்கள். ஆனால் அதனை தகர்த்து, பல காலமாக நஷ்டங்களையும், கஷ்டங்களையும் அர்ப்பணித்ததின் பயனாக, வடக்கே ஒரு சூரியனாக ஈழநாடு உருப்பெற்று ஊருக்கெல்லாம் வெளிச்சம் தந்தது.

ஈழத் தமிழர்கள் அவ்வெளிச்சத்தின் வழியே நடைபோட்டனர். தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத ஓர் இடத்தை, தனித்துவத்தை - ஈழநாடு பெற்றது என்கிறார் மறைந்த மூத்த பத்திரிகையாளர் சசிபாரதி சு.சபாரத்தினம்.




**ஈழநாடும் காசிலிங்கமும் :**

இப்படியாகவே ஈழநாடு வேகமாக ஓடிக் கொண்டிருந்த காலகட்டத்தில் தான் எஸ்.கே.காசி லிங்கம் அவர்கள் ஆசிரியர் பகுதியில் நுழைந்தார். அவரும் ஒரு வேக ஓட்டக்காரர்தான். அவர் நடந்து சென்றதை நான் பார்த்ததில்லை.

மிகுந்த மதிநுட்பமும் சுறுசுறுப்பும் கொண்ட திரு. காசிலிங்கம் தொடர்ச்சியாக அவர் ஆசனத்தில் இருந்ததையும் எவரும் கண்டதில்லை. ஆசிரியர் பகுதியில் ஒரு பயிற்சியாளனாகச் சேர்ந்த அவர், ஓரிரு நாட்களிலேயே பிரகாசிக்கத் தொடங்கிவிட்டார் என்கிறார் மறைந்த மூத்த பத்திரிகையாளர் சசிபாரதி சு.சபாரத்தினம்.

**எனக்குள் என்னோடு :**

மூத்த பத்திரிகையாளர் எஸ்.கே.காசிலிங்கம் தனது வாழ்க்கையிலும் பத்திரிகைத் துறையிலும் பெற்றுக் கொண்ட அனுபவங்களையெல்லாம் தொகுத்து "எனக்குள் என்னோடு" என்ற நூலாக வெளியிட்டுள்ளார். இந்நாலின் என்னுரையில் தான் கண்டுகொண்ட மானிடர்களையும் பதிவு செய்யும் வகையில் நூலொன்றையாவது வெளியிட வேண்டு மென்று நீண்டகாலமான தனது விருப்பத்தினை இந்நூல் மூலமாக வெளிப்படுத்தியுள்ளார்.

மேலும் ஈழநாடு காரியாலயத்தில் காசிலிங்கம் பணியாற்றிய காலத்தில் கிடைத்த அனுபவங்களை நூலாக்கும் தனது ஆசையை "எனக்குள் என்னோடு" என்ற நூல் மூலம் நிறைவேற்றிக் கொண்டுள்ளார்.

இலங்கை அரசியலில், சிங்கள அரசுகள் திட்டமிட்டு தமிழரை ஏமாற்றி வருகிறார்கள் என்பதையும், தமிழ்த் தலைவர்களின் தூரநோக்கற்ற பார்வை காரணமாகவே, ஈழத் தமிழர் அவல நிலைக்குத் தள்ளப்பட்டார்கள் என்பதையும் பதிவு செய்ய வேண்டுமென்ற நோக்கமும் இந்நூல் எழுத தன்னைத் தூண்டியது என்கிறார் எஸ்.கே.காசிலிங்கம்.

தன் இதயத்தில் பொதிந்துகிடந்த - மறைந்து கிடந்த - பல நிகழ்வுகளை நூல் வடிவில் கொண்டுவர வேண்டுமென்று விரும்பியதால் இதனை மூன்று பெரும் தலைப்புகளில் படைத்து, "என்னுள் என்னோடு" என்று எஸ்.கே.காசிலிங்கம் பெயரிட்டு உருவாக்கியுள்ளார்.

அத்துடன் எஸ்.கே.காசிலிங்கம் சிறு வயதிலேயே பத்திரிகைத் துறையில் நாட்டம்கொண்டு, ஈர்க்கப்பட்டு, யாழ்ப்பாணம் "ஈழநாடு" பத்திரிகையில் சேர்ந்து, அங்கு ஏற்பட்ட பலவிதமான அனுபவங்களை, "பத்திரிகை அனுபவங்கள்" என்ற முதலாம் பாகத்தில் பதிவு செய்துள்ளார். இவற்றில் பெரும்பாலானவற்றை "பாரிஸ் ஈழநாடு", "லண்டன் தமிழன்" ஆகிய பத்திரிகை களில் ஏற்கனவே வெளிவந்துள்ளன.

இரண்டாம் பாகத்திற்கு "அரசியல்" என்று தலைப்பிட்டு, இலங்கையில் *1948* ஆம் ஆண்டு முதல் தற்போதுவரை, மாறி மாறி வந்த அரசாங்கங்களின் நடவடிக்கைகளை ஆராய்ந்து, தமிழர்களை எப்படி யெல்லாம் ஏமாற்றி, தமிழினத்திற்கு எதிரான நடவடிக்கை களை எஸ்.கே.காசிலிங்கம் சிறப்பாக பதிவு செய்திருக்கிறார்.

மூன்றாம் பாகத்திற்கு, "புலம்பெயர் வாழ்வியல்" என்று தலைப்பிட்டு ஐரோப்பிய நாடுகளில் ஈழத் தமிழர்களின் வாழ்வியல் முறைகளையும், வளர்ந்து வரும் தமிழெழுச்சியையும் எஸ்.கே.காசிலிங்கம் வெளிப்படுத்தி இருக்கிறார்.

இதில் பெரும்பாலானவை லண்டனிலிருந்து ஒலிபரப்பாகும் அனைத்துலக ஒலிபரப்புக் கூட்டுத்தாபன (I.B.C.) நிகழ்ச்சிகளில் எஸ்.கே.காசிலிங்கம் அவர்கள் கலந்துகொண்டு தெரிவித்த கருத்துகளாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஈழநாடு ஊடக பாரம்பரியத்தில் செழித்து வளர்ந்த "எஸ்.கே.காசிலிங்கம்" ஐரோப்பிய நாடுகளிலும் பிரகாசமான ஊடகவியலாளராக என்றும் மிளிர்கிறார். அவரின் வாழ்க்கையின் உன்னதத்தை வெளிப்படுத்தும் வண்ணம் அமுத விழாவில், கங்காருகள் தாவித் திரியும், சிங்காரத் தமிழர் வாழும் அவுஸ்திரேலிய மண்ணில் இருந்து வாழ்த்துவதில் மிக்க பெருமை அடைகிறோம்.

திக்குவல்லை கமால்



# பெருநாள் சல்லி

தக்பீர் முழக்கமும் புத்தாடைப் புனைவுகளும் அத்தர் வாசமுமாய் நோன்புப் பெருநாள் குதூகலித்துக் கொண்டிருந்தது.

இதற்கிடையில் ஓடோடி வந்த ஸகியைக் கண்டதும் அவனது டடாம்மாவுக்கு இருப்புக் கொள்ள வில்லை.

"ஜாதி சேட்டொன்டுடா" - தொட்டுப் பார்த்த படி முதற் பாராட்டைத் தெரிவித்தார்.

" கொழும்பால வாப்ப கொணந்த.சரிசரி ஸலாம் செல்லோம் "-அவன் அவசரக் குடுக்கை அல்லவா?

நான்கு மணிக்கைகளும் சங்கமித்த நிலையில் பாட்டியும் பேரனும் ஸலாம் சொல்லி, கைகளை முகத்திலும் நெஞ்சிலும் தடவிக் கொண்டனர். அத்தோடு விட்டுவிடாமல் பேரனை அணைத்து நெற்றியில் வேறு முத்தமிட்டார்.

"புட்டுக் கொஞ்சம் தின்டிட்டு போ புள்ள. சவ்வரிசிப் பாலுமீக்கி"

"நான் ஊட்டில தின்டிட்டு வந்த டடாம்மா"- அவசரப்பட்டவனாய் அங்குமிங்கும் பார்த்துப் படபடத்தான்.

ஸகியின் குரலைக் கேட்டு புத்திளைஞனைப் போல் ஆரவாரமாக முன்னே வந்தார் டடாப்பா.

அவரோடும் ஸகி ஸலாம் சொல்லிவிட்டு அலாதியாகச் சிரித்தான். அந்தச் சிரிப்பில் ஓர் எதிர் பார்ப்பு தொக்கி நின்றது.

அவர் தன் பெருநாள் சேட் பொக்கற்றிலிருந்து புதிய ஆயிரம் ரூபாத் தாளொன்றை எடுத்து நீட்டினார்.

"ஜஸாக்குமுல்லா" - என்று நன்றி சொல்லிக் கொண்டு, தனது பின்பொக்கற்றில் சொருகியிருந்த கபிலநிறப் பேர்ஸை எடுத்து விரித்தான்.

"எவளவு சேந்தீக்கன் ?"-டடாம்மா ஆவலோடு கேட்டார்.

அவன் தனக்குக் கிடைத்துள்ள மூன்று ஆயிரம் ரூபாத் தாள்களையும் ஓர் ஐநூறு ரூபாத் தாளையும் காட்டிவிட்டு ஓடப் பார்த்தான்.

"ஐஸ்கிரீம் தின்டுதின்டு வெடில் போட்டுப் போட்டு சல்லிய அநியாய மாக்காம பத்திரமா வெச்சிக்கோ"- டடாம்மா புத்தி சொல்லி முடிப்பதற் கிடையில் பின்ரோட்டில் "டும்டும் " என்று வெடிச் சத்தம் கேட்டது.

இனி ஸகியை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது. அவன் மின்னல் பாய்ச்சலில் பறந்து விட்டான்.

டடாம்மா வீட்டுக்குப் பின்னால் செல்லும் கிறவல் பாதையில், நாளைந்து பொடியன்னல் பட்டாசு வீசிவீசிப் போய்க்கொண்டிருந்தார்கள். வெடிப்புகை லேசாகப் பரவிக்கொண்டிருந்தது.

ஸகியின் மனசில் எங்கெங்கே போக வேண்டு மென்ற பட்டியல் விரிந்து கிடந்தது. அதன்படி இந்தப் பாதையில் பெரியப்பா வீடும் பூச்சாச்சி வீடும் இருந்தன. அவன் கால்கள் அப்பக்கமாக நடந்தன.

போன வேகத்தில் மீண்டும் ஸகி வந்ததைக் கண்ட டடாம்மா சர்வத் கோப்பை ஒன்றைக் கொண்டுவந்து நீட்டினார்.

"கூல் போதா"- என்றவாறு குடிக்க ஆரம்பித்தான்.

"இப்ப ஐயாயிரம் ஈக்கி டடாம்மா. எப்பிடிச்சரி நங்கியப் பாக்க கூடச் சேத்தோணும்".

"மெய்யா? கவனமா வெச்சிக்கோ.இன்டக்காலும் கூத்தியள கொறச்சிக்கோ".

"ஓவா"- என்றவாறு மறுபக்கமாக ஓடத் தொடங் கினான்.

"இவன் ஓடிய ஓட்டத்தப் பாத்தா எப்பிடீம் பத்தாயிரம் சேத்திக் கொளுவான்"- வெற்றுக் கோப்பை களுடன் வந்த டடாப்பா சொன்னதை அவள் சிரித்து அங்கே.

வீட்டுக்கு வந்தேறும் உறவினர்களை கேக்கும் சர்வத்தும் பகிர்ந்து வரவேற்பதைத் தவிர அவளுக்கு அன்று வேறு வேலைகள் எதுவும் இல்லை. இடை யிடையே வாழ்த்துக் கோல்களுக்கும் குறைச்சல் இருக்க வில்லை. சின்ன மகன் ஏழாயிரம் ரூபாய்க்கு புரியாணி சவனுக்கு ஓடர் கொடுத்திருப்பது பெரிய ஆறுதல்.

***

கொட்டாவத்தையில் பட்டாசு வெடில் விளை

யாட்டு ஓஹோவென்று நடந்து கொண்டிருந்தது. கொளுத்தி நிலத்தில் விட்டதும் நிலாத்துகள்களைப் பீச்சியபடி சுழலும் சக்கரம் அவனுக்கு மிகவும் பிடிக்கும்.

"ஸகி வாவா "- என்ற அழைப்பு அதற்குள் நின்ற நஜாவிடமிருந்துதான்..

நோன்புகால இரவுகளில் பள்ளிவாசலுக்கு குர்ஆன் பாராயணம் செய்யப்போய் கிடைத்த நண்பன் அவன்.

ஸகியும்போய் அவர்களோடு இணைந்து கொண்டான். எல்லோர் கையிலும் பணம் இருந்ததால்

ஒருவர் மாறி ஒருவராக பட்டாசும் சக்கரமும் கொண்டு வந்தனர்.சக்கரத்தைத் தன்பாட்டில் சுழல விடாமல், ஃபுட்போல் அடிப்பதுபோல் மாறிமாறி தள்ளி ஓஹோவென்று இன்பம் அனுபவித்தனர்.

புதிய உடுப்பு என்பதைக்கூட எல்லோரும் மறந்து தான் போயிருந்தனர். விளையாட்டு தொடர்ந்தது.

நேரம் பன்னிரண்டு மணி நெருங்கியுள்ளதை ஸகி கட்டியிருந்த அவனைவிடப் பெரிய மணிக்கூடு காட்டியது.

பகல்வேளை சாப்பிட்டுவிட்டு மீண்டும் வருவதாகப் பலரும் பேசிக் கொண்டனர்.நஜாவிடமிருந்து விடைபெற்றுக் கொண்டான் ஸகி. அவனுக்கு நடப்பது மிகவும் சிரமமான காரியம். அதனால் ஓட ஆரம்பித்தான்.

பட்டாசுக் கடையை சிறுவர்கள் மொய்திருப்பதைக் கண்டான்.தங்கச்சிக்கு கூத்துக் காட்ட சக்கரம் நூறு ரூபாவுக்கு வாங்கும் எண்ணம் அவனுக்கு ஏற்பட்டது. கடைக்கேறி பேஸை எடுக்கப் பார்த்போது இடி விழுந்தது போலிருந்தது அவனுக்கு. பேஸைக் காணவில்லை. சும்மாவா? ஐயாயிரம் ரூபா! அவன் குழம்பித்தான் போனான்.

எங்கே விழுந்திருக்கும் ?

மீண்டும் ஸகி திரும்பி அதே பாதையை நுணுக்கமாகப் பார்த்தபடி கொட்டாவத்தைக்கு வந்தான். அங்கு எவரையும் காணவில்லை.எந்தெந்த வீடுகளுக்கு ஏறினானோ அங்கெல்லாம் சென்றான். "ஸகி இது ஒங்கட பேஸா?"- என்று எவராவது கேட்கவேண்டுமென எதிர்பார்த்து ஏமாற்ற மடைந்தான்.இனி எஞ்சியிருப்பது டடம்மா வீடு ஒன்றுதான்.

ஸகி வருவதைக் கண்டபோதும் அவன் களைத்து வியர்த்துப் போயிருப்பதை டடாம்மா பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.எப்படியும் ஏழெட்டாயிரத்தைத் தாண்டியிருப்பான் என்றுதான் நினைத்தார்.

"டடாம்மா ஏன்ட பேஸ் இருந்தா?"- அவனது குரலும் தளர்ந்து போயிருந்தது.

"இல்ல" என்று தலையாட்டியபடி "இல்லாப் போட்டோ?...எவளவீந்தன் ?"-இரட்டைக் கேள்வி கேட்டார்.

"ஐயாயிரமீந்த"

"ஓன்ட கூத்தாலேம் அவசரத்தாலேம் செஞ்சிக் கொளுகிய வேல. ம்...ஊட்டில வெச்சிப் பட்டோ தெரிய"

"நான் இன்னும் ஊட்டுக்குப் பொகல்ல. ளொஹருக்கு பாங்கு செல்லிய டைமுக்குத்தான் உம்மா வரச்சென்ன"

" அப்ப போனவந்த எடத்தியல்ல பெய்துப் பாரு "

"ம்... நான் பெய்த்துப் பாத்திட்டு ஊட்டுக்குப் போறன்"- சோர்ந்து போனவனாக ஸகி வெளியிறங்கினான்.

டடம்மா சொல்லுமுன்பே அவன் எல்லா இடங்களிலும் தேடிப் பார்த்துவிட்டான்.இனி வீட்டுக்குத்தான் போக வேண்டும். உம்மாவிக்குத் தெரிந்தால் ஏச்சும் வாப்பாவுக்குத் தெரிந்தால் அடியும் விழத்தான் செய்யும். வீட்டில் சொல்லவும் வேண்டும் சொல்லாமல் இருக்கவும் வேண்டிய நிலை.

அன்று பெருநாள் என்பதையே ஸகி மறந்துபோய் விட்டான்.

***

பதுங்கிப் பதுங்கி வீட்டுக்குள் புகுந்தான் நஜா. அவனுக்கு பெருநாளைக்கென்று இளநீல நீண்ட ஜூப்பா ஒன்று வாங்கிக் கொடுத்திருந்தார்கள். எதையும் பத்திரமாக வைத்துக் கொள்ளத்தக்க உள்பக்கப் பைகள் இரண்டு இருந்தன.ஒரு பக்கப் பை சற்றே கனதியாகத் தெரிந்தது அவனுக்கு.

வீட்டின் முதலாம் அறையில் அலுமாரிக்குப் பக்கத்தில் போய் நின்றான். உம்மா, வாப்ப எவரும் இப்போதைக்கு வரமாட்டார்கள் என்பதை உறுதிசெய்து கொண்டான். வலப்பக்கப் பையிலிருந்த அந்த கபிலநிற பேஸை வெளியே எடுத்தான். கவனமாகத் திறந்து பார்த்தான். ஐயாயிரம் ரூபா அதில் இருந்தது. குட்டிக் குட்டி மடிப்புக்களில் ஒரு வெள்ளைப் பேப்பர் துண்டு மட்டுமே இருந்தது.அதில் "ஸகி அஹமத்" என்ற பெயர் இருந்தது.

ஸகி விளையாடிவிட்டு ஓடும்போது அவனது பின்பக்க பையிலிருந்த பேஸ் பாதை ஓரமாக விழுந்ததை நஜா தெளிவாகக் கண்டான்.

அவன் கட்டிலில் சாய்ந்தபடி யோசித்தான். ஐயாயிரம் ரூபா யார் தரப்போகிறார்கள்.! களவெடுக்கவில்லை.பொறுக்கியதுதானே!

"நஜா நஜா டக்கென்னு வா. மாம வாற"- முன் வாசலிலிருந்து உம்மாவின் குரல்.

மாமாவை சந்தோசமாக வரவேற்கும் முகபாவம் இல்லாதபோதும் , நஜா உள்ளேயிருந்து வருவதற்கும் மாமா வாசலில் காலடி வைப்பதற்கும் சரியாக இருந்தது.

உம்மாவும் மகனும் மாமாவை ஸலாம் சொல்லி வரவேற்று முஸாபஹா செய்து கொண்டனர்.இனி ஒருசில வார்த்தைகளாவது பேசாமல் போய்விட முடியுமா என்ன? சற்ற அமர்ந்து கொண்டனர்.

"நேத்து ராவு பள்ளிக்கி தொழப்போன. எனக்கு செரியான சந்தோஷம். ஹிஸ்பு ஓதின புள்ளயளுக்கு தொப்பி- சல்லி - ஸட்பிகேட் எல்லம் குடுத்த. ஹஸரத்தட துஆ மட்டுமே போதும். நான் நம்பல்ல நஜாம் நிண்டேன்"-

"ஓ...முப்பது நோம்பேம் புடிச்ச..அஞ்சி வகுதும் தொழுத...ஹிஸ்போதேம் போன...பைஸ்கள் வாங்கித் தாரென்டு வாப்ப செல்லீக்கி.இப்ப இவன் நல்ல புள்ள. ஒரு கொழப்பமும் இல்ல"- உம்மாக்காரி மேலும் மெருகூட்டினார்.

"நல்ல மாதிரி நடந்துக்கோ புள்ள.ஒத்தருக்கும் கரச்சல் குடுக்க வாண.அஞ்சாம் வகுப்பு சோதினேலேம் பாஸாகிக் கொள்ளப் பாரு. இந்தா புள்ள இத வெச்சிக்கோ"- மாமா ஆயிரம் ரூபாத் தாளொன்றைப் பொத்தினார்.

நஜாவின் பெருநாள் வரும்படி மூவாயிரம் ஷரூபாவாக அத்கரித்தது.ஐயாயிரம் ரூபா வேறு.

"ஒன்னும் குடிக்கேமில்ல. நான எழும்பீட்ட?"

"எல்லா எடத்திலேம் குடிச்ச. இன்னம் எத்தினயோ எடத்துக்குப் பொகோணும். அப்ப நான் வாறனே"- என்றவாற மாமா படியிறங்கினார்.

உம்மாவும் உள்ளே சென்றாள்.

நஜா பெருமூச்சு விட்டபடி கதிரையில் சாய்ந்தான்.

***

"எனத்தியன் புள்ள யோசிக்கிய. வா தின்னியத் துக்கி. வாப்ப வார டைமுக்கு வந்து தின்னட்டும்"- உம்மாவின் அழைப்பு.

"பசில்லும்மா. எனக்குத் தூக்கமும் வார"

உம்மாவை ஏமாற்றிச் சமாளித்தான் ஸகி.

நடந்துவிட்ட அபத்தம் அவனை வெகுவாகப் பாதித்திருந்தது.

"ட்றிங்ங்"

பெருநாளில் வருவதென்றால் சொந்தபந்தங்கள் தானே என்ற உறுதியோடு ஸகியின் உம்மா முன்னே சென்ற போது, அங்கே என்றுமே காணாத சிறிய முகமொன்று.

"ஸகி ஒன்னத்தான் தாரோ தேடி வந்தீக்கி"

ஸகி ஓடிவந்து எட்டிப் பார்த்தான்.அங்கே சிரித்த முகத்தோடு நஜா நின்றான்.

இருவரும் ஹிஸ்பு ஓதல் கூட்டாளிகள். வீட்டைப் பார்க்க வருவதாக நோன்பு காலத்தில் சொன்னது அவனுக்குச் சட்டென்று ஞாபகம் வந்தது.

"உம்மா என்னோட ஹிஸ்போதின"- அறிமுகம் செய்து வைத்தான்.

"மெய்யா? இனி கூட்டாளிக்கு தீன் சாமனியள் கொணந்து குடே"

அவன் உள்ளே சென்று கேக்... பூந்தி... ஞானகதா.. எல்லாம் அடங்கிய தட்டோடு வந்தான். உம்மா சர்வத்துடன் நிச்சயமாகப் பின்னால் வருவார்.

ஸகி அவற்றைப் பரிமாறினான்.இடையிடையே சிரித்துக் கதைத்துக் கொண்டனர்.

"நான் தேடிக்கொண்டு வந்தடா. ஜாதி ஊடு"-நஜா புகழ்ந்து சொன்னான்.

அதிக நேரம் அவன் சுணங்கவில்லை. விடை பெற்றுச் சென்றதும் ஸகி மீண்டும் பழைய நிலைக்கு வந்துவிட்டான்.

"எல்லாம் குசுனீல கொணபெய்த்து வெய் புள்ள"- என்று சொல்லிவிட்டு வழமைனோல் டீபோவைத் துடைத்து துப்புரவு செய்யும் பணியில் இறங்கினார் ஸகியின் உம்மா.

உள்ளேயிருந்து முன்வாசலுக்கு ஸகி வந்தபோது அவனுக்காக ஒரு கேள்வி காத்திருந்தது.

"எங்கியன் ஒன்ட பேஸ்?"

அவன் திக்குமுக்காடினான்.அப்போதுதான் பார்ப்பதுபோல பொக்கற்றுக்களைத் துழாவிப் பார்த் தான். "டடம்மாதான் கோல் பண்ணி பேஸ் காணாமல் போனதைச் சொல்லியிருப்பா" என்று நினைத்தான்.

"ஒண்ட கூத்து மிச்சத்தால ஏத்தியாலும் தெரிய.அன்ன அவடத்தில புழுந்தீக்கி"

உம்மா காட்டிய பக்கமாகப் பார்த்தான். உண்மைதான் அங்கே பேஸ் விழுந்து கிடந்தது. குனிந்து எடுத்ததும் முதல் வேளையாக திறந்து பண நோட்டுக் களை எண்ணிப் பார்த்தான். ஐயாயிரம் ரூபா அசையாமல் அப்படியே கிடந்தது.

தொலைந்து போன பெருநாள் மீண்டும் அவனிடம் வந்து சேர்ந்தது.

புரியாணி வாசம் மூக்கைத் துளைத்தது.

# கானலாகிப் போகும் காலம்



நிலவொளியில் நனையா இரவுகளாய்
நினைவுகளால் மறைவுற்றுக் கிடக்கிறது மனம்
கனவுகளின் இடுக்கில் சிக்குண்ட நீளாப் பயணத்தில்
குறுக்கிட்டுக் கடக்கிறது கடந்தகாலம்

ஓயாத கடல் அலைகளில் மிதக்கும் குச்சிபோல்
மீழாத நினைவலைகளில் சிக்குண்ட இதயத்தில்
ஏறியிறங்குகிறது மூச்சுக் காறற்றும் அதன் வெப்பமும்

தீராத் தாகத்தில் நாவறண்டு போனதுபோல்
வாராப் பதில்களால் வாழ்விழந்து
கிடக்கின்றன கேள்விகள்
தொலைவில் தென்படும் வெற்றிகளுக்காய்
கரைகின்றன இன்றைய இருப்புகள்


தொலைவனவை தேடப்படுகின்றன
அருகிருப்பவை மறக்கப்படுகின்றன
விருப்புக்கள் மறுக்கப்படுகின்றன
வெறுப்புக்கள் சேர்க்கப்படுகின்றன
கானல் வாழ்வில் கரைசேர வழியுண்டோ?

**கந்தர்மடம் அ.அஜந்தன்**

பிரேமா இரவிச்சந்திரன்

# தியாகத்தின் குறியீடாக சயனைட்

| | |
|---|---|
| நூலின் பெயர் | : சயனைட் |
| ஆசிரியர் | : தீபச்செல்வன் |
| பதிப்பகம் | : டிஸ்கவரி புக் பேலஸ் |
| முதல் பதிப்பு | : ஜனவரி 2025 |
| பக்கங்கள் | : 308 |
| விலை | : 360 |




ஐம்பெருங்கடல்களில் ஒன்றான இந்தியப் பெருங்கடலில் இருக்கின்ற இலங்கைத்தீவில், ஒவ்வொரு நாளும் உதிக்கின்ற இளஞ்சிவப்புச் சூரியன், மலர்ந்து மஞ்சள் கதிர்களை கற்றைகளாக பரவச் செய்து, தீவிற்கேயுரிய தனியழகில் உயிர்கள் யாவற்றையும் துயிலெழுப்புகிறது. கொண்டாடி மகிழ்கின்ற தென்றல் காற்றுடன் சலசலக்கின்ற ஆறுகள் பாய்ந்தோடுகின்றன. பேருயிரியான யானைகளும், அவை வளர்த்த காடுகளும், மலைகளும் மடுவுகளும் சூழ்ந்த பல அழகிய மலர்களை நாடி வருகின்ற பறவைகளும் அதன் அழகின் இன்னுமொரு பகுதியாக இருக்கின்றன. மனித மனங்களில் மத நம்பிக்கைகள் நிறைந்திருந்தாலும், பாகுபாடில்லாமல் பலனை எதிர்பார்க்காத அன்பினைப் பகிர்ந்து, மக்கள் நட்புடன் வாழ்வதற்கான வளங்களோடு இந்நாடு செழித்திருக்கிறது. அந்நிய நாட்டினரான ஆங்கிலேயர்கள் விட்டுச் சென்ற தேயிலைத் தோட்டங்கள் மக்களுக்கு தொழில் வாய்ப்பைப் பெருகச் செய்து இன்றளவும் அவர்களுக்கு ஆதாரமான வருமானத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றன. இந்திய நாட்டின் சுதந்திரத்திற்கு முன்பு வாழ்ந்த தென் தமிழக மக்கள், ஆங்கிலேயர்களால் இலங்கைக்கு அடிமைகளாக அழைத்துச் செல்லப்பட்டு அங்குள்ள தேயிலைத் தோட்டங்களை வளர்த்துக் கதைகளையும் நாம் அறிவோம்.

அடிமைப்படுத்துதலையும் கடந்து, ஆங்கிலேயர்களால் பெற்ற வசதிகளை நினைவு கூறும் வகையில், இங்கிலாந்து நாட்டின் ராணி விக்டோரியாவின் புகைப்படங்கள், விடுதலைக்குப் பிறகும் இலங்கையில் சில அரசு அலுவலகங்களின் சுவர்களை அலங்கரிக்கின்றன. இப்படியான இத்தீவில் இன்றும் தீராமல் இருக்கிறது இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட தமிழீழ மக்களின் இனப்படுகொலை. எந்த உயிரிக்கும் இல்லாத சட்டங்களை வாழ்வதற்கான உரிமையாக மனிதர்கள் இவ்வுலகில் வகுத்துக் கொண்டிருக்கின்றார்கள். வாழும் நிலத்தில் அதனைத் தானும் பெற வேண்டுமென உரிமைகோருகின்ற தமிழீழ மக்களுக்குக் கிடைத்தது அடக்குமுறை மட்டுமே. யானைகள் நிறைந்த காட்டில் புலிகளாகப் போராடி வாழும் மனிதர்கள் தாங்கள் விரும்பாத போரை கையிலெடுத்து, எதிராளியிடம் தான் சிக்கினாலும் தனது இனத்தினர் சிக்கி விடக் கூடாது என்கிற நோக்கத்தில், தங்களது ரகசியங்களைக் காத்துக் கொள்வதற்காக சயனைட் குப்பியோடு வாழ்ந்ததை எளிய மனிதர்களால் கற்பனை செய்ய இயலாதது.

சோழ மன்னன் இலங்கைக்கு படையெடுத்துச் சென்று போர் புரிந்த காலத்திலும் அங்கு வாழ்ந்து வந்த இலங்கை மக்கள் ஊரின் வழக்கமான திருவிழாக்களை கொண்டாடி மகிழும் வண்ணம் தங்களது அன்றாட வாழ்க்கையில் பாதிப்பில்லாமல் வாழ்ந்திருக்கிறார்கள். கலிங்க நாட்டின் போர்க்களத்தில் பெருக்கெடுத்து ஓடிய ரத்த ஆறுகளைக் கண்டு மனம் பாதிப்படைந்த அசோக மன்னன், அத்தோடு தனது போர் முயற்சிகளைக் கைவிட்டுவிட்டு உயிர்களைத் துன்புறுத்தாத புத்த மதத்தைத் தழுவி, அதனை இலங்கையிலும் பரவச் செய்தவர். புத்தர் கோவில்கள் இருக்கின்ற இலங்கையின் நகரில் உயிர்களைத் துன்புறுத்தக் கூடாது என்கிற நோக்கத்தில், ஆங்கிலேயர்கள் காலத்தில் ஏற்படுத்திய சிறைச்சாலையைக் கூட இவர்கள் இன்று மூடிவிட்டார்கள். அப்படியான இத்தீவில், வாழும் உரிமையை இழந்த பூர்வீகக் குடியினரான தமிழீழ மக்களது போராட்டத்தில் விளைந்த போரில், விதிமுறைகளை மீறி இலங்கை ராணுவத்தினர் நடந்து கொண்டனர். துரோகத்தையும் ஏமாற்றத்தையுமே போராளிகளான தமிழீழப் புலிகள் சந்தித்தனர். இயக்கத்தில் இணைந்து வருமானத்திற்கு வழியின்றி குடும்பத்தினரின் எதிர்கால

உரிமைக்காகப் போராடிய இளைஞர்களில் சிலர், குடும்பத்தினராலும் தனித்து விடப்பட்டு இன்னலுக்கு ஆளாகி தங்களது இன்னுயிரை இழந்திருக்கிறார்கள். இவர்களின் உண்மையான கதைகளைப் பதிய வைக்கும் புனைவு நாவலாக "சயனைட்" நூல் அமைந்திருக்கிறது.

இலங்கை கிளிநொச்சியை சேர்ந்த எழுத்தாளர் தீபச்செல்வன் அவர்களது நடுகல், பயங்கரவாதி ஆகிய படைப்புகளைத் தொடர்ந்து அடுத்ததாக அவர் எழுதிய நாவல் "சயனைட்" ஆகும். இதில் ஈழப் போரின் சிறு பகுதியாக சயனைட் குப்பிகளோடு வாழ்ந்து மறைந்த சில இளைஞர்களை கதாபாத்திரங்களாக முன்னிறுத்தி நெடுந்தொடரான புனைவாக இந்த நூலை வழங்கியிருக்கிறார். தங்களது கல்வியைத் தொடராமல் கனவுகளைத் தொலைத்து, இயக்கத்தில் சேர்ந்து இளமையை இழந்து, தனது தலைவனின் சொற்களுக்கு மதிப்பளித்து வாழ்ந்த இவர்கள், ராணுவத்தினரிடம் மாட்டிக்கொண்டால் தங்களது இனத்தினரை காட்டிக் கொடுக்காமல் அந்த நொடியே வாயில் கடித்து மாண்டு விடுவதற்கு எப்பொழுதும் கழுத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் சயனைட் குப்பிகளை மையமாக வைத்து இந்த நாவல் சுழல்கிறது. தமிழீழப் போராளிகளை நண்பர்களாகக் கொண்ட எழுத்தாளர் தீபச் செல்வன், அவர்களது உண்மைக் கதைகளை நேரடியாக அறிந்து வைத்திருப்பவர். திரித்துக் கூறப்பட்ட காரணங்கள் மெய்யென வரலாற்றில் பதிந்து விடக் கூடாது என்பதற்காக, நடந்த உண்மைகளை நாவலாகப் புனைந்து கொடுத்திருக்கிறார்.

டிஸ்கவரி புக் பேலஸ் பதிப்பகத்தில் "சுடுதலும் குளிரும் உயிருக்கில்லை" எனும் எனது நூல் தயாராகி வந்த அதே வேளையில், அவரது "சயனைட்" நூல் அங்கு தயாராகிக் கொண்டிருந்தது. அந்த சமயத்தில் சந்திக்க நேர்ந்த இளைஞரான எழுத்தாளர் தீபச் செல்வனது முகத்தில் இறுக்கங்களையே காண நேர்ந்தது. அப்போது அவரது நடுகல் நாவலை பெற்றுக் கொண்டு சயனைட் நாவல் வெளியாகும் பொழுது வாசித்துப் பார்ப்பதாக அறிமுகப்படுத்திக் கொண்டோம். இந்த நாவல் முழுவதும் விரவியிருக்கின்ற நிகழ்வுகளும் சம்பவங்களும் மிக நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டு, இலங்கைத் தமிழுக்கேயுரிய கூடுதலான மொழியழகுடன் கவித்துவமான கற்பனைகளோடு இருந்தாலும், அதில் வெளிப்பட்டிருக்கின்ற காட்சிகள் யாவும் விண்ணிலிருந்து ஏவப்படுகின்ற எறிகணைகளையும், உயிரோடிருக்கும் சிதைந்த உடல்களையும் கண்முன் நிறுத்துகின்றன. அழகிய வானையே போர்க்களமாகக் கொண்டு பறக்கின்ற விமானங்களின் ஓசையைக் கேட்டவுடன் நிலமே சொந்தமில்லாத மக்கள் அடைக்கலம் புகும் பதுங்கு குழிகளை களங்களாகக் கொண்டு எழுதப்பட்ட இந்த உண்மை நாவலின் ஆசிரியர், எப்படி புன்னகைக்க முடியும் என்கிற பதில் எனது காதில் ஓங்கி ஒலித்தது.

ஒரு படைப்பாளர் வாழும் நிலம் சார்ந்த இயல்புகளையும் உண்மைகளையும், அவரது படைப்பில் தேடுகின்ற ஒரு வாசகனது எதிர்பார்ப்பிற்கு கொஞ்சமும் குறைவில்லாமல் அப்படியானதொரு நாவலையே எழுத்தாளர் தீபச்செல்வன் அவர்கள் கொடுத்திருக்கிறார். உரிமைகோருகின்ற பூர்விகக் குடியினரான தமிழீழப் போராளிகளது அடையாளங்கள் இருந்த இடத்தில் ராணுவ முகாம்கள் இருந்திருக்கின்றன. இவர்கள் நாடுவது நடுநிலையாக தங்களுக்குக் கிடைக்க வேண்டிய அடிப்படையான சர்வதேச நீதியை மட்டும் தான். இக்காலத்தில் கனவாகிப்போன கடிதத்தை இந்த நாவலின் முக்கியப் பாத்திரத்தின் கனவில் உயிர்ப்பித்தக் கடிதமாக வடித்து, அவர்களது நிலையை விளக்கமளித்திருப்பது இவரது கையிலுள்ள பேனாவின் தீவிரத்தைக் காட்டுகிறது. இலங்கையில் வாழும் சிங்கள மக்கள், தமிழீழ மக்களது கோரிக்கைகளை இவரது எழுத்தின் மூலமாகவும் புரிந்து கொள்கிறார்கள் என்பது இவரது படைப்பின் வெற்றி எனலாம்.

மறுவினாடியே சொந்தமில்லாமல் அச்சத்தோடு வாழ்ந்து அவ்வப்போது பதுங்கு குழிகளில் மறைந்து உயிரைக் காத்துக் கொள்ள முயல்பவர்களது பிள்ளைகள், பள்ளிக்குச் சென்று திரும்புகையில் விண்ணிலிருந்து ஏவப்பட்ட எறிகணைகள் அவர்களது உடலையும் தலையையும் வெவ்வேறாகத் துண்டித்து உடல் துடித்தாலும், உயிரோடு இருக்கின்ற மறு பிள்ளைகள் பள்ளிக்குச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருக்கும்படி கல்வியை முக்கியமானதாகக் கருதியிருக்கிறார்கள். வெவ்வேறு களங்களில் அவ்வப்போது ஏற்படுகின்ற போர்களில் உடல்கள் சிதைக்கப்படுவதும், அதனை உரியவரே காண நேர்வதும் நடந்திருக்கிறது. காணாமல் போன ஒருவர் உயிரோடு இருக்கிறாரா இல்லையா என்பதையே அறிந்திட இயலாமல் அவதிப்படுவது, தலைவருக்கு நேர்ந்ததாக மட்டுமல்லாமல், அவரோடு இணைந்து களத்தில் இயங்கும் இயக்கத்தினருக்கும் இருந்த நிலையாக இருந்திருக்கிறது. என்றாவது ஒரு நாள் உருவம் மாறியோ, உருகுலைந்தோ, உயிரோடு வெளிப்படலாம் அல்லது மாண்டு போயிருக்கலாம் எனும் உறுதியற்ற வாழ்வின் எதிர்பார்ப்பு, போராளிகளின் குடும்பத்தினர்களுக்கு என்றுமே நிலவியிருக்கிறது.

"சயனைட் கீறியதால் கழுத்திலிருந்து நெஞ்சுப் பகுதி வரை நீலம் படர்ந்திருந்தது" என்பது போன்ற வரிகளையும், "புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்" எனும் முழக்கங்களையும் குறிப்பிடுவதோடு, சமூக அமைப்பிற்கு ஆதாரமான குடும்பங்கள் நீர் குமிழிகளைப் போல உடைவதாக எழுதியும், இறந்த உடலைப் புதைக்கின்ற வழக்கத்தை வெளிப்படுத்த, "விதையுடல்கள்" என்னும் சொல்லாடலையும் நூலாசிரியர் பயன்படுத்தியிருக்கிறார். இரும்பு போன்ற உறுதியான இதயத்தில் ஈரம் கசிகின்ற போராளிகளுக்கிடையேயான தோழமையையும் இந்நூல் எடுத்துரைக்கிறது. பிடிபட்ட புலிகளுக்கு மறுவாழ்வு அளிப்பதாக ராணுவத்தினர் ஏற்படுத்திய தடுப்புச்சிறைகளில் அவர்களுக்குக் கொடுக்கின்ற உணவில் நஞ்சைக் கலந்து கொஞ்சம் கொஞ்சமாக உயிரை இழக்கச் செய்கின்ற துரோகத்தை இழைப்பதையும், தமிழீழ வைப்பகம் இருந்த இடத்தில் இப்பொழுது அதன் அடையாளமே இல்லையென்று அவர்கள் தொலைந்து போவதையும் கடந்து, "தடுப்புச்சிறையில் துரோகம் இழைக்காமல் மறுவாழ்வு அளித்தால் போராட்டங்கள் இனி துளிர்க்காமல் இருக்கலாம்" எனும் எதிர்பார்ப்பையும் இந்த நாவலில் பதிய வைத்திருக்கிறார்.

மனிதனின் ஆகச்சிறந்த கண்டுபிடிப்புகள் அதன்

எல்லைகளைத் தொடும் நிலையில் அழிவையே சந்திக்க நேரிடுகிறது. விமானத்தை உருவாக்குகின்ற தொழில்நுட்பம் அறிந்தவர்களை போர் ஆயுதங்களைச் சுமக்கும் நிலைக்குத் தள்ளியது அவற்றைத்தான் சொல்கிறது. உலகின் எந்த மூலையிலும் நடவாத நிகழ்வாக தங்களது ரகசியங்களைக் காத்துக் கொள்ள தற்கொலை செய்து கொள்ளத் துணியும் கொரில்லாப் போர் வீரர்களான புலிகள், மறு நிமிடமே ரத்தச் சிவப்பு அணுக்களைச் சிதைத்து, உடலிலிருந்து உயிரைப் பிரிக்கும் சயனைட் குப்பிகளை கழுத்தில் அணிந்தவாறு நடமாடும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். போரில் பல இளைஞர்களை இருதரப்பிலும் இழந்திருக் கிறார்கள். அலைகடலில் பிரதிபலிக்கும் நீலவானமும் அதில் நீந்தும் வெண்மேகக் கூட்டங்களுமுள்ள அழகிய பின்னணியில் பறக்கின்ற போர் விமானங்கள் மனித அழிவை ஏற்படுத்துகின்ற எறிகுண்டுகளை இந்நிலத்தில் பொழிந்திருக்கின்றன. இங்கிலாந்து அரசக் குடும்பத்திற்கு மகுடம் சூட்டுகின்ற விலை யுயர்ந்த கற்களை அளித்த வளத்தைக் கொண்ட இம்மண்ணில் உறைந்து போன இரத்தங்கள், தமிழீழ மக்களது முற்றுப்புள்ளியற்ற வரலாற்றை இன்றும் முழங்கிக் கொண்டிருக்கின்றன.

விண்கலம் மூலமாக எடுக்கப்பட்ட பூமியின் ஒரே ஒரு புள்ளியான புகைப்படத்தைக் குறித்து விஞ்ஞானி காரல் சாகன் அவர்கள் எழுதிய புத்தகமான "வெளிறிய ஊதாப் புள்ளி" (The pale blue dot) எனும் ஆங்கில நூலின் சிறு பகுதியின் தமிழாக்கமாக,

"இப்பரந்த அண்டவெளியில் பூமி என்பது ஒரு மிகச்சிறிய மேடை மட்டுமே. ஒரு மூலையையும் மற்றொரு மூலையையும் வேறுபடுத்திக் கூட அறிய முடி யாத ஒரே ஒரு துணுக்கு மட்டுமேயான இவ்வாழ் விடத்தில் வாழ்ந்தவர்கள் சந்தித்த முடிவே இல்லாத வதைகளைப் பற்றி சற்று சிந்தித்துப் பாருங்களேன்.

அவர்கள் எத்தனை முறை ஒருவரையொருவர் தவறாகப் புரிந்து கொள்கிறார்கள்? ஒருவரையொருவர் மாய்த்துக் கொள்வதில் எவ்வளவு வேகம் காட்டு கிறார்கள்? தங்களது வெறுப்பில் எவ்வளவு தீவிரம் காட்டுகிறார்கள்? என்றெல்லாம் சற்றே சிந்தித்துப் பாருங்கள்.

மாமன்னர்களும் தளபதிகளும் அவர்களது ரத்தத்தை ஆறுகளாக சிந்தியதைப் பற்றி சற்றே யோசித்துப் பாருங்கள். அவர்களது பெருமையும் வெற்றியும் இச்சிறு புள்ளியின் ஒரு துண்டில், கணக்கிலடங்காத காலவெளியில் அச்சமயம் மட்டுமே வல்லவர்களாக இருந்திருக்க முடியும்.

நாம் அறிந்தவரை பாதுகாப்பான வாழ்க்கைக்கு பூமி மட்டுமே ஒரே ஒரு உலகமாக இருக்கிறது. நம் கண்ணுக்குத் தெரிந்த எதிர்காலத்திலும் மனித இனங்கள் இடம்பெறுவதற்கு பூமியை விட்டால் வேறு எங்குமே இடமும் இல்லை. வேற்று கிரகங்களுக்குச் சென்று பார்க்கலாமாவென்றால் அது முடியும் தான். அங்கேயே தங்கலாமாவென்றால் அதற்கு வாய்ப்பே இல்லை. நமக்கு விருப்பம் இருக்கிறதோ இல்லையோ, இக்கணம் இப்பூமியில்தான் நாம் வாழ்ந்தாக வேண்டும்.

எனக்கு இப்புள்ளியானது, நாம் ஒருவர் மீது ஒருவர் இன்னும் அதிகமாக அன்பாக இருக்க வேண்டிய பொறுப்பினை அடிகோடிட்டுக் காட்டுகிறது. இக்கணப்பொழுதுவரை நாம் அறிந்திருக்கும் ஒரே ஒரு வீடான வெளிறிய ஊதாப் புள்ளியை, இன்னும் கொண்டாடவும் பாதுகாக்கவும் வலியுறுத்துகிறது."

என்று இடம்பெற்றிருப்பதைக் காட்டிலும் சிறந்ததாக நாம் வேறு எவற்றைக் குறிப்பிட்டு விட இயலும்? "சமமாக வாழும் உரிமை கொண்டு, போர் இல்லாத உலகம் யாவருக்கும் வாய்க்க வேண்டும்." சயனைட் நாவலை வாசித்த பிறகு நமது விருப்பமாக இதுவே இருக்கிறது.

---

## அதிகாரம்

கூட்டுச் சதியால் வீழ்த்தப்பட்டவனின்
கண்ணீர் மைகளால்
வரையபட்டது அதிகார ஓலை.
இருளை அள்ளி
மனதெல்லாம் நிரப்பி
வெற்று மூளையோடு
அலைகிறான்
இருடிகள் போற்றும் அதிகார மகான்
அதட்டல்
வசவு
பிரித்தாளல்
என்றின்ன அழுக்காறு
சுமந்து நடக்கிறது சர்வதிகாரம்
கானல் நீருக்குத் துலாக்கட்டும்
அதிகார மகானின்
கண்ணீர் மைகளால் வரையப்பட்டது
இருடிகள் போற்றும்
இன்னோர் மகானின் அதிகார ஓலை

**- பாஸ்கரன் சுமன்**




சுவிஸில் "காலம் வனைந்த கலயங்கள்" நூல் அறிமுகம்

04.05.24 ல் Swiss Bern சிவன் ஆலய மண்டபத்தில் திருமதி ஆதிலட்சுமி சிவகுமார் வரைந்த "காலம் வனைந்த கலயங்கள்" எனும் கட்டுரைத்தொகுப்பு திரு.சிவகீர்த்தி தலைமையில் வழமைபோன்றன்று. இந்நூலை சுவிஸில் பிறந்த எட்டு இளையோரின் கையில் ஒப்படைத்து அவர்களது வாசிப்பும் + அதனடியொற்றிய அவர்களது கருத்தியலையும் வெளிப்படுத்தும் ஒரு வித்தியாசமான முறைமையில் சிறப்புற அறிமுகம் கண்டது பலரது வரவேற்பையும் பெற்று நின்றது. இந் நடைமுறைமை புலத்தில் பிறந்த இளையோரை தமிழ் மொழியுடன் பாரீட்சையப்படுத்தி வாசிக்கத் தூண்டுதலே ஆகும்.

இந்நூல் பெண்களின் வாழ்வியல் மாண்பு+போரின் வடு+சில நூல்களின் நயவுரைகள்+ மாற்றப்படவேண்டிய கருத்தியல்+ கல்விநெறி என்றவாறு 31 கட்டுரைகளை தாங்கி பூத்திருக்கிறது.

இந்த நூலை ஜீவநதி வெளியிட்டத்தோடு! இவர் ஏலவே கவிதை+ சிறுகதை+ நாவல்+கட்டுரையென 7 நூல்களை வெளியிட்டுள்ளார்.

மேலும் இந்நூல் பற்றிய பார்வையாளர்களின் கருத்தறிதலும்+ கேள்விகளும் உள்வாங்கப்பட்டன.

சுவிஸிலிருந்துபொலிகை ஜெயா.



ந. இரவீந்திரன்

# நேற்றில் கரைந்தோடும் இன்றிலிருந்து

5

"வெட்டொன்று, துண்டு இரண்டு" என்பது ஆரோக்கியமான சமூக உறவுகளில் அவசியமற்றது. துண்டுபட்டன ஒன்றிணைவதும், முன்னரிருந்ததை விடவும் உறுதிப்பட்டு வைரம்பாய்ந்த கட்டிறுக்கத்தை வெளிப்படுத்தியவாறு நீடித்த உறவாய் வலுப்படவும் வாய்ப்புள்ளது. தவறொன்றை இனம் கண்டு, அதனைத் திருத்தும் பொருட்டு உரிய போராட்டத்தை உக்கிரமாக மேற்கொண்டாக வேண்டும் அதிலே தாராளவாத விட்டுக்கொடுப்பு இருக்கக் கூடாது. அது போன்ற தவறுகள் மீளவும் மேலெழாத மன உறுதியும் விழிப் புணர்வும் ஒவ்வொருவரிடமும் ஏற்படும் வகையில் மோதல் விட்டுக் கொடுப்புக்குத் துளியும் இடமின்றி மேற்கொள்ளப்பட்டால் மட்டுமே ஊருக்கு உறுதி மிக்க அமைப்பாக நீடித்து நிலைக்க இயலும். என் வரையில் இத்தகைய போராட்டங்களைத் தொடர்ந்தும் முன் னெடுப்பதில் இருந்து ஒருபோதும் பின் வாங்கிய தில்லை.

அவ்வாறான போராட்டங்கள் வாயிலாகத் திருத்தமான செயற்களம் கண்ணெதிரே தெரிந்த கணம் இரண்டுபட்டு போராடிப் பேதப்பட்டு நின்றவர்கள் முன்னரைக் காட்டிலும் இறுக்கமான நட்புணர்வுக்கு ஆட்படுவது அனைத்தையும் விட அவசியம். "ஊடுதல் காமத்துக்கு இன்பம், அதற்கு இன்பம் கூடி முயங்கப் பெறின்" என்பது குடும்ப உறவில் பிணக்கமடைந்து விலகிக் காதலர் சில கணங்கள் இருந்தால் கூட பின்ன ரான வலுவடைந்த இறுக்கம் ஏற்படும் பட்சத்திலேயே அனைத்தும் இன்பத்துக்கான வழிகள் என்பது நிதர்சன மாகும். ஆனந்தம் பொங்கும் குடும்ப உறவுக்கு மட்டு மல்ல, ஒன்றுபட்டு இயங்கும் சமூக உறவுகளிலும் பேதப்பட்டு மோதும் போது தீர்க்கமான தெளிவை எட்டும் வரை சண்டை இடுவதும், தேர்ந்து தெளிந்த பின்னர் ஒருவர் போல இணைந்து இயங்குவதும் அவசியமானது. ஆரோக்கியமான அமைப்பாகத் தொடரும் பொருட்டாகவே போராடுகிறோம் என்றால், தவறைக் களையும் இடம் கண்டு அடையப்பட்ட பின்னர் வலுவான ஒற்றுமையை உறுதிப்படுத்தி ஆகவேண்டும்!

முன்னதாக கழகத்தில் இயங்கிய போது அமைப்பு விதிகளை முழுமைப்படுத்தியதாக உரு வாக்கி, அதன்வழியில் செயற்படுவதற்கான பக்குவம் எமக்குள் இருந்திருக்கவில்லை. நான் கழகத்தினின்றும் விலகியதினூடாக எங்களுக்குள்ளே உடைவு ஏற்பட்டு இருப்பதனை அவதானித்த ஊரவர் ஒருவர் ஒட்டு மொத்தமாகக் கழகத்தை அப்புறப்படுத்துவதற்கு உரிய வாய்ப்பாக அதனைக் கையாள முனைந்தார். அந்தப் பெரிய வளவு வீணே விளையாடிக் களிக்கும் மைதான மாக இருப்பதில் அவருக்கு உடன்பாடில்லை. மரவள்ளி நட்டால் எவ்வளவு பலன் கிடைக்கும் என்று கணக்குக் காட்டி கந்தையா வாத்தியாரின் மனதை மாற்றிவிட்டார். ஒற்றுமையாக விளையாடத் தெரியாதவர்களைக் கலைத்துவிடுவது குற்றமில்லை என்று அவர் கருதி இருக்கலாம். மரவள்ளிக் கட்டைகளை நடுவதற்கு முன் பாதுகாப்பாக வளவுக்குள் யாரும் கால்பதிக்க இயலாது தடுக்கும் கம்பி வேலி அவசர அவசரமாகப் போடப்பட்டது.

இரண்டொரு நாளில் காலைத் தூக்கத்தில் இருந்து எழுந்த கையுடன் வீட்டுக்கு வந்த கழக உறுப்பினரான தவராஜா ஆத்துப்பதைத்துச் சங்கதி ஒன்றைச் சொன் னார் "கம்பி வேலி முழுதாகச் சரிக்கப்பட்டு, ஓரிரு கதி யால்கள் வெற்றிமடக் கிணற்றுக்குள் போடப் பட்டுள்ளன". எனக்குப் பெரும் திகைப்பு. கழகத்தில் குழப்பம் ஏற்படுத்தி உள்ளவன் என்ற வகையில் நான் தான் இந்தக் குழறுபடியையும் செய்திருப்பேன் என்று எவராவது சொல்ல முனைவார்களோ என்ற அவதி எனக்கு. அங்கே போய் நின்று "நான்தான் பிடுங்கி வீசினேன்" என்ற வீர வசனம் பேசினேன். எவரும் கண்டுகொள்ளவில்லை. இவனாவது, பண்ணுவதாவது என்ற இளக்காரம் எல்லோரிடமும்.

என்ன நடந்தது என்பது அறியப்படாமலே நாள் ஒவ்வொன்றாகக் கடந்து போக, மரவள்ளிக் கனவும் ஊர் நண்பருக்கு கலைந்து போய்விட, கழகத்தின் நாளாந்த விளையாட்டுகள் தொடர்வதும் தடையின்றி இடம்பெற்ற வாறு இருந்தன. கழகத்திற்கும் எனக்கும் இனி எந்தச் சம்பந்தமும் இல்லை. அவசரப்பட்டு விலகினேனோ என்ற கலக்கமும் என்னிடம் ஏற்படவில்லை. தவறுகளுடன் சமரசம் செய்து அங்கே சங்கமிப்பதை விட எனது படிப்பை இனிக் கவனத்துடன் மேற்கொள்ள வேண்டும் என்ற உறுதியை மனதில் வளர்த்தேன்.

கல்விப் பொதுத் தராதரப் பத்திரச் சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேற்று அடிப்படையில் உயர்தர வகுப்பைக் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் மேற்கொள்வது என முடிவு செய்தேன். சுழிபுரம் விக்ரோறி யாக் கல்லூரியாக் கல்லூரியில் படித்து வந்த நண்பர்கள் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரிக்குப் போய்விட்ட காரணத்தால் எனக்கும் பாடசாலை மாற வேண்டும் என்ற

ஆவலாதீ அப்பாவுக்கு அதிலே உடன்பாடு இருக்க வில்லை. விக்ரோறியா மாணவனாகத் தொடரும்படி சொல்லிப் பார்த்தார், மாறுவதில் விடாப் பிடியாக நான் நின்றதால் கல்லூரிக்கு அழைத்துச் சென்றார்.

பாடசாலை விடுகைப் பத்திரம் எடுக்கக் காரியாலயத்தில் நின்றபோது திகம்பரம் சேர் வந்து அப்பாவுடன் கதைத்தார். தமிழரசுக் கட்சித் தலைவர்களில் ஒருவரான அ. அமிர்தலிங்கத்தின் தம்பி இவர். அரசியல் நாட்டம் இவரிடம் இல்லாத போதிலும் சகோதரரின் பொருட்டு பாடசாலைக் கால நண்பரான எனது அப்பாவுடன் கதைபேச்சைத் தொடர்ந்து வந்துள்ளார். மிக நல்ல உயிரியல் பட ஆசிரியர் என்ற மதிப்புணர்வு அவர் மீது எனக்கு உண்டு. அவரும் விலக வேண்டாம் என்று வலியுறுத்தினார். கல்லூரியை விட்டு விலகவெனப் போய் நின்றதற்கு ஒரு வருடத்தின் முன்னர் எங்களுடைய வகுப்புக்கான உயிரியல் பாடத்துக்கு பத்மனாதன் சேரையா திகம்பரலிங்கம் சேரையா போடுவது என்ற குழப்பம் நேரசூசி போடுகிற குழுவுக்கு வந்திருக்கிறது. அது பற்றி ஆய்வுகூட உதவியாளர் வாணர் எங்களுடன் வந்து கதைத்தார். வகுப்பு நண்பர்கள் எல்லோருக்கும் பத்மனாதன் சேர் தான் விருப்பம் சிறப்பாகப் பாடக் குறிப்பை அவர் தருவார். எனக்கு அதுவும் விருப்பம் தான் அவர் மீதும் உயர்ந்த மதிப்புணர்வு இருக்கவே செய்தது. அதைவிடவும் கலந்துரையாடல் பாங்கில் முன்னெடுக்கிற திகம்பரலிங்கம் சேருடைய கற்பித்தல் முறைகூடுதலாகப் பிடித்திருந்தது. "டேய், அவர் சும்மா கதை பேசிக்கொண்டு இருப்பாரடா" என்னுடைய சக மாணவர்கள் சண்டை போட்டா லும் எதிர் முயற்சி ஏதுமில்லாமல் அமைதி காத்தார்கள்.

எங்களுடைய வகுப்பு நண்பர்கள் இடையே மிக இறுக்கமான நல்லுறவு நிலவியது. அந்த வயதுக்கு உரிய மாணவர்களிடையே அவ்வாறு இருப்பது இயல்பே என்றாலும் எங்களுக்குள் மிக உச்சமாக அமைந்திருந்தது. என்னுடைய முடிவில் தங்களுக்கு உடன்பாடு இல்லையென்றாலும் நட்பின் பேரில் அதனை ஏற்று இயங்கியிருந்தார்கள். பொதுப் பரீட்சைக்கான நாலைந்து நாட்களுக்கு முன்னர் தவணை விடுமுறை, அந்தப் பாடசாலையின் எங்களுக்கான இறுதி நாள் எல்லோரும் மேசைகளில் தாளம் போட்டுப் பாட்டுப்பாடி ஆட்டம்போட்டு ஆனந்தக் களிப்பில் மூழ்கி இருந்தோம். உற்சாக மிகுதியில் எனக் கருகில் இருந்த ராசரத்தினம் திடீரென எழும்பி, தான் அமர்ந்திருந்த மரக்கதிரையைத் தூக்கி வேகமாகத் தரையில் அடிக்க முற்பட்டான். தலைக்கு மேலே கதிரை போய்விட்ட உடனே, அதனைத் தடுத்து "அடிச்சு உடைக்க வேண்டாம், நாளைக்குப் படிக்க வாறவைக்கும் இது தேவை" என்றேன்.

அவ்வளவு சந்தோச மிகுதியில் செய்ய முனைந்ததைத் தடுக்க வருகிறவனின் கதையைக் கேட்டு எவராது திடுதிப்பென நிறுத்திவிட இயலுமா? வேகமாக ஓங்கியதை அடித்து முடித்துவிட்டு அடுத்ததை எடுக்காதிருப்போம் என்று அடங்கிப்போவது தானே சாத்தியப் படும். மாறாக, ஓங்கிய கதிரையைப் பக்குவமாக ராசரத்தினம் கீழே வைத்தான். பின்னர் ஒரு ஆசிரியனாக வகுப்பறைகளில் எனது மாணவர்களுக்கு இதைப்பற்றிச் சொல்லி இருக்கிறேன். அது போன்ற விளையாட்டுகள் மாணவப் பருவத்துக்கு அவசிய மானவை உசார் மடையர்களாகிவிடாமல், அக்கம் பக்கத்துக்கு அசௌகரியம் ஏற்படுத்தாமல், பொதுச் சொத்துகளைப் பேணும் உணர்வில், எம்மை மீறித் தவறுக்கு ஆட்படுவதை எவரேனும் உணர்த்தினால் உடன் சுதாகரிக்கத் தக்க சுய உணர்வுடன் விளையாட்டு களை வைத்துக்கொள்ள வலியுறுத்துவதற்கு இதனைச் சொல்லி வந்துள்ளேன். ஒரு கழக உறுப்பினனாகக் கூட்டுணர்வு என்னிடம் ஏற்கனவே இருந்ததில் அதனை நான் சொன்னேன் சொல்லிய என்னைவிடவும் நண்பனாக நான் தடுக்க முனைந்ததை ஏற்றுத் தன்னுணர்வைக் கட்டுக்குள் கொண்டுவந்த எனது நண்பனின் உயர்ந்த உள்ளத்தை மாணவர்களுக்கு எடுத்துரைத்து வந்துள்ளேன்.

கல்லூரியை விட்டு விலகிய இரண்டொரு வருடங்களுக்குப் பின்னர் எனது கல்லூரிக்குச் சென்றபோது வாணர் வந்து கதைத்தார். "தம்பி, நீங்கள் இருந்த காலம் மாதிரி இப்ப இல்லை. உங்கடை விளையாட்டுகளும் குழப்படிகளும் ரசிக்கக் கூடியதாயிருந்தது. ஒழுங்கு, கட்டுப்பாடு, மரியாதை உணர்வுகள் உங்களிட்டை இருந்தது. இப்ப உள்ளதுகளிட்டை குழப்பமும் கெடுதிகளும் தான் பெருகி வருகுது" என்ற தன்னுடைய ஆதங்கத்தை வாணர் சொன்னார். நாட்டின் அரசியல் குழப்பங்கள் வளர்க்கப்பட்டு வந்தமையால் இளம் தலைமுறை மாணவர்கள் இடையே தறிகெட்டலையும் போக்கு வளர்ந்தது. அது அடுத்தவொரு காலகட்டம், அங்கே எனது இருப்பு வரும்போது விலாவாரியாகப் பேசுவோம்!

அவ்வளவுக்கு உயிருடன் கலந்த பாடசாலையை விட்டு நீங்க நினைத்தது உண்மையில் முட்டாள்தனம் என்பதில் சந்தேகம் இல்லை. தொலைதூரப் பெரிய பாடசாலை என்ற மோகம் ஆட்டிப்படைத்தது என்பதையும் கடந்து ஒரு வைத்தியராக வர வேண்டும் என்று எனக்குள் ஊட்டப்பட்டு என்னாலும் ஏற்கப்பட்டு இருந்த அன்றைய எனது இலட்சியத்துக்கு ஸ்கந்தாவுக்குப் போவது அவசியம் என்று பட்டது. அப்படிப் போய் வைத்திய சாலைக்குள் முடங்கிப்போக என்னை விடலாமா என்று எனது ஊர் கருதியதால் நான் மீண்டும் வெற்றி மடத்துக்குள் ஈர்க்கப்பட்டேன்.

"கழகத்தில் தானே திரும்பச் சேரமாட்டேன் என்றீர்கள், இப்போது புதிதாக "காலையடி மறுமலர்ச்சி மன்றம்" என்ற அமைப்புத் தோன்ற இருக்கு அதிலே வந்து இணையுங்கள்" என்ற அழைப்பு விடுக்கப்பட்ட போது ஏற்றுக்கொண்டேன். ஆடிய காலும் பாடிய வாயும் சும்மா இருக்க இயலுமா? விருத்தெரிந்த நாள் முதலாய் இணைந்த கரங்கள் நூறுடன் இயங்கியவன் தனியொரு ஸ்டெதஸ்கோப் கொழுவித் திரிதல் அடுக்குமோ?

ஏற்கனவே இணைப்புப் பற்றிய பேசுபொருளாக இருந்தவை கே.எம்.வி.கே. (கழகம்), தேவகோபால கிருஷ்ண நாடக மன்றம் என்பவை எங்களை விட மூன்று, நான்கு வயது கூடியவர்களுக்கும் அமைப்புக்குள் இணையும் ஆர்வம் மேலிட்டதில் அவர்கள் மூன்றாவது தரப்பாகச் சேர்க்கப்பட்டனர். அவர்களைப் போல நானும் இணைந்து கொண்டேன். மூன்று திசைகளில் இருந்து வந்தாலும் மன்றமென ஆன பின்னர் புதிய பரிமாணம் ஒவ்வொருவரிடமும் வெளிப்பட்டது. ஒழுங்கமைக்கப் பட்ட யாப்பின் படி, முறைப்படுத்தப்பட்ட நிர்வாகக் குழுக்

கூட்டங்களுடன் தனிவகைப் பொலிவைப் பெற்ற மன்றம் ஊருக்கே புதிய இரத்தம் ஊற்றெடுத்தது போல இயங்கத் தொடங்கியது. அதன் பின்னர் வெற்றிமடம் என்ற பெயர் எவரது வாயிலிருந்தும் வந்ததில்லை நிரந்தரமாக அந்த வளவு மன்றமென ஆகிவிட்டது!

மறுமலர்ச்சி மன்றம் என்ற பெயரையும் அதற்கான கருத்துகளையும் குழந்தை ம. சண்முகலிங்கத்திடம் இருந்து பெற்று வந்த தேவராஜாவின் கலைத்துறைக் கல்விப் புலம் எங்களுக்குப் புதுமையானது. நாடகக் கலையில் அவருக்கு இருந்த ஆற்றலுடன். இலக்கியம், சமூகம், அரசியல் குறித்தான அவரது கருத்துக்களும் எங்களுக்குப் புதியன. ஊரிலிருந்து நீண்ட காலம் விலகி இருந்து முத்துத்தம்பியிலும், செங்குந்தாவிலும் படித்து வந்தவர் என்ற போதிலும் ஊர் – மக்கள் என்பன குறித்த புரிதல் அவர் மூலமாகவே எங்களுக்குக் கிட்டின. செயல்திட்டங்களை வகுப்பதிலும் அவற்றை நிறைவாக்கும் களங்களை இனங்காட்டுவதிலும் அவருக்கு இருந்த ஆற்றல் தலைமைப் பாங்குடையவராக அவரை எம்முன் நிறுத்தின.

ஆயினும், திட்டமிடப்பட்டுக் களமாடப்பட்ட ஒவ்வொன்றையும் தக்கவைத்து, ஒன்றினை உறுதிப் படுத்தியவாறு அடுத்த தளம் நோக்கி வளர்தல் என்ற பண்பு அவருக்கு வாய்த்திருக்கவில்லை. சமூகம் குறித்த கல்வியுடன் பலரோடும் அவருக்கிருந்த விரிந்த தொடர்பாடல்களும் எங்களிடையே பல தொடக்கங்களை அறிமுகப்படுத்துவனவாக அமைந்த போதிலும் எவற்றிலும் உடனிருந்து தொடர்ந்தும் பயணிக்க இயலாத நிலை அவருக்கு. ஊரைப் பிரிந்து நீண்ட காலம் படிப்புக்காகப் பிரிந்திருந்த ஆரம்பகால வாழ்க்கை பின்னரும் தொடர்ந்தது. மன்றம் ஆரம்பமாகி ஒரு வருடத்தில் கொழும்புப் பல்கலைக் கழகச் சட்டக் கற்றலுக்காக ஊரைவிட்டுச் செல்ல வேண்டியிருந்தது. பிரியாவிடை செய்து பத்துப்பதினைந்து சைக்கிள்களில் அவரை ஊர்வலமாக அழைத்துச் சென்று சுன்னாகம் புகையிரத நிலையத்தில் பயணம் அனுப்பி வைத்தோம். அதே ஒட்டுறவுடன் இரண்டு வருடங்கள் ஊருக்கு வந்து போனார். அந்தவேளையில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றி அடுத்த சந்திப்பில் பேசலாம் பின்னர் முற்றாகவே மன்றப் பக்கம் வராமல் கொழும்பில் தங்க நேர்ந்ததில் அவருக்கான தளவிரிவாக்கத்தில் ஒரு தொய்வாக ஆனது.

இருப்பினும், எங்களிடம் அவர் ஏற்படுத்திய உந்தலுடன் புதிய உத்வேகத்தில் மன்றத்தை வளர்த்தெடுக்கும் ஆற்றலை நாங்கள் பெற்றுவிட்டோம். கூட்டாக முடிவுகள் எடுத்துச் சுயமாக வளரும் நடைமுறை ஒன்றுக்கான பயிற்சியை நாங்கள் வளர்க்க ஆரம்பித்தோம். இந்தத் துறை எனக்கு மிகவும் பிடித்தமானதாக அமைந்தது. ஏதாயினும் அவசியத்தில் வைத்தியசாலை ஒன்றுக்குப் போனால் அதிக நேரம் அங்கே இருக்க இயலாமல் மயக்கத்துக்கு ஆட்படும் எனக்குப் பிறரது உடலாரோக்கியச் சிகிச்சையை வழங்குவதற்கான கற்றலைப் பெறுவதைவிட மனித மனங்களுக்குச் சிகிச்சை செய்ய வல்ல பண்பாட்டு – இலக்கிய – சமூகக் கல்வியை நாடிச் செல்லுதலே கூடுதல் பொருத்தம் என்ற தெளிவு பிறந்தது. விஞ்ஞான உயர் கல்விப் பயணத்தை மெல்லமெல்லக் கைகழுவியவனாக கலை–இலக்கியப் படிப்பைச் சுயமாக வளர்க்கத் தொடங்கினேன்.

விஞ்ஞானத்தைப் படித்துப் பின்னரான காலம் ஒன்றில் வைத்தியரெனத் தொழில் பார்ப்பதைவிட, இலக்கியம் – சமூகம் பற்றிய படிப்பு நாளாந்தம் மன்றத்தில் நான் இயங்குவதற்கான செயற்பாட்டு நுட்பங்களைக் கற்றுத் தருகிறது எனும் ஞானம் என்னை முழுதாக ஆகர்சிக்கத் தொடங்கியது. அவற்றுக்கான நூல்களைப் பெறுவதற்காக சங்கானைப் பிரதேசப் பொது நூலகத்தில் அங்கத்தினன் ஆனேன். சிறுகதைகள், நாவல்கள், கட்டுரை நூல்கள் எனும் வாசிப்புத் தளம் விரிவாகி வந்தது. மன்றத்தில் இடம்பெறும் கூட்டங்களில் எல்லாம் அவை பற்றி விசாலமாகப் பேசத் தொடங்கினேன்.

அந்தப் பேச்சுகள் பற்றி அடுத்த நாள், போகிற போக்கில் கருத்துரைப்பது போலத் தனது விமரிசனங்களைக் கந்தையா வாத்தியார் வெளிப்படுத்துவார். சாதாரணமாக அவர் அவற்றைச் சொன்ன போதிலும் ஒரு ஆசிரியருக்கான பண்புடன் எங்களைப் பக்குவப்படுத்தி வந்துள்ளார் என்பது பின்னர் தான் புரிந்து கொள்ளப்பட்ட அளவுக்கு “உபதேசம் செய்ய முனையாத” நடைமுறை அவரிடம் இருந்தது. கூட்டக் கருத்துகள் மட்டுமல்லாமல் நாங்கள் உதைபந்தாட்டத்தின் போது நடந்து கொள்கிற சரி, பிழைகள் பற்றியும் அவர் கருத்துரைத்து வழிப்படுத்தி வந்துள்ளார்.

அவற்றில் வெளிப்பட்ட ஆசிரியத்துவப் பாங்கு பற்றி அப்போது விளக்கம் ஏதும் எங்களிடம் இருக்கவில்லை. எங்களை வெளியேற்ற முனைந்தவர் என்ற கறுவியம் கூட எங்களுக்கு அவ்வப்போது வருவதுண்டு. அவற்றை எல்லாம் மீறி மன்றத்தார் எனும் எங்கள் பலம் எமக்குள் முழுதாகச் சுவறவைக்கப்பட்டது என்றால், அதற்கான அத்திவாரம் அவர் தான் என்பதனைப் பின்னர் நடைமுறைப்படுத்திக் காட்டி இருந்தார் கந்தையா வாத்தியார்!

கழகத்தைவிட்டு நான் நீங்கியிருந்ததும் மன்றம் உதயமாவதில் ஒரு காரணமாக அமைந்தது என்றால், மீண்டும் மன்றத்தில் ஒரு போராட்டத்தை நடாத்தியபோது அதற்கான தீர்வை எவ்வாறு எட்டுவது என்பதனைக் கற்றுத் தந்ததன் வாயிலாக மன்றத்தின் உருக்குறுதி மிக்க ஒற்றுமைப் பலத்தை எங்களுக்கு உணர்த்தி எங்களுக்கான முழுமைப்பட்ட அர்த்தத்தைப் புரிய வைக்கிறவராகவும் அவரே இருந்துள்ளார். அது பற்றிப் பேசுவோம்!



அண்மையில் கற்றல் கல்வி மேலாண்மை மையத்தின் சார்பாக அமீரகம் ஜமைரா பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன் அவர்கட்கு “தமிழ் அமுத சுரபி” பட்டமளிக்கப்பெற்றதுடன் டாக்டர் ஜஸீம் அல் ஸாபி அவர்கள் மூலம் ஜீவநதி சஞ்சிகையின் அறிமுகமும் நடைபெற்றது அருகில் அமைப்பின் நிறுவுனர் முனைவர் திருமதி ஸ்ரீரோஹினியும் திருமதி பரீதா ஷரிபுத்தீனு.

கோகிலா மகேந்திரன்

# 17 முடிவைத் தொடுவாய் முயன்று

"சில மனிதர்கள் ஆயுதங்களாகவே இருக் கிறார்கள். அவர்கள் உங்களை உங்கள் மனதிலிருந்தே வெளியேற்றி விடுவார்கள். அவர்களை முதலில் உங்கள் மனதிலிருந்து அகற்றுங்கள்" என்றார் கேர்ட்டிஸ் டிரோன் ஜோன்ஸ். (Curtis Tyrone Jones) இவர் குறிப்பிடும் இந்த மனிதர்கள் உள விளையாட்டுக்களை விளையாடுபவர்கள்.

தொடர்ந்து செயற்படுத்தப்படும் உள் அந்தரங்கமான நிரப்புதல் விவகாரமே இந்த உள விளையாட்டுகள் என்று "எரிக் பேன்" கருதினார்.

இந்த விளையாட்டுகள் வெளிப்பார்வைக்கு மென்மையான செயற்பாடுகள் போலவும் இருக்கலாம். ஆயினும் அவை மறை நோக்கத்தோடு திரும்பத் திரும்பச் செய்யப்படும். உள விளையாட்டுகளின் விளைவுகளில் ஒரு நாடக பாணி இருக்குமாயினும் அவை நாடகங்கள் இல்லை. சடங்காசாரங்களோ, பொழுதுபோக்குகளோ இல்லை. நேர்மையற்ற இந்தச் செயற்பாடுகள் பெரும்பாலும் தெரிந்தே செய்யப்படும். சிலவேளை ஆழ்மன உந்தலாலும் இடம்பெறலாம்.

விளையாட்டில் சம்பந்தப்படுவோர் எண்ணிக்கை இருவராக, மூவராக, ஐவராக அல்லது பலராகவும் இருக்கலாம்.

"கணவர் என்னை மேடையில் நடனமாடவோ, நடிக்கவோ அனுமதிப்பதில்லை" என்று பலரிடமும் கூறி வருகிறாள் மனைவி. "அது உண்மையா?" என்று பலரும் கணவரிடம் கேட்பதில்லை ."உண்மையாகத்தானே இருக்கும். பாவம். கவலையில் என்னிடம் சொன்னாள்" என்றுதான் பலரும் நம்புவார்கள். உண்மையின் வேர்களைத் தேடினால் "அவளுக்கு மேடைப்பயம் அதிகம்" என்பது மட்டுமே உண்மை. குற்றத்தை லேசாக இன்னொருவர் மீது சுமத்திவிட்டுத் தான் நல்ல பிள்ளை ஆகிவிடுகிறாள். இது பெண்களால் மட்டுமில்லை ஆண் களாலும் ஆடப்படலாம். "நீ மட்டும் இல்லை யென்றால்..." என்பது இந்த விளையாட்டின் பெயர். இருவர் பங்குபெறும் இதையொத்த விளையாட்டுக்கள் உலகில் மிகத் தாராளமாக விளையாடப்படுகின்றன. இந்த விளையாட்டில் பாவிக்கப்பட்ட உபகரணம் "சொற்கள்". மனைவிக்கு விடயத்தை விளங்க வைத்து, அவளின் மேடைப்பயத்தை நீக்க உதவுவதே சரியான தெரிவாக இருக்கும்.

நகை அடகு வைப்பவர்களும், காணியை, வீட்டை ஈடு வைப்பவர்களும் பெரும்பாலும் அவற்றை மீட்பதில்லை என்பது ஓரளவு விடயம் புரியும் நுண்மதி உள்ளவர்கள் அனைவருக்கும் தெரியும். அப்படி இருந்தும் நகை அடகு பிடிக்கும் இடங்களாக வங்கிகள் அனைத்தும் செயற்படுவதும், வேறு பல நிறுவனங் களும், தனியார் கடைகளும் இதையே வாழ்நாள் தொழிலாகச் செய்வதும் எல்லோருக்கும் தெரிந்த ரகசியம். "இதோ நாங்கள் உங்களுக்கு அருகில் வந்து விட்டோம்" என்று கிராமங்கள் தோறும் ஒலிபெருக்கி அறிவிப்புச் செய்தபடி வருவார்கள் சில நகை அடைவு பிடிக்கும் நிறுவனங்கள். "உங்களை ஏமாற்றுபவர்கள் அருகில் வந்துவிட்டோம்" என்பதுதான் இதன் உண்மை யான அர்த்தம் என்று புரிந்தால் சிரிப்பு வரும். காசை விளையாட்டுப் பொருளாகக் கொண்டு விளையாடப்படும் உள விளையாட்டுத்தான் இது. "முயற்சி செய். சேகரி" என்பது இந்த விளையாட்டின் பெயர். "ஆக மூண்டு வட்டிதான்" என்று அவர்கள் கூறும்போது ஏதோ மூன்று ரூபா வட்டியாகக் கட்டினால் போதும் என்று மனித மனம் நம்பப்பார்க்கும். படிக்காத கிராம மக்களுக்கு அது விளங்காமலும் இருக்கலாம். "மூண்டு வட்டி" என்பது 36% என்பதும் ஒரு லட்ஷம் ரூபா கடன் பெற்றால் வருடத்தில் 36000ரூபா கட்டவேண்டி வரும் என்பதைக்கூட, "மாதம் மூவாயிரம் மட்டுந்தான்" என்று கடைசி நேரத்திலே சொல்லுவார்கள். மாதம் 3000கட்டினால் நகை வந்து விடும் என்பதுபோல் இருக்கும். அது வட்டி மட்டுந்தான் என்பது மனதுக்குள் செல்லாது. நகையை மீட்க வேண்டுமானால் "முதலும் வட்டியும் கட்டவேண்டும்!" கையில் ஒரு லட்ஷம் ரூபா இல்லாமல் தானே அடகு வைக்கிறோம்? பிறகு வருட முடிவில் 136000 எப்படி வரும் என்பதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா?என்று எங்களை நாங்களே கேட்டுக்கொள்ள வேண்டும். அடுத்தவருடம், அடுத்த வருடம் என்று தள்ளிக்கொண்டே போனால் சிலவருடங்களில் கடன் தலைக்கு மேலே போய்விடும். பிறகு நகையும் போய்விடும். கட்டிய வட்டியும் போய்விடும். யார் உள விளையாட்டில் வெற்றிபெற்றது? இதை விட நகையை விற்றிருக்கலாம். விற்று வந்த காசு அவ்வளவும் எமக்குத்தான்! இருக்கும் ஒரு பொருளை இழந்து அந்த இழப்புத் துயரைத் தாங்க மனித மனம் விரும்புவதில்லை என்ற பலவீனத்தைப் பலர் தமது முதலாக்கி அவர்கள் பண முதலைகளாகி விடுவார்கள். சிறு மீன்கள் பல அகப் பட்டுக்கொள்ளும். "வாழ்வில் எக்காரணம் கொண்டும் கடன் வாங்குவதில்லை" என்ற இலக்கைக்கொண்டு வாழ்பவர்கள் காசை விளையாட்டுப் பொருளாகக் கொண்டு விளையாடப்படும் உள விளையாட்டுகளில் அகப்படுவதில்லை.

மாதச் சம்பளம் பெறுபவர்கள் பலர் தமது தொழில் காலத்தின் 20, 30 வருடங்களை மாதாந்தம் கடன் கட்டவேண்டிய நீண்டகாலக் கடன் சிறையில் அகப் பட்டுக் கழித்துக்கொண்டிருக்கிறார்கள். வீடு ஒன்று வாங்கியாகி விட்டது. உண்மைதான்! கார் ஒன்று வாங்கி எல்லாரும் பார்க்கும்படி ஓடித்திரிந்தாகிவிட்டது. சரி!

ஆயினும் நிரந்தரமற்ற இவ்வுலகில் நாளை என்ன நடக்கும் என்று தெரியாதபோது நீண்டகால எதிர்பார்ப்பில் காரியங்களைச் செய்வது தேவையற்ற நெருக்கீடு.பல நாடுகளிலும் அரசுகளே அதைச் செய்கின்றன. உண்மைதான்! யார் செய்தால் என்ன? "கடனாளியாக்குதல்" என்ற உளவிளையாட்டில் நாம் அகப்படாதிருந்து அன்றைய நாளை மட்டும் (mindfulness) மகிழ்வுடன் வாழ்தல் புத்திசாலித்தனம்.

சரி! மூன்று பேர் விளையாடும் உள விளை யாட்டு ஒன்றைப்பார்ப்போம். இங்கு ஒருவர் விளை யாட்டின் சூத்திரதாரியாக இருப்பார்(Admin). மற்ற இருவர் சேர்ந்து விளையாடுவார்கள். இருவரை ஒரே நேரத்தில் காதலிப்பது அப்படி ஒன்று! அவள் அழகான பெண். (அழகுக்கு வரைவிலக்கணம் இல்லை. பலர் அழகு என்று சொல்கிறார்கள்) படிப்பு மட்டம். க.பொ.த உ/த இல் கணிதப்பிரிவில் துலங்கும் ஒருவனையும், உயிரியல் பிரிவில் திறமைசாலியான ஒருவனையும் காதலிக் கிறாள். அவர்களுக்கும் சாடை மாடையாகத் தெரியும். "அது வெறும் நட்புத்தான். இதுதான் காதல்" என்று இருவருக்கும் சொல்கிறாள். அவர்களும் நம்புகிறார் கள். கட்டிளமைப் பருவத்தில் எதிர்ப்பால் கவர்ச்சி கண்ணை மறைக்கும். உண்மையைத் தேடாது. "யார் அதிக பணம் சம்பாதிக்கும் நிலைக்கு வருகிறாரோ அவரைப் பிடித்துக்கொண்டு மற்றவரைக் கழற்றி விடலாம்" என்பது அவளது குறி! புத்திசாலிகள் கூட இத்தகு விளையாட்டுகளில் அகப்பட்டுக் கொள் கிறார்கள்.

"நாளை முதல் குடிக்க மாட்டேன் சத்தியமடி தங்கம் இராத்திரிக்குத் தூங்கவேணும் ஊத்திக்கிறேன் கொஞ்சம்" என்பது பழைய சினமாப் பாடல். இந்தப் பாடலைக் கேட்கும்போது இரண்டு விடயங்கள் தெளிவாகப்புரியும். இந்தச் சத்தியத்திற்கு எந்தப் பெறுமதியுமில்லை என்பது ஒன்று. மது என்பது தூக்கம் வரக் குடிக்கப்படுவது. கலியாணவீட்டில் சந்தோஷமாக இருக்கக் குடிக்கப்படுவது. செத்தவீட்டில் கவலையாக இருக்க அல்லது கவலையை மறக்கக் குடிக்கப்படுவது. வேலை செய்தபின் களைப்பு மாறக் குடிக்கப்படுவது. பிள்ளை பிறக்கும் போது வயிற்றுப்புண் மாறக் குடிக்கப்படுவது. எழுத்தாளர்கள், கவிஞர்கள் கற்பனை உருவாகக் குடிப்பது. அப்பப்பா ! அந்த மாதிரி ஒரு சர்வ வல்லமை நிவாரணி! இந்தச் சர்வ வல்லமை நிவாரணி யைக் கண்டுபிடித்தவருக்கு ஆகக் குறைந்தது ஒரு நோபல் பரிசாவது வழங்கியிருக்க வேண்டுமே! ம்..ஃஊஹும்!அல்கஹோல் என்பது ஒரு உணவுப் பொருள் கூட இல்லை. அது ஒரு நஞ்சுப்பொருள் என்பது சா/த விஞ்ஞானம் வரை படித்தவருக்குக் கூடத்தெரியும். ஆகவே அது தூக்கம் வர உதவும் என்பது பொய் என்பது மற்றது. "குடி குடியைக் கெடுக்கும்" என்பது எமது மொழியில் மிகப் பழைய பழமொழி.

"உண்ணற்க கள்ளை உணிலுண்க சான்றோரான்
எண்ணப்பட வேண்டாதார்"

என்று வள்ளுவர் சொல்லி ஆயிரக்கணக்கான வருடங்கள் ஓடிவிட்டன. ஆயினும் "மது அருந்துதல் "போதைபாவித்தல்" போன்ற ஐவர் விளையாடும் உளவிளையாட்டுகள் அதிகரித்தே செல்கின்றன. இந்த ஐவரில் முக்கிய பாத்திரமான கதாநாயகர் பாத்திரம் எடுப்பவர் மது அருந்துபவர். அதிகம் துன்புறுத்தப்படும் பாத்திரம் எடுப்பவர் மனைவி (திருமணமானவரா யின்)அல்லது தாய் (திருமணமாகாதவர்களில்)உள மருத்துவர் அல்லது சீர்மியர், இந்த அடிமைத்தளையில் இருந்து நாயகரைக் காப்பாற்றும் பாகம் ஏற்பார். அவர் நன்மைக்காகவே செயற்படுவார் ஆயினும் அவரையும் சேர்த்துத்தான் இந்த நச்சுவட்டம் சுற்றும். "பாவம் அவன்! அவனுக்கு ஒருத்தரும் காசு குடுக்கினமில்லை. வெளிநாட்டிலையிருந்து ஆக்கள் வரேக்கை அவனுக்கும் ஆசை இருக்குந்தானே" என்று இரங்கி ஒத்துணர்வும் இடையிடை பணமும் வழங்கும் ஒரு பாத்திரம் இருக்கும். அது ஒரு நண்பராக இருக்கலாம். சிலவேளை (திருமணமானவரெனில்)தாயாகவும் இருக்கலாம். உயிர் போகும் கடைசி நிமிடத்துளி வரை இவரை இவ்விளை யாட்டிலிருந்து விலகிவிடாமல் பார்த்துப் பார்த்துத் தூண்டிக்கொண்டே இருப்பவர் மது விற்பனையாளர் அல்லது போதைப்பொருள் விற்பனையாளர். இவர்கள் விளையாட்டைக் கைவிட்டால் அவரது வருமானம் படுத்து விடும். இப்போதெல்லாம் தரம் 9,10இலேயே மாணவர்கள் இவ்வலையில் பூச்சியாகிவிடுகிறார்கள்! "மது இல்லா விட்டால் நண்பர்கள் இல்லை" என்ற நிலை மிகப்பரிதாப மானது. பயங்கரமானது !

"பிரையன் கூறியன் என்பவரால் எழுதப்பட்ட, "மது எனும் நண்பனே!" என்ற கவிதை அர்த்தம் பொதிந்தது..

**மது எனும் நண்பனே !**

*மது மயக்கம் !மறுபடி நீ எனை நுகர்ந்துவிட்டாய் !*
*நீண்ட நாள் நண்பனைப்போல் திரும்பி விட்டாய்.*
*சில காலமாயினும் உனைக் காணேனென*
*நினைத்திருக்க*
*அதே மந்தகாசப் புன்னகையுடன் நீ அருகில் !*

*நேற்றிரவு சில மிடறுகளில்எனைச்சோரச்செய்தாய்,*
*இடியப்பச்சிக்கலாம் வாழ்வென உணர வைத்தாய்*
*மனம் நெருக்கீட்டில் தோல்விகளை எண்ணியது*
*திசை திரும்பிப் பார்த்தேன் நண்ப!*

*உணர்ச்சியற்றுப்போக உதவியாய் நீ*
*இன்னும்நாலு மிடறு, இன்னும், இன்னும்கொஞ்சம்*
*நிதானமான காலத்தை விட இதென்ன சிறப்பு ?*
*வலி குறைய வேணும் அதுவே நினைப்பு !*

*நண்ப,நாம் பிரியத்தான் வேண்டும்.*
*தவறு ஏராளம் செய்தாயிற்று !*
*உடனிருப்பு, ஒத்துணர்வு...நன்றி நண்ப*
*வேதனை குறைய வழிதான் என்ன ?*

(மொழிபெயர்ப்பு -விழி )

"நீதிமன்ற அறை" என்ற உள விளையாட்டுப் பலரால் ஆடப்படுவது. நீதிமன்ற அறை ஒன்றில் எப்படி வழக்காளி, எதிரி, வாதி தரப்பு வழக்கறிஞர், பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர், சாட்சிகள் எல்லாரும் தாம் சொல்வதே சரியென முதலில் இருந்து முடிவுவரை இறுக்கிப் பிடித்தபடி நிற்பார்களோ, அதேபோல வாழ்க்கையிலும் பல சந்தர்ப்பங்கள் வரலாம். மற்றவர்

சொல்வதில் உள்ள உண்மையை, நியாயத்தை அல்லது கருத்தைப் புரிந்துகொண்டு தமது கருத்தை மாற்றாமல், மன்னிப்புக்கேட்காமல் சமூகமே ஓடிக் கொண்டிருக்கும் வரை பலர் விளையாடும் இத்தகைய விளையாட்டுகள் அதிகரிக்கும். சமூக உள நலம் இறங்கிச் செல்லும்.

சொற்கள், பணம் என்பவற்றை விளையாட்டு உபகரணங்களாகக் கொண்டு விளையாடப்படும் விளையாட்டுகளுக்கு அப்பால் உடல் உறுப்புக்களைக் கொண்டு விளையாடப்படும் விளையாட்டுகளும் உள்ளன. தமக்கு அதிக வருத்தம் என்று கூறி மற்றவர்களிடம் அனுதாபம் பெறுவதற்காக, பல மருத்துவர்களையும் மாறி மாறிச் சந்தித்துக்கொண்டிப்பவர்கள் இருக்கிறார்கள். பொருள்கள் வாங்கக் கடைகளுக்கு ஏறி இறங்குவதுபோல் மருத்துவர்களிடம் ஏறி இறங்கிக் கொண்டிருப்பார்கள். (Doctor shopping ) சிலவேளை சத்திர சிகிச்சை நிபுணர்கள் பலரைச் சந்தித்துப் பல சத்திர சிகிச்சைகளைச் செய்வித்துக் கொண்டிருப்பார்கள். "இந்தக் கருப்பை இனித் தேவையில்லைத் தானே. சும்மா இருந்து பிறகு கான்சர் அப்பிடி இப்பிடி ஏதும் வர முதல் எடுத்துவிடுவம் டொக்டர்!", "இந்த அப்பெண்டிக்ஸ் இருந்தால் தானே அப்பெண்டிசைட்டிஸ் வரும். அதை எடுத்துவிடுங்கோ டொக்டர்", "இந்தப்பல்லு சும்மா கொதிக்குது. எல்லாத்தையும் ஒரே அடியாப் புடுங்கிப்போட்டு "டென்சர்" போடுவம்" போன்றவை இவர்களின் வகை மாதிரி உரையாடல்களாகலாம்.

உள நோயியல் ரீதியாகப் பார்த்தால், எண்ணச்சுழல் நிர்ப்பந்தம் சார்ந்த விளையாட்டுகளும் ,மனச்சோர்வு சார்ந்த விளையாட்டுகளும் சந்தேக நோய் சார்ந்த விளையாட்டுகளும் பல உள்ளன. "இந்தப் பிரச்சினைக்கு என்ன செய்வது?" என்று பலரிடம் சென்று ஆலோசனை கேட்பார்கள். சொல்லப்படும் தீர்வுகளுக்கெல்லாம், "ஒ, செய்யலாம்தான். ஆனால்…" என்று ஏதோ ஒரு காரணம் சொல்லி மறுப்பார்கள். "என்னுடைய பிரச்சினைக்கு யாராலும் தீர்வு காண முடியாது" என்று தமக்குத் தாமே நிறுவிக்கொண்டு வாழ்வார்கள்.

நாங்கள் உள விளையாட்டுகளை விளையாடா திருப்பதும் விளையாடுபவர்களிடமிருந்து கொஞ்சம் விலகி இருப்பதுமே தெரிவு முறைகளாகும்.

முடிவைத் தொடுவாய் முயன்று" என்ற இத்தொடரில் இதுவரையில் நாங்கள் பலவேறு கோணங்களிலிருந்தும், பல வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காணும் முறைகள் பற்றி அல்லது எந்தத் தெரிவு சிறந்ததாக இருக்கும் என்பது பற்றி விரிவாகப் பார்த்திருந்தோம். தொடர் நிறைவு பெறும் இந்த நேரத்தில் வாசகர் அனைவருக்கும், தொடரைப் பிரசுரித்து வந்த ஜீவநதி ஆசிரியருக்கும் நன்றி கூறி, உங்கள் பொன்னான பின்னூட்டல்களையும் எதிர் பார்க்கிறேன்.

(முற்றும்)

## காதில் ஒலிக்கும் காற்று

காதில் ஒலிக்கும் காற்று
உறைந்து போனது
தேடலின் ஒலியில்.

இன்றைக்கும் நாளைக்குமான
என் நினைவுகள்
கண்ணீர்த் துளியின் கண்களில்
நிர்வாணக் காற்றின் துடிப்பாய்
சிலிர்க்கின்றன அடி வயிற்றில்.

இறந்தவர்களால்,
மரணத்தின் சிரிப்பை
ஒரு போதும் நினைவுகொள்ள இயலாது.

வேதனையின் நாதம் போல்
பணிய மறுக்கும் நினைவுகள்
அசையாமல் நிற்பதாகத் தோன்றும்
பாலைவனத்து பனை மர மச்சைக்குள்
விடிகாலை அலைகளில்
பயணிக்கின்றன.

நேற்றைகளின் கசப்பான உருவங்கள்
ஒற்றை பிறப்பை விட
பெரிதான சிரிப்பின் இலைகளில்
கால எல்லையற்ற நாளையை
இழைக்கின்றன.

## The Air I Hear

The air, I hear,
froze to the sound searching.

And my memory
present and future tickles
the womb like the pulse
of this naked air
in the eye of a tear drop.

The dead cannot remember
even the memory of death's laughter.

But memory defiant like
the sound of pain
rides the wave at dawn
in the marrow of the desert
palm stands looking still
and the bitter shape
of yesterdays weaves
timeless tomorrows
in the leaves
of laughter larger than
singular birth…

Keorapetse Kgositsile

கியோராபெட்சே கோசிட்சைல்
தமிழில்: ஜி.ஏ. கௌதம்

## காடுலாவு காதை பாகம் 2
## நாவல் தொடர்

தமிழ்க்கவி

# காடுலாவுகாதை 2

*27*

ஆனையிறவுக்கான சமர் பெயர் சூட்டப்படாமலே நடந்தாலும் அந்த சமர் முடிவில் அதற்கு "ஆகாயக்கடல் வெளிச்சமர்" என பெயர் சூட்டப்பட்டது. சுமார் ஒரு மாதத்திற்கு மேலாக நடந்த பெரும் தாக்குதல் அதுவாக இருந்தது. பெருமளவில் புதிய போராளிகள் இணைந்தனர். ஆனால் அவர்களுக்கு அவசரமாக பயிற்சி கொடுக்கும் வசதிகள் இல்லாததால் அவர்களை சீருடையுடன் அரசியல் வேலைகளுக்காக அனுப்பினார்கள்.

அப்படி வந்தவள்தான் சந்திரிக்கா. அவளுடைய அண்ணனின் ஞாபகார்த்தமாக தனக்கு அந்தப்பெயர் தான் வேண்டுமென்று அரசியற்றுறை மகளிர் பொறுப் பாளரிடம் வேண்டிக்கேட்டுப் பெற்றுக் கொண்டாள். திடகாத்திரமான உடலும், அறிவும் நிரம்பப் பெற்றவளாக காணப்பட்டாள்.

பானு அன்றைய தினம் மாலை கூட்டத்தை பால மோட்டைப் பாடசாலையில் ஒழுங்கு செய்திருந்தாள். லெச்சிமி புறப்படு முன்னமே சந்திரிகாவைப்பற்றி பானுவிடம் கூறி அனுமதி பெற்று சந்திரிகாவையும் சேர்த்துக் கொண்டாள். பானுவுக்கு பேச வராது அவள் சும்மா கதைப்பதே அசட்டுத்தனமாக இருக்கும். எனவே சந்திரிகாவை பேசவைப்பது என ஒத்துக் கொண்டாள். சந்திரிகாவும் காலையிலிருந்தே தான் பேசுவதற்கான எல்லாவித குறிப்புகளையும் ஒரு நோட்டில் குறித்துக் கொண்டாள். லெச்சிமியிடம் அதைக்காட்டி "இதைச் சொல்லலாமா? இதைச்சொல்லலாமா?" என ஒவ் வொன்றையும் கேட்டு வைத்திருந்தாள்.

பாலமோட்டைப்பாடசாலை ஒரு ஆரம்பப் பாட சாலை அதற்கு ஒரு சிறு கட்டடம் இருந்தது. சுமார் இருபத் தைந்து பிள்ளைகள் மட்டுமே படித்தார்கள். உதவிக்கென வந்திருந்த ஏரியாப் போராளிகள் வீடுவீடாகச் சென்று கூட்டத்திற்கு ஆட்களை சேர்த்தாலும் ஒரு இருபது பேர் வரையிலேயே மக்கள் வந்தனர். அதிலும் பெரும்பான்மை நாற்பது வயதிற்கு மேற்பட்டோர். இவர்களை விட வழிப் போக்கர்களாக வந்த இரண்டு மூன்று ஆண்களும் இருந்தனர். இவர்கள் போர்கள் நிலவரம் பற்றி அறிய வந்தவர்களாகவே இருந்தனர். பானு எதற்கும் இருக் கட்டும் என்று முதலில் சந்திரிகாவை பேசும்படி கூறினாள்.

சந்திரிகாவின் தோற்றமும் சீருடையும், புதிய முகமும் அவர்களுக்கு இவள் விசேடமாக வந்திருக்கும் ஒரு போராளி என்பதாக தெரிந்தது. சந்திரிகா பேச ஆரம்பித்தாள். தன்முன்னே ஆயிரக்கணக்கான மக்கள் இருப்பதாக அவள் கருதிக்கொண்டே பேசினாள். இயக்கத்தின் நோக்கம், போரின் அவசியம், மாவீரர்களின் தியாகம், ஆனையிறவின் அழிவில் ஏற்படப்போகும் விடிவு என அவள் அடுக்கிக் கொண்டே போக, லெச்சிமி வியப்பில் ஆழ்ந்து போனாள் அவ்வளவும் அவள் படித்தும் மேடைகளில் போராளிகள் பேசிய பேச்சுகளிலிருந்தும் பெற்றுக் கொண்ட தகவல்கள்தான். ஒரு அருமையான சொற்பொழிவு. சுமார் அரைமணிநேரம் யாரும் அசையா மல் கேட்டார்கள். என்றால் அவளுடைய குரல் ஈட்டிபோல கேட்பவர் இதயத்தை துளைத்துச் சென்றது.

அவ்வளவுதான் மற்றவர்கள் யாரும் பேசவில்லை. மக்களுக்கும் கேள்வி கேட்க வேண்டிய அவசியம் இருக்க வில்லை. கூட்டம். நிறைவு பெற்றது. திரும்பி வரும் போது லெச்சிமியின் சைக்கிளில், தான் முதல் ஏறிக் கொண்டு லெச்சிமியை முன் பாரில் ஏற்றி தான் உழக்கினாள்.

ஆனையிறவுச்சமர் பல பெரிய தளபதிகளுடனும் பெருமளவான தொகையில் ஆம் அதுதான் முதலில் அதிகப் படியான போராளிகளை காவு கொடுத்த போராக மாறி, இறுதியில் இரண்டாயிரம் இராணுவத்தினரை கட்டைக் காட்டின் வழியாக தரையிறக்கியதனால் முறியடிக்கப் பட்டது. ஆவணி மாதம் ஐந்தாம் நாள் அந்த சமரானது "ஆகாயகடல் வெளிச்சமர்" என்ற பெயருடன் முடிவுறுத்தப் பட்டது.

சமரின் இறுதிநாளன்று லெச்சிமி தன் வீட்டுக்கு சென்றிருந்தாள் மறுநாள் திங்கட்கிழமை மருத்துவமனை திறக்க வேண்டும். எனவே அதிகாலையிலேயே அவள் புறப்பட்டு வந்திருந்தாள் அவள் முகாமை அடைந்த போது பெண்கள் சிலர் அங்கே வந்திருந்தனர். ஏதோ ஏரியா விவகாரமாக இருக்கும் எனக்கருத்திக்கொண்டு அவள் தனது வேலைகளை முடித்து விட்டு மருத்துவமனைக்கு புறப்பட்டாள். அப்போது கோழியகுளம் ஏரியாப் போராளி அவளிடம்,

"அக்கா ஒரு வீரச்சாவு கோழியகுளத்தில அதைவிட உங்கட மருந்தகத்துக்கு முன் ஒழுங்கைக்குள்ள ஒரு பிள்ளை பாம்பு கடிச்சு செத்திருக்கு…அதால மருந்தகத்தை திறக்கிறது சரியில்ல எண்டு அக்கா(பொறுப்பாளர்) சொல்லச்சொன்னவா" என்றாள்.

"அடடா ஆர்பிள்ளை" என்று கேட்டாலும் தான் இருந்திருந்தால் அந்த சாவை தடுத்திருக்கலாம் என்ற எண்ணமே, அவளுக்கு துயரத்தை தந்தது. அந்தப்பிள்ளை ஏழாம் ஆண்டு படித்துக் கொண்டிருந்த பிள்ளை. அவளுக்கும் தெரியும் மருந்தகத்திற்கு வந்திருக்கிறாள். காலில் கல்லிடித்து விட்டதாக கூறி ஒரு தடவை மருந்து கட்ட வந்திருந்தாள். அதற்கு மேல் அவள் எதுவும் பேசவில்லை. "என்ன இப்ப வீரச்சாவு நடந்த வீட்டுக்கு போவதா பாம்பு கடித்த சாவை பார்ப்பதா"

"இரண்டும் இல்லை நீங்கள் ஈச்சங்குளம் போக வேண்டும். துயிலுமில்லத்தில் குழி வெட்டும் ஒழுங்கை செய்ய வேணும், அதோட துயிலுமில்ல ஒழுங்கையும் பாத்திட்டு நில்லுங்க அஞ்சலிஉரை நீங்கதான் செய்ய வேண்டி வரும்."

வீரச்சாவடைந்த பிள்ளையைப்பற்றி அவளுக்கு எதுவும் தெரியாது என்ன பேசுவது. என்பதையிட்டு அவள் கவலைப்படவில்லை. யாரோ எவரோ யாருக்காகவோ ஆயுதம் ஏந்தி போராடி யாருமற்ற இடத்தில் உயிரை விட்டிருக்கிறாள். அவளுக்கு வயது கூட பதினேழுதான் அவளுக்கு என்ன அரசியல் தெரிந்திருக்கும், என்பதையிட்டு எந்தக்கேள்வியும் இல்லை. புதுவை அண்ணர் சொன்னது போல பட்டுப்புடவைகள் கட்டும் அழகினை விட்டு எறிந்தவள் எண்ணற்ற கனவுகளுடன் உலா வர வேண்டிய வயதில்

பெரிய இலட்சியத்தை ஏற்றுக் கொண்டு பாதுகாப்பான அரண்கள் இல்லாத மணல் வெளியில் போராடி உயிரைத் துறந்திருக்கிறாள். அவளைப்பற்றி பேச இதைத்தவிர வேறென்ன வேண்டும். அதேசமயம் அவளுக்கு தனது மகனும் இந்த பால்மணம் மாறாத வயதில் அதேகளத்தில் நிற்கிறான் என்ற நினைவு அவளை மோசமாக துன்புறுத்தி யது. சாப்பிட்டானா? குடிக்க தண்ணீர் கிடைக்குமா? ஆறி யிருக்க ஒரு நிழல் கிடைக்குமா? என்ற சிந்தனைகள் அவளைக்கலக்கியது விழிகளின் ஓரமாக நீர் குமிழி யிட்டது. ஏனோ அவளுடைய உள்ளம் பதைத்தது. (அதே தினத்தில் அவளுடைய மகனும் வீரச்சாவடைந்த செய்தி அவளுக்கு கிடைக்கவில்லை அதற்கு காரணம் ஆணாதிக்க உலகம்) காரணம் அவளுக்கு புரியவில்லை.

லெச்சிமியும் கோமதியும் பாலமோட்டை வீதி வழியாக கதிரவேலர் பூவரசன்குளம் சென்று அங்கிருந்து தெற்கே திரும்பும் நொச்சிக்குளம் செல்லும் காட்டு வீதி யூடாக பயணித்தனர். சுமார் ஒருமைல் சிறு சோலைக் காட்டை கடக்க, வில்வமரக்காட்டை காணலாம் பழைய கால மதிலொன்று இடிந்தநிலையிலும் அரணாக நிற்க அந்த வில்வ மரக்காட்டின் உள்ளே ஒரு சிறு கோவில் கட்டடம் தெரியும் நடைபாதைவழியாக சென்று அதை வழிபடலாம் அதற்கு முத்துமாரி என இருந்த பெயர் இப்போது கண்ணகை என மாறியிருந்தது. முத்துமாரிகள் கண்ணகையாக மாறிய பல கோவில்கள் வன்னிக்காடு களில் இருந்தன. இது ஆளுகின்ற மன்னன் மாறுகின்ற மதத்தை மக்களும் பின்பற்றிய செயல் அதை விரிவாக இங்கே பார்க்க முடியாது. ஆயினும் சிற்பங்களில் அந்த சான்றுகளும். காவல் தெய்வங்களும் இதை நிரூபித்துக் கொண்டிருக்கின்றன. மேலும் இந்த ஆலயங்களின் பிரதான கூத்து காத்தவராயன்கூத்தாகவும் இருக்கும்.

வண்ணான்குளம் கடந்து பிசின் வழிந்து கொண்டிருந்த பென்னம்பெரிய ஒதிய மரத்தடியில் வரும் போது கோமதி, லெச்சிமியை திரும்பிப் பார்த்து “போன கிழமை அம்புஷ் நடந்த இடம் இதுதான்” என்றாள். கல்மடுப்பிரதேச நிதி அறிக்கை கொடுக்கிற போராளி வந்து கொண்டிருந்த போது, “இந்த ஒதியமரத்துக்கு பின்னால நிண்டுதான் சுட்டிருக்கிறாங்கள் புளொட் என்று சொல்லுகினம். அவன் முன்காட்டுக்கால பாஞ்சு ஓமந்தைக்காட்டுக்கால வவுனியாவுக்க போயிட்டான்.” கோமதி விரைவாக தன் மிதிவண்டியை செலுத்தினாள். ஏன்னதான் ரைபிளைத் தோளில் கொண்டு சென்றாலும் அதை சேப்டிதடி வைத்திருந்தாலும் எதிரியை கண்டதும் உருண்டு விழுந்து நிலையெடுத்து சுட நான்கு செக்கன் கள் ஆகும். அதற்குள் நிலையெடுத்து நிற்கும் எதிரி தனது ரைபிளை இயக்கிவிட்டு ஓடிவிடலாம். எனவே காட்டுவழி களில் ரைபிள் கொண்டு சென்றாலும், அது பாதுகாப் பல்ல. எப்போதும் மெய்க்காவலர் வாகனம் ஓட, பொறுப் பாளர் பின்னே இருந்தே பயணிப்பதும் வழக்கம் அதுவே போகவிட்டு பின்னால் சுடுவதும் எதிரிக்கு மிக இலகுவாக இருக்கும்.

ஒருதடவை அம்பஷ் கொடுத்த இடத்தில் திரும்ப வர மாட்டான் என்ற விடயம் அவளுக்கு தெரியவில்லை. இது மனித மனம். ஒருதடவை வழியில் ஒரு பாம்பைக் கண்டுவிட்டால் மறுபடி அந்த இடத்தை கடக்கும் போதெல்லாம் அந்தப்பாம்பு அதிலே நிற்பது போன்ற உணர்வு வருவதை தவிர்க்க முடிவதில்லை. கோமதியும் அதை நினைத்தே வேகமாக ஓடினாள். சுமார் மூன்று மைல் நீளமான காட்டுப்பகுதி. அது சாதாரணமாக யானைகளும் காட்டுப்பன்றிகளும் உலவுவதை காணலாம். ஒரு நாள் இரவில் வந்துகொண்டிருந்த ஒரு பொறுப் பாளரை யானை வழி மறித்து விட்டது. அது விலகுவதாக இல்லை. அவனால் திரும்பிப் போகவும் முடியவில்லை. எனவே அதை தனது ஏகே ரக துப்பாக்கியால் சுட்டுத் தள்ளிவிட்டான். அதுவும் அந்த வீதியிலேயே விழுந்து உயிரை விட்டது. அதன்பிறகு ஆறுமாதங்களுக்கு மேலாக அந்த இடத்தில் யாரும் மூச்சு விட முடியவில்லை. அவ்வளவு நாற்றம் அதை அப்புறப்படுத்தவும் முடிய வில்லை. இதேவழியில் நொச்சி மோட்டை ஆறு இடையில் வருகிறது. அந்த வழியாகப் போய் அது பாலியாற்றில் கலக்கும். அதன் பத்து பதினைந்தடி ஆழத்தை இருபுறமும் சீவி சரிவாக்கி அதன்வழியாக வாகனங்களை ஓட்டிச்செல்ல வகை பண்ணியிருந்தார்கள்.

போர் நினைத்து வருவதில்லை திட்டமிட்ட தாக்குதல் களும் மிகக் குறைவு. திடீர் திடீரென வரும் இராணுவ முன்னேற்றங்களை தடுத்து அவர்களை மீளவும் அவர் களுடைய இடத்திற்கே அனுப்பும் நடவடிக்கை திடீரென முன்னறிவித்தல் இல்லாமல் வரும். அப்போதைக்கான ஆயத்த செயற்பாடாகவே துருப்புகளை நகர்த்தும் வீதிகள் அனைத்தும் கிரவல் போடப்பட்டும், ஆற்றுவழிகள் சீரமைக் கப்பட்டுமிருந்தன...

நொச்சிக்குளத்தின் கிராமத்தை சுற்றி செல்வதைவிட பின்புறத்தில் கடந்து கல்மடுவை அடையலாம் ஆனால் அவர்களுடைய வேலை ஈச்சங்குளத்தில்தான், எனவே வீதி வழியாகவே சென்றனர். ஈச்சங்குளத்தில் அவர்களுக்கு பெரிதாக வேலை இருக்கவில்லை அந்த ஏரியாவுக்கு பொறுப்பான ஆண் போராளி ஏற்கெனவே ஏழெட்டு குழி களை வெட்டி தயார் நிலையில் வைத்திருந்தான். காரணம், அந்த ஆகாயக்கடல் வெளிச்சமர் மூலம் அன்றாடம் போராளிகளின் உடல்கள் வந்து கொண்டி ருந்தன. ஆகவே எதற்கும் இருக்கட்டுமே என்று வெட்டி வைத்திருந்தான்”. பாவம் அதில் ஒன்று அவனுக்குத்தான் என்று அப்போது யாருக்கும் தெரியாது. போர் இன்றுடன் முடிந்து போனதால், ஆனையிறவிலிருந்து உடல்கள் வருவது நின்று விட்டது.

இப்படியாக திரும்பவும் மாதர்பணிக்கு மகிழங் குளத்தில் அமைந்துள்ள தமது முகாமுக்கு அவர்கள் செல்லும் போது இரவு எட்டுமணி. மறுநாள் எழுமணிக் கெல்லாம் லெச்சிமி பாலமோட்டைக்கு போனாள் அந்த பாம்பு கடித்து இறந்து போன சாவு வீட்டில் இன்னமும் சனம் கூடியிருந்தனர். அவள் துக்கம் விசாரிப்பதற்காக அங்கே சென்றாள். அவளுக்கான மத்தியான உணவை தயாரித்து வழங்கும் சரசு முன்னே நின்றாள் அவளைக்கண்டதும் ஓடி வந்து கட்டியணைத்து ஒப்பாரி வைத்தாள். இவளுக்கும் கண்கள் ஈரமாகின.

“படுக்கையில் வச்சு கடிச்சிட்டுது செத்து கொஞ்ச நேரங் கழிச்சுத்தான் பிள்ளைய எழுப்பப்போக தெரிஞ்சிது”

“அப்ப எப்பிடி பாம்பெண்டு...”

“அது போகாம பாய்க்கு அடியிலயே கிடந்தது.”

இந்த மரணம் சராசரியாக நடப்பதுதான், பண்டியால் தாக்கப்படுவதும் கரடி கலைப்பதும், முதலை கடிப்பதும் நடந்தாலும் மக்கள் எச்சரிக்கையாகவே பிழங்குவார்கள். ஆனால் ஒரு வைத்தியர் இல்லாமை எவ்வளவு கஸ்டம். லெச்சிமி ஒரு வைத்தியரே கிடையாது. அவளுடைய சந்ததியில் தந்தை தந்தையின்தாய் அவளுடை பரம்பரையில் நாட்டு வைத்தியம் செய்திருக்கிறார்கள். அவள் அதுபற்றி அறிவாள். அதைவிட இப்போது அவள் அனுபவ அறிவை வைத்தே இந்த மருந்தகத்தில் இருந்தாள். ஏதே கொஞ்சக் காலம் மருத்துவ மாதர்களுக்கு உதவியாளாக வேலை பார்த்திருக்கிறாள் அவ்வளவுதான்.. ஆனால் அவளால் எந்த பிரச்சனையும் வரவில்லை மாறாக பலருடைய பல நாள் வருத்திய நோய்கள் குணமாகிவிட்டன. அதற்காக அவளுக்கு தமது அன்பை தெரிவிக்க அவ்வப்போது விளாம்பழ மூடைகள், செவ்விளநீர், புளி, பன்றியிறைச்சி

மான் இறைச்சி போன்ற வேட்டை பொருட்கள் அவளுக்கு வரும் அவள் அவற்றை சக போராளிகளுடன் பகிர்ந்து கொள்வாள்.

அன்று ஒரு திங்கட்கிழமை யாழ்ப்பாணத்திலிருந்து பெரிய உயர்மட்ட பொறுப்பாளர்கள் வவுனியாவுக்கு வந்தார்கள் அவர்களுடைய பயணத்தேவைகளுக்காக ஒரு மினி பஸ் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. வவுனியா மன்னார் இரண்டு பிரதேசங்களுக்கும் எல்லா இடங்களுக்கும் போக முடியாது. பல இடங்களில் போராளிகளும் இல்லாமல் இராணுவமும் இல்லாமல், கொலை வலயமாக இருக்கும். அதை இதுதான் என சொல்ல முடியாது அடிக்கடி எல்லைகள் மாறும். ஆந்தக்குழுவுடன் யாரும் எதிர்பாராத விதமாக நளாயினி வந்திருந்தாள். பானு மாங்குளத்துக்கு மாற்றப்பட்டாள்.

மன்னார் மாவட்டத்திற்கு செல்லும் வாகனம் செல்லக்கூடிய காட்டு வழி தெரிந்தவளாக லெச்சிமி கூடவே சென்றாள். மன்னார் மாவட்ட அரசியற்றுறை முகாம் பண்டிவிரிச்சானில் இருந்தது. மக்கள் என்னவோ மடுவை நிறைத்திருந்தாலும். மடுவில் போராளிகள் முகாம் வைத்திருக்க முடியாது எனவே அண்மையாக மூன்று மைல் தொலைவில் இருந்த மடுமாதா தேவாலயவளாகம் பண்டிவிரிச்சானிலிருந்தே கவனிக்கப்பட்டது. பெண்களுக்கான தொழிற்பயிற்சி, சிறு கைத்தொழில், கல்வி வசதிகள் என செய்வதற்கான வேலைகள் முன்னெடுக்கப்பட்டது. குறிப்பாக போராளிகள் மாவீரர்கள் உள்ள குடும்பங்களிலிருந்து பயனாளர்களை தெரிவு செய்யும்படி ஒட்டுமொத்த மகளிர் பொறுப்பாளர் அறிவிறுத்தினார். அதன்பின் மாதர்பணிக்கமகிழங்குளத்திற்கே திரும்பினர்

வவுனியாவிலிருந்து நாவலர்வீதி நாலாங் கட்டைக்கு மேல் பம்பமடு, சாளம்பைக்குளம் தாலிக்குளம், பூவரசன்குளம், பாவற்குளத்தின் சில பகுதிகள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது. எனினும் பாவற்குளம் நாலாம் யூனிட் ஐந்தாம் யூனிட். ஏன்பவை கொலை வலயமே. அங்கெல்லாம் மகளிர் அணிக்கு தடை விதிக்கப்பட்டிருந்தது. ஆனால் பூவரசன்குளம் வழியாக தமிழீழ மகளிர் அணியின் பதில் பொறுப்பாளர் பாரதியை மன்னார் மாவட்டப் பொறுப்பாளர் வேணியுடன் அங்குள்ள பெண்களை சந்திக்க அனுப்பினார்கள். அவர்கள் உந்துருளியில் மன்னார்வவுனியா வீதி வழியாக புறப்பட்டு சென்றனர். அங்கிருந்து மடுவை அடைந்து மடுவிலிருந்து வில்லுக்குளம் வீதியால் அடம்பனை நோக்கி செல்ல முடிவு செய்தனர். பாரதி ஒரு சிறந்த முற்போக்குவாதி. தீவிர வாசிப்பாளர் உண்மையான பெண்ணியவாதியும்கூட பெண்களை மட்டுமல்ல நாட்டு மக்களையும் நேசிக்கும் பெண். பெற்றோருக்கு ஒரே பிள்ளை. அவளது இலட்சியத்திற்காக, பெற்றோரைக் கைவிட்டுவிட்டு வந்து அமைப்பில் இணைந்தவள்.

*28*

மாலை மூன்று மணிக்கெல்லாம் லெச்சிமியுடன் மூன்று பெண் போராளிகளை திரும்பவும் மாதர்பணிக்க மகிழங்குளத்தில் இருக்கும் முகாமுக்கு போகப் பணித்தாள். யாழ்ப்பாணத்திலிருந்து வந்த பொறுப்பாளர். அவளே ஒட்டு மொத்த மகளிர் அரசியற்றுறைப் பொறுப்பாளரும் ஆவாள்.

இப்போது மீண்டும் மன்னார்வவுனியா வீதியை தேர்ந்தெடுத்து, பயணம் செய்தால் ஆகக்கூடி கல்மடு வரை போகவே இருள் சூழ்ந்துவிடும். எனவே லெச்சிமி பின்புறக்காட்டு வழியாக போக முடிவெடுத்தாள். அவளுக்கு அந்தப்பாதை தெரியும். அது இருண்ட வனம். எனினும், இடைக்கிடையே வனவாசிகள் போல மக்கள் குடியிருந்தனர்.

தட்சணாமருதமடு மடுவை அடுத்துள்ள அகதிகள் அதிக அளவில் குடியிருந்த பிரதேசம். அதைக்கடந்து வரும் கிராமம், ஒரு பெரிய பாலத்தடியில் கிழக்கு மேற்காக பிரியும் கிரவல் வீதிகளைக் கொண்டிருந்தது. கிழக்கே செல்லும் வீதியில் இவள் திரும்ப, "அக்கா அந்தமற்றப்பாதை எங்க போகுது" என்றாள் கோமதி. "இது பாலம்பிட்டி மேற்கே போவது பெரியமடு வீதி பெவரியமடு கடந்து வரும் முக்கிய கிராமங்கள் இரண்டு கடந்தால் விடத்தீவுக்கருகில் மன்னார் யாழ்ப்பாணம் வீதியை தொடும்" என்றாள்..

அவள் லெச்சிமியுடன் வந்த தாரணியுடன் ஒரே மிதிவண்டியில் பயணித்தாள். எதற்கும் இருக்கட்டுமே என்று எண்ணி மூன்று மிதிவண்டிகளை அந்த சிற்றூர்தியின் கூரையில் போட்டுக் கொண்டு வந்திருந்தார்கள். அந்த மூன்றில் நான்கு பேர் பகிர்ந்து பயணித்தனர். அதாவது கோமதி கொஞ்ச கொஞ்ச தூரம் மற்றவர்களுடனும் பங்கு போட்டு பயணித்தாள். அந்த பங்கு லெச்சிமிக்கு வந்தால் கோமதியே சைக்கிளோட்ட வேண்டும் ஆனால் லெச்சிமியின் மிதிவண்டி ஆண்களுக்கானது. அதை அவள் மட்டும்தான் ஓடுவாள். எனவே லெச்சிமி தனியாகவே பயணித்தாள். காடு முடிவேயில்லாமல் நீண்டது. ஒரு இடத்தில் கிராமத்தின் அந்தம் என நினைக்கிற எல்லை "உறுமல்" என்ற பெயரில் நாட்டப்பட்ட கரும்பலகை தெரிந்தது. அதிலிருந்து வெகு தேய்மானமில்லாத இருசக்கர வாகனங்கள் சென்று வரும் பாதை தென்பட்டது. முன்னே போன தாரணி தனது மிதிவண்டியை அந்தப்பாதையில் திருப்ப "கூய்" என சத்தமிட்டாள் லெச்சிமி, "அங்க இல்ல அது கீரிசுட்டான் குறுக்கு வழி. இதால வாங்க நேரா" லெச்சிமி அவளைக்கடந்து ஒரு ஒற்றையடித்தடத்தில் மிதிவண்டியை செலுத்தினாள் வெகு சீக்கிரமாகவே அவர்கள் கீரிசுட்டான் பிரதான வழியுடனான கிராமத்தை அடைந்தனர். அந்த வனத்துக்குள் இரண்டொரு கல்வீடுகளும் தெரிந்தாலும் வீதிகள் பற்றைகளாகவே இருந்தது. அந்த வழிகடந்தபின் பல சிற்றாறுகளின் தேய்ந்த பள்ளங்களும் ஏறிஇறங்கிப்பயணிக்க வேண்டிய மாதிரியான வழியாகவும் இருந்தது. "தண்ணிவிடாய்க்குதே என்ன செய்வம்" என்ற லெச்சிமியை தொடர்ந்து எல்லோரும் அதையே கூற லெச்சிமி வனத்தை அண்ணாந்து பார்த்தாள். பின் சுற்றாடலையும் கவனித்தாள். "இன்னும் கொஞ்சத்தூரத்தில குளம் வருது. பெரியகுளம் அதுக்கு முதலே நாங்கள் வயல்பரப்பை காணுவம் அங்க தண்ணி இருக்கும்." என்றாள்.

"என்னண்டக்கா சொல்லுறியள்" என்றாள் கோமதி. "தண்ணியக்கண்டபிறகு சொல்லுறன்" என்றாள். அவர்கள் கடந்த இரண்டு மணித்தியாலங்களாக மிதிவண்டி ஓடுகிறார்கள். எங்கும் நிறுத்தவில்லை. அதனால் களைத்திருந்தனர். ஒரு பத்து நிமிட ஓட்டத்தில் வாய்க்கால வீதிக் கரையில் பயணிப்பதைக் கண்டாலும் அது விரைவிலேயே திரும்ப பற்றைகளூடாக சென்று கொண்டிருந்தது. பெரும் அரணைக்கொண்ட குளம் தனது வான்பக்கத்தை இவர்களுக்கு காட்டியபடி நின்றது. இரண்டொரு பெண்கள் சேலை துவைத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுடன் பேச்சுக் கொடுக்கமுன் அனைவரும் முகப்புத் துலுசில் நீரை அள்ளிக் குடித்தார்கள். அந்தப்பெண்களுக்கு போராளிகள் புதிதல்ல. அருகிலேயே மறைந்திருக்கும் இயக்கத்தின் பண்ணையொன்றில் வேலை செய்பவர்கள் அவர்கள். இப்போது லெச்சிமி சொன்னாள்." இதுதான் முள்ளிக் குளம். இதுக்கதான் பணிஸ்மென்ற் பண்ணை வச்சிருக்கினம். குலம் எங்கட ஊர்ப்பெடியன். வீட்ட வந்த நேரம் சொன்னவன்."

இயக்கத்தில் இணைந்த போராளிகள் தம்மால் போராட முடியாது என்றோ, அல்லது வேறு காரணங்

களுக்காகவோ, விலகப் போவதாக ஒரு சிறு கடுதாசியில் எழுதிக் கொடுத்தால் அவர் விலகலாம். இதை துண்டு கொடுப்பது என்று சொல்வார்கள். அப்படி துண்டு கொடுப்பவர்களை உடனே வீட்டுக்கு அனுப்ப மாட்டார்கள். அவர்களுக்கு இரண்டு வருடம் தண்டனையாக இப்படி பண்ணைகளிலோ அல்லது முகாம்களிலோ வேலை செய்தாக வேண்டும். அந்தக்காலம் முடிந்ததும் அவர்கள் வீடுகளுக்கு செல்ல அனுமதிக்கப்படுவர்.

"அக்கா இப்ப கொஞ்ச நாளைக்கு முன்னம் புளொட் இயக்கத்திற்கும் புலிகளும் மோதல் நடந்தது இஞ்சயா?"

"சீச்சீ அது வேற முள்ளிக்குளம் மன்னார் மாவட்டத்தில இருக்கு, சரி கதை முடிஞ்சா புறப்படலாம்" லெச்சிமி எழுந்தாள். அவள் கட்டியிருந்த ஆண்களுக்கான கைக்கடிகாரத்தில் முள் மூன்று மணியைக்கடக்க ஆரம்பித்திருந்தது. இன்னும் இரணை இலுப்பைக்குளம் எட்டுமைல். அங்கிருந்து கல்மடு குளவெளியூடாக நொச்சிக்குளம் எட்டுமைல். நொச்சிக்குளம் காடும் மூன்று மைல்களுக்கு குறையாது. வண்ணான்குளம் கதிரவேலர் பூவரசன்குளம் மாதர்பணிக்கமகிழங்குளம் மூன்றரை நான்கு மைல்கள், மொத்தமாக ஏறக்குறைய இருபத்து நாலு மைல்கள் ஓடவேண்டும். நிலவுகாலம் அட்டமி கடந்திருந்தது. எனவே காடு கடந்துவிட்டால் போய்விடலாம். என்று மனதுக்குள் நினைத்தவாறே, தனது மிதிவண்டியை முன்னே செலுத்தினாள் லெச்சிமி. அப்படியும் கல்மடுவில் மணியண்ணருடைய கடையில் தண்ணீர் கேட்கப் போக அவர் இவர்களுக்கு பால்போட்ட தேநீர் ஊற்றிக் கொடுத்தார். மரத்தடியில் விழுந்து கிடந்த மாங்காய்ப்பிஞ்சுகளை காற்சட்டைப்பைகளில் போட்டபடி புறப்பட்டனர். லெச்சிமியும் சேலைத்தலைப்பில் இரண்டு மாங்காய்களைப் போட்டாள்.

ஆனாலும் நொச்சிக்குளம் காட்டை கடக்கும் போழுதே மைம்மல் பொழுதாகிவிட்டது. பெரிய குரலெடுத்துப் பாடியவாறே மிதிவண்டிகளை இயக்கினர். ஒருவர்முடிய ஒருவர் பாடியே ஆக வேண்டும். அந்த சத்தம் தான் வனவிலங்குகளை பாதையிலிருந்து அப்புறப்படுத்தும். எனவே பாடல்கள் வசனங்களோடும் வசனங்களை மறந்தால் தத்ததனதான என்றும் முழங்கியது. ஒருவழியாக கடுமையான களைப்புடன் போன போக்கில சாப்பிட்டிட்டுபடுத்திருவன் என்று வீராப்பாக வந்தவர்களை கழுவிக்கவிழ்த்து வைத்திருந்த பானை சட்டிகளே வரவேற்றன.

தாரணி அழுதேவிட்டாள். "மத்தியானமும் நான் வரக்க கறி முடிஞ்சிது பாத்துக் கொண்டு நில்லாம வெளிக்கிடு கெதியா எண்டு அக்கா பேசினதால வெளிக்கிட்ட நான். இஞ்ச இப்பிடி செய்திருக்கினம்." பின்நேரப் பொழுது டக்கெண்டு போயிரும் காட்டுவழி அதான் கெதியா போகச் சொன்னவை அதுக்கு நீ நேரத்தோட சாப்பிட்டிருக்கலாமே" என்று கடிந்தாள் கோமதி. லெச்சிமி கொஞ்சம் பொறுங்கடி நான் அண்ணாக்களின்ர கிச்சினுக்கு போய் ஏதும் கிடைக்குமா எண்டு பாத்திட்டு வாறன்" என்று புறப்பட்டாள். "நானும் வரவா" என்ற தாரணியை "விசரி நானே பொடியளுக்கு தெரியாம சந்தனமய்யாட்ட ஏதுங் கேக்கலாமா எண்டு பாக்கப்போறன் இதில நீயுமா? போடிக், நோண்டியாப்போகிடும்" என்று கண்டித்துவிட்டுப் போனாள்.

சந்தனமய்யா ஆண்போராளிகளின் சமையற்காரர். முகாமின் பின்புறமாக ஒரு வீடு கிச்சினாக இருந்தது. அவ்வப்போது மீதமாகும் உணவுகளை பிள்ளைகளுக்கும் கொடுத்து விடுவார் அவருடைய உணவு வந்தால் பகிர்ந்து உண்பார்கள். காரணம் இவர்களுடைய முகாமிற்கு சமையலுக்கு ஆள் இல்லை. அவர்களேதான் முறை வைத்துக் கொண்டு சமைக்க வேண்டும். இப்படி அனைவரும் வேலைகாரணமாக வெளியே போனால் வந்துதான் சமைக்க வேண்டும். லெச்சிமி சந்தனிமய்யாவின் கிச்சினுக்கு போனபோது அய்யா இறைச்சியை பதப்படுத்த அவித்துக் கொண்டிருந்தார். "அது வந்து வேட்டைக்காறர் இறைச்சி கொணந்து குடுத்தவங்கள் உங்களுக்கு எடுத்து வச்சன் பாத்தா நீங்கள் ஒருவரும் முகாமில இல்லையாம் எண்டு உங்கட பக்கத்து வீட்டு பெடியள் சொன்னாங்கள் அதுதான் அவிச்சு வைக்கிறன்" என்றார். "பசிக்கிதய்யா இப்பான வந்தம். நாலு பேருக்கு சாப்பிட ஏதும் தருவீங்களா?"

"ஐயோ இருங்கக்கா இண்டைக்கு படையணிக் காறப் பொடியளும் வந்ததால கூடத்தான் சமைச்சன்" என்றபடி ஒரு பெரிய அலுமினிய சட்டியில் சோறு, இறைச்சிக்கறி, கத்தரிக்காய் வெள்ளைக்கறி, பருப்பு எல்லாவற்றையும், பக்கம் பக்கமாக வைத்து கொடுத்தார் அதே பிற வேலிவழியாக அந்த சோற்றைக் கொண்டு வந்து சேர நால்வரும் வட்டமிட்டனர். அவள் கறிகளை தனியாக பிரித்து மீதியை குழைத்து வயிறார அனைவருக்கும் கொடுத்து தானும் உண்டபின் படுத்தாள். ஊருக்குள் போயிருந்த செண்பகாவும் மிதுலாவும் வந்த மீதமுள்ளதை சாப்பிட்டனர். அதன்பிறகு ஐந்து பேருக்கும் சென்றி போட்டபின், உறங்கினர். முதல் சென்றி மிதுலா ரைபிளை எடுத்துக்கொண்டு வாசலில் அமர்ந்தாள். காலையில் வோக்கி அலறியது. தாரணி போய் எடுத்தாள். வோக்கியில் வந்த செய்தி எல்லோருடைய தூக்கத்தையும் தூக்கிப் போட்டது.

"ஐயோ பாரதி அக்கா," மிதுலா கண்கலங்கி அழுதாள்.

"டீ வாய மூடு அது கிளைம் பண்ணேல்லயாம் ஒருத்தருக்கும் வெளிவிட வேண்டாம் எண்டு சொல்லியிருக்கினம் சில வேளை செய்தி பொய்யாவும் இருக்கலாம்."தாரணி அதட்டினாள்.

"அட கூடப்போனது குவேனி அப்படி ஒண்டும் நடந்திருக்காது. எங்கயும் தங்கியிருப்பினம் வருவினம்" என்றாள் லெச்சிமி. ஆனாலும் அவளுக்கு உள்மனதில் நம்பிக்கை இல்லை. மன்னார் மாவட்டத்தின் தரைத்தோற்றம் அப்படி மன்னார் யாழ்ப்பாணம் வீதியை அவர்கள் கடக்க வேண்டிய தேவை இருக்கவில்லை. அப்படி அவர்கள் கடந்திருந்தாலும் இராணுவ நிலைகளுக்கு முன்னராக பொடியளின்ர சென்றியோ கட்டவுட்டோ இருக்கும். அதையும் கடந்தால் பிழக்கமில்லாத பாதை தெளிவாக புரியுமே. அந்த வழியில் போக எந்தவகையிலும் சந்தர்ப்பம் இல்லை என்றே நினைத்தாள். அவளுடைய வனப்பாதைகளின் இலக்கணம் போனவர்களுக்கு தெரிந்திருக்க நியாயமில்லை. இதுதான் பாதை என அழைத்துச் சென்றவளும் தகுதியானவள்தாள். ஆனால் அவர்கள் தற்கொலைத் தாக்குதல் போல குபீரென இராணுவ வலயத்துள் நுழைந்துவிட்டனர். பிடிபட்டுவிட்டார்களா? குப்பி கடித்தார்களா? சுட்டானா? எதுவும் தெரியவில்லை. பாரதி குவேனி இருவரின் அத்தியாயமும் முடிந்தது. நெல்லியடி மாலிச்சந்தியின் அருகே ஒரேயொரு மகளைப் பெற்று அவளையும் போருக்கு போகவிட்ட வயோதிபப் பெற்றாருக்கு செய்தி இப்போது சொல்லப்படவில்லை. குவேனியின் பெற்றார் முழங்காவில்லில் இருந்தனர்.

லெச்சிமி வீட்டிற்குப்போனாள். மாமி சமைத்து வைத்திருந்ததை சாப்பிட்டுவிட்டுப்படுத்தாள். "தம்பி கோவாலை போய்ப்பாத்தியா எள்ளுக்காசு என்னவாம்" என்றாள்.

அவன் சலிப்பாக "நா…பார்த்திட்டு என்ன செய்யிற அவனட்ட நீங்கள் ஒரு ரூவாக்காசெண்டாலும்

வாங்கிப்போட்டா நான் குடிக்கிறதை விட்டிடுறன்" எண்டு ராயேந்திரமண்ணை சொல்லுறார். "அவன் கள்ளன் தானாம் மனிசி அவனுக்கு மேலயாம்" என்றான். லெச்சிமிக்கு வேதனையாக இருந்தது. விளைந்த பொருளில் எங்களுடைய சாப்பாட்டிற்காகக்கூட கொஞ்சமும் வைக்காமல் கொடுத்து ஏமாந்து போனது வருத்தமாக இருந்தது.

காலையில் சுதன் கிளியன் வீட்டுக்குப் போனவன் ஒரு பானையில் பாலும் மூன்று யப்பான் மீனும் கொண்டு வந்தான். அதை மேலே கட்டிய உறியில் வைத்துவிட்டு தண்ணீர் அள்ளுவதற்காக அவள் பின்னுள்ள காணிக்கு போனாள். சுதனும் பின்னாலேயே வந்தவன் திடீரென வேலிப்பக்கமாக ஓடியபடியே "அம்மா ஓடிவா" என்று கத்தினான். அவனுடைய கையில் பாடிக்கொண்டிருந்த யுனிக் ரேடியோப்பெட்டியை கைதவறிக்கீழே போட்டான். அது அவளது காலடியில் விழ அதிலிருந்து சிங்கள மொழியில் இராணுவத்தின் கட்டளைகள் வந்துகொண்டிருந்தது. அவள் ரேடியோவை அணைத்தபடி ஓடி அவன் குப்புறப் படுத்திருந்த வேலி நிழலில் அவனுக்கு பின்னால் மண்டியிட்டாள். இராணுவத்தினரின் உரையாடல்களை எவ்வம் அலைவரிசைகள் வானொலி ஊடாக கொடுப்பதும் அதை மக்கள் வேடிக்கையாக ரசிப்பதும் உண்டு. அவர்களிருந்த எல்லைக்கிராமம். அவர்களது உரையாடல் தற்செயலாகத்தான் சுதனால் செவிமடுக்கப்பட்டது. "அடிக்கப் போறான்" என அவன் சொல்லி வாய் மூடுமுன் படபட வென வானில் எழுந்த உலங்குவானூர்தியிலிருந்து படபட படவென பீகே ரவைகள் அவர்களிருந்த பகுதியில் தொடர்ச்சியாக விழுந்தது. லெச்சிமி எட்டி சுதன் மறைவாக இருக்கிறானா எனப்பார்க்க லேசாக தலையைத் தூக்க, அவர்கள் இருவருக்கும் நடுவே ஒரு விடலைப் பருவத்து கண்ணாடிவிரியன் அமைதியாக படுத்திருந்தது. கண்ணில் பட்டது. அவளால் அசைய முடியவில்லை. "சுதன் மறந்து போயும் காலை நீட்டாதை உன்ர காலுக்கு நேர இயமன்" என்றாள். ஒரு பத்து பதினைந்து நிமிடங்களின்பின், உலங்கு வானூர்தி போய்விட்டது. அவர்கள் போய் தண்ணீர் அள்ளிக் கொண்டுவந்துவிட்ட சமையலைத் தொடங்க, வீதியில் போராளிகள் வரிசையாக பூவரசன்குளம் நோக்கி போய்க்கொண்டிருந்தார்கள். சுதன் தாயின் அருகே இருந்த பாதி வைக்கப்பட்ட மண்குந்தில் வந்து இருந்தான். "என்னடா தேத்தண்ணி ஊத்தவே" என்றாள் லெச்சிமி.

"அவங்கள் பொடியளை இலக்குவச்சுத்தான் அடிச்சிருக்கிறாங்கள்போல இவங்கள் வெலங்குளம் பத்தைக்க கிடந்திட்டுப் போறாங்கள்" என்றான்.

"ஆரோ தகவல் சொல்ல இருக்கிறாங்கள்தானே" என்றாள் லெச்சிமி.

"அம்மா நான் ஒண்டு சொல்லுவன் நீ மறுக்க கூடாது" என்றான்.

"என்னடா சொல்லு விசயத்தை பார்த்து முடிவு சொல்லுறன்." என்றாள்

"இல்லையம்மா... நீ... சிவா இயக்கத்துக்கு போனதுக்கு என்ன சொன்ன நீ..." லெச்சிமி திரும்பி அவனைப்பார்த்தாள் "போனா பரவாயில்ல என்னட்ட சொல்லீற்று போயிருக்கலாம் எண்டு சொன்னா யெல்லோ"

"ஓம் அதுக்கென்ன இப்ப"

"வந்து நானும் இயக்கத்துக்கு போகப்போறன் தனிய இருந்து என்ன செய்யிற இனிப்பார் இவள பெடியள் போறாங்கள் அவங்கட பாதுகாப்பிலதான நாங்களும் இருக்கிறம். இண்டைக்கே பாரன் படுத்திருந்த பாம்பு எட்டிக் கொத்தியிருந்தா அல்லது ஒரு பீகே பட்டிருந்தா ...நான் போகட்டா." அவளது மார்புக் காம்புகள் சுரீரென வலித்தது.

(தொடரும்)

# பல்கலையில் வேர்பதித்த பட்டலந்தைகள்...!

பல்கலைக் கழகங்கள்
பட்டலந்தை வதை முகாம்களாக!
மெத்தப் படிக்கும் படிப்புக் கூடங்களுக்குள் சில
பித்துப்பிடித்த வேடிக்கைப்
பிசாசுகள்...!

எத்தனை கனவுகள்
எத்தனை எதிர்பார்ப்புகள்
எத்தனையெத்தனை துன்ப துயரங்களை
ஏந்திவந்த மனசுகள்
வக்கிரங்களின் பிடியில் சிக்கி
அவ்வப்போது தீக்குளிக்கின்றன..!

அட....நீயா...நீங்களா
வளரும் சமுதாயத்தின் வழிகாட்டிகள்
சொல்லவே வெட்கமடா...
எலியின் உயிர் துடிப்பை
அதுபடும் வேதனையை
கண்டுகளித்து சிரித்து மகிழும்
கொடும் பூனை மனசுகளா
நாளைய தலைவர்கள்?

காலாகாலமாக கடத்தப்படும்
பகிடிவதைக் கலாசாரம்
உயிர்களைக் குடித்து
பயிர்களை மேயும் வரலாறுகள்
துடைத்தழிக்க முடியா
தொடர்கதையாவதை
தடுத்து நிறுத்த சட்டங்கள் ஏன்
சரியாகப்பாயாமல் இன்னுமின்னும்
இரசித்து மகிழ்வது
எத்தனை தலைமுறைகளுக்கு...?

"இதுபோல் ஒரு கொடுமை
இனியும் நடக்கக் கூடாது"
என்ற பல்லவிகள் உரத்து ஒலிக்கும்...
ஒலித்த வேகத்தில் அது ஓய்ந்துபோக..
மீண்டும் மீண்டுமாய்
மனித மிருகங்கள் முகங்காட்டி
பல்லிளித்து வதை செய்து
எக்காளமிடும் ஈனச்செயல்களுக்கு
முற்றுப்புள்ளி வேண்டும்... தொடர்ந்தால்... மக்கள்
இவர்களை
கம்பத்தில் கட்டி
பாடம் புகட்டலாம்....
காலந்தான் பதில் சொல்லும்...!

**ஷெல்லிதாசன்**

( பகிடிவதை அவமானத்தால் உயிர்துறந்த சப்பிரகமுவ மாணவனுக்கு சமர்ப்பணம்)




இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாமணி பரணீதரன் அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.